# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

2465



கமலாம்பாள்
காயாரோகண ஈசுவரர் கோயில், காஞ்சிபுரம்.

மாலை 10] பிலவங்க - புரட்டாசி - அக்டோபர், 1967 [மணி 1

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு



நமது அறநிலைய ஆணையர் திரு. ஆ. இராதாகிருஷ்ணன், M.A., B.L. அவர்கள், திருவானைக்கா ஜம்புகேசுவரர் கோயிலில், பரிவட்டம் கட்டி வரவேற்கப் பெறுதல். *(18—9—67)*

## பொருளடக்கம்


1. சக்தி வழிபாடு
2. சகல கலாவல்லி மாலை (முன்னுரை)
3. சகல கலாவல்லி மாலை (உரை விளக்கம்)
4. ஸ்ரீ நடராச வடிவ நலன்
5. திருக்குறளும் சைவ சித்தாந்தமும்
6. மனத்தூய்மை
7. ஞான சித்தர்களும் சித்த மருந்தும்
8. ஸ்ரீவைஷ்ணவ குரு பரம்பரை
9. சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கைகள்
10. விளக்கு
11. பிட்சாடனர்
12. அமுதனாரும் அந்தாதியும்
13. தெய்விகத் தீங்கவிஞர்


155883

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/- தனி இதழ் விலை ரூ. ஒன்று

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

PUBLIC LIBRARY
155883
ஒ5ணவ11, N58
31K7


# திருக்கோயில்


திங்கள் வெளியீடு

மாலை 10] பிலவங்க - புரட்டாசி - அக்டோபர், 1967 [மணி 1


## சக்தி வழிபாடு

**முன்னுரை :**

சக்தி வழிபாடு, மிகத் தொன்னெடுங் காலம் முதலே நம் இந்திய நாட்டில் இனிது நிகழ்ந்து வருகின்றது. மொகஞ்சோதாரோ என்னும் இடத்தில் நிகழ்த்தப் பெற்ற அகழ்வாராய்ச்சிகளிற் கிடைத்த பல பொருள்களில், அம்பிகை ஆகிய உலக அன்னே யின் மண்சிலேகள் பலவும்கூட உள்ளன. ஆராய்ச்சியாளர்களின் கருத்தின்படி, சிந்து வெளி நாகரிக காலம் ஏறத்தாழக் கி. மு. 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று புலனுதலின், சக்தி வழிபாடு அதற்கும் முன்னரே நிலவி வந்த பழமை யுடையது என்பது தெளிவாம்.



சிந்து வெளிப் பகுதியிற் கிடைத்த அம்பிகையின் சிலேகளேப் போலவே, பாரசீகம் ஏஜியன் எலம் மெசபட்டோமியா டிரான்ஸ்காஸ்பியா துருக்கி சிரியா பாலஸ்தீனம் சைப்ரஸ் கிரீட் பால்கன் எகிப்து முதலிய பல்வேறு நாடுகளிற் கிடைத்த சிலேகளும் இருப்பதனல், அம்பிகை வழிபாடு மிகப் பழங்காலத்திலேயே பல நாடுகளிலும் தொன்று தொட்டே பரவியிருத்தல் வேண்டும் என்று, சர்ஜான் மார்ஷல் என்னும் பேரறிஞர் ஆராய்ந்து கூறுகின்ருர்.

**பல நாடுகளில் :**

சக்தி வழிபாடு, நம் இந்திய நாட்டில் மட்டுமேயன்றி, உலகின் பல பகுதிகளிலும் பரவி யிருந்தது எனத் தெரிகின்றது. நாகரிக மேம்பாட்டில் மிகவும் சிறப்பும் பழமையும் மிக்குத் திகழ்ந்திருந்த எகிப்து நாட்டு மக்கள், முழுமுதற் கடவுளே ஓஸைரிஸ் (Osiris) என்னும் தந்தையாகவும், ஐஸிஸ் (Isis) என்னும் தாயாகவும் வழிபட்டு வந்தனர்.

எகிப்து நாட்டு மக்களேப் போலவே நாகரிகச் சிறப்புடன் திகழ்ந்திருந்த பாபிலோனிய மக்கள், எல்லாம் வல்ல

இறைவனை ஏ (Ea) எனத் தந்தையாகவும், தவ்கினா (Davkina) எனத் தாயாகவும் வைத்துப் போற்றி வணங்கி வந்தனர்.

சாலடியர் என்னும் பழம் பெரும் நாகரிக மக்கட் தொகுதியினரும், ஊர் (Ur) என்னும் தம்முடைய தலைநகரில் தாம் எழுப்பிய மாபெருங் கடவுளை ஸமஸ் (Samas) எனப் பெயரிய அப்பன் ஆகவும், இஸ்தர் (Istar) எனப் பெயரிய அன்னையாகவும் அமைத்து வழிபாடு செய்து போந்தனர்.

சுமேரிய நாட்டு மக்கள் நம்மைப் போலவே, அன்னை அல்லது சக்தி வழிபாடு உடையவர்களாக விளங்கியிருந்தனர். சுமேரிய நாகரிகம், எகிப்திய நாகரிகத்திற்கும் காலத்தால் மிகப் பழமையானது. தொன்மை மிகவும் வாய்ந்த சுமேரிய நாட்டு மக்களுக்கும், இந்தியச் சிந்து வெளி மக்களுக்கும் இடையே நிலவிவந்த சக்தி வழிபாட்டிற் பலதிற ஒப்புமைப் பண்புகள் இருந்தமை புலனாகின்றது.

**சக்தி வழிபாடு :**

சிலர் கடவுட் பெரும் பொருளை 'அது' என்று சுட்டுகின்றனர். மற்றும் சிலர் 'அவன்' எனக் குறிப்பிடுகின்றனர். 'அது' என்று சுட்டினால் கடவுள் அஃறிணைப் பொருள் என முடியும். 'அவன்' என்றாலோ, கடவுள் ஆணாக மட்டுமே இருப்பதாகக் கொள்ளப்படும். கடவுள் எல்லாமாயும் அல்லவாயும் நிற்கும் இயல்புடையவர் ஆதலின், அவரை நாம் "அவன் அவள் அது" என மூன்று நிலைகளிலும் குறிப்பிடுதல் பொருந்தும். இறை நிலையை 'அவள்' எனத் தக்கவாறு கொண்டு வழிபடும் முறையே சக்தி வழிபாடு ஆகும்.

**சமுதாய வாழ்வு :**

கடவுட் பெரும் பொருளைப் பெண்ணாக, பெண் வடிவத்தில் வைத்துப் போற்றுதலையே, நாம் சக்தி வழிபாடு என்கின்றோம். சமுதாய வாழ்விலும், குடும்ப வாழ்விலும் பண்டைக் காலம் முதலே இந்தியப் பெண்மணிகள் சிறப்பிடம் பெற்றிருந்தனர். தாயாகவும், மகளாகவும், சகோதரியாகவும், மனைவியாகவும், உலகியல் வாழ்விற் பெண்கள் பல்வேறு நிலைகளிற் சிறப்புற்றுத் திகழ்ந்து வருகின்றனர். ஒரு பெண்ணின் சிறப்பும் கடமையும் பொறுப்பும், குடும்ப வாழ்விற் படிப்படியே வளர்ந்தோங்குகின்றன.

பெண்மை நலங்கள் அனைத்தும் தாய்மை நிலையிலேயே சிறந்தோங்கி ஒளிவீசித் திகழ்கின்றன. அன்பும் அருளும் பரிவும் இரக்கமும் தூய்மையும் மென்மையும் தியாகமும் ஆகிய சிறந்த தெய்விகப் பண்புகள் அனைத்தும் தாயிடமே ஒருங்கே அமைந்து நிலவுகின்றன. தாய்மையின் சிறப்பனைத்தும் தகவுணர்ந்தே, நம் முன்னைச் சான்றோர்கள் கடவுளைத் தாயாக வழிபட்டு வரலாயினர். பெண்ணினத்தின் எண்ணரிய பெருஞ் சிறப்புக்களை யெல்லாம் இனிதுணர்ந்து போற்றிய சமுதாய வாழ்வின் விளைவே, சக்தி வழிபாடு எனலாம்.

அன்னை **மரியாள்** சிறப்பைப் புகழ்ந்து கொண்டாடுவதன் மூலம் கிறித்தவ சமயமும், **தாராதேவியின்** புகழைப் போற்றுவதன் மூலம் பௌத்த சமயமும் கூட, ஒருவகையில் தாய்மைத் தெய்வத்தின் தன் நிகரற்ற மாட்சிமையினை உடன்பட்டுத் தழுவிக் கொண்டுள்ளன எனப் பேரறிஞர் **திரு. எஸ். இராதா கிருஷ்ணன்** அவர்கள் குறிப்பிடுகின்றார்.

**தாயின் பரிவு :**

சக்தியை உலகுயிர்களுக்குத் தாயாகச் சமய நூல்கள் போற்றுகின்றன. தாய் தன் குழந்தைகள் செய்யும் தவறுகளை யெல்லாம் மன்னித்து, அன்பு செலுத்திப் பரிவு காட்டி நலஞ் செய்கின்றாள். அவ்வாறே சக்தியாகிய தேவியும் உலகுயிர்கள் இயற்றும் பிழைகளை யெல்லாம் பொறுத்து அருள் புரிகின்றாள்.

தந்தை தன் பிள்ளைகள்பாற் சினங் கொள்ள நேர்ந்தவழி, தாய் பிள்ளைகளின் சார்பிற் பரிந்துரையாடித் தந்தையின் சினத்தைப் போக்கி நன்மை புரிகின்றாள்.

ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை
மீதுன் அருகிருந்து,
நீமுத்தம் தாஎன் றவா கொஞ்சும்
வேளையில், நித்தநித்தம்

வேய்முத்த ரோடென் குறைகள்
எல்லாம் மெல்லமெல்லச் சொன்னால்,
வாய்முத்தம் சிந்தி விடுமோ?
நெல்வேலி வடிவம்மையே!

எனக் கவிஞர் ஒருவர் கவினுறப் பாடுவது போல, இறைவனாகிய தந்தை உலகுயிர்கள் ஆகிய மக்கள் செய்யும் தீவினைகளுக்காகச் சினங்கொண்டு ஒறுத் தொழிக்காத படி, தாயாகிய அம்பிகையே தன் பெருங் கருணையாற் பரிந்துரை கூறித் தடுத்துக் காப்பாற்றி யருள்கின்றாள்.

**தென்னகத்தின் பண்பாடு :**

உலகுயிர்களின் உய்தி கருதி, இறைவனின் திருவருள் செயற்படும் இவ்வியல்பினைத் தாயின் தண்ணளியோடு ஒப்பிட்டு, ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமது செந்தமிழ்த் தெய்விகப் பாடல்களிற் சிறந்தெடுத்துப் பாடிப் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

சிவபிரானுக்கு உமையம்மையையும், திருமாலுக்குத் திருமகளையும், சக்தியாக வைத்துத் தாய்மைத் தெய்வத்தைப் போற்றும் வழிபாட்டு முறை, முதன்முதலில் தென்னிந்தியாவிலேயே தோன்றிய தென்றும், இது தென்னகத்தின் சிறப்பியற் பண்பாடு என்றும், ஆராய்ச்சிப் பேரறிஞர் திரு. சுநீதி குமார சாட்டர்ஜி அவர்கள் குறிப்பிடுதல், ஈண்டு நாம் உணர்ந்து இன்புறுதற்குரியது.

**இளங்கோவடிகள் :**

தமிழ் நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சக்தி அல்லது தேவி வழிபாடு சிறப்புற நிகழ்ந்து வந்தது. பாலைத் திணைக்குரிய தெய்வமாகத் துர்க்கை (கொற்றவை) போற்றப் பெற்றாள். சிலப்பதிகாரத்தில் "வேட்டுவ வரி" என்னும் பகுதியில், இளங்கோவடிகள் சக்தி வழிபாட்டின் இயல்பையும், அதன் சிறப்பையும் அழகுறப் பாடியருளியுள்ளார். சக்தி வழிபாடு சிவ வழிபாட்டோடு தொடர்புடையதாகலின், சிவ பெருமானுக்கு உரிய நெற்றிக் கண்-நீல கண்டம் - மேரு மலையாகிய வில்லை வளைத்தல் - சூலம் ஏந்துதல் - யானையின் தோல் போர்த்தல் முதலிய பண்புகளை அம்பிகைக்கும் உரியனவாக வைத்து,

'நுதல்கிழித்து விழித்த இமையா நாட்டம்'
'நஞ்சுண்டு கறுத்த கண்டி'
'அரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்'
'வளையுடைக் கையிற் சூலம் ஏந்தி'
'கரியின் உரிவை போர்த்த அணங்கு'

என்றெல்லாம் இளங்கோவடிகள் சக்தியைக் குறித்துப் பாடுகின்றார். மேலும் 'அமரி-குமரி-கவுரி - சமரி-சூலி-நீலி - மாலவற்கு இளங்கிளை (தங்கை)-ஐயை-செய்யவள்-வெய்யாள் - தடக்கைப் பாய்கலைப் பாவை-பைங் கொடிப்பாவை - ஆய்கலைப் பாவை-அருங்கலைப் பாவை - தமர்தொழ வந்த குமரி' என்றும், பலவகைகளில் தேவியின் சிறப்பைச் சிலப்பதிகாரம் போற்றுகின்றது.

**சிலப்பதிகாரம் :**

செந்தமிழ்ப் பெருங் காப்பியம் ஆகிய சிலப்பதிகாரம் என்னும் சிறந்த பெரு நூலில், சக்தி வழிபாடு பற்றிய பலதிறக் குறிப்புக்கள் அமைந்திருக்கக் காண்கின்றோம். கூடல் மாநகரிற் கோவலன் கொலையுண்டு மடிகின்றான். கணவன் கொலையுண்ட செய்தி அறிந்த கண்ணகி பெரிதும் வருந்துகின்றாள். பாண்டிய வேந்தனைக் கண்டு, தன் கணவன் 'கள்வன் அல்லன்' என்று மறுத்துரைத்துத் தெளிவுறுத்த விரும்புகின்றாள். பாண்டியனின் அரண்மனை நோக்கிச் செல்கின்றாள். அங்கிருந்த வாயில் காவலனை விளித்து, அரசனுக்குத் தன் வருகைபற்றி அறிவிக்குமாறு பணிக்கின்றாள். அவள் அவளது தோற்றமும் சீற்றமும் கண்டு அஞ்சி நடுங்கி ஓடோடிச் சென்று, அரசனுக்குக் கண்ணகியின் வருகைபற்றித் தெரிவிக்கின்றான். அப் பகுதியில்,

"அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை யல்லள்!
அறுவர்க்கு இளைய நங்கை! இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு! சூருடைக்
கானகம் உகந்த காளி! தாருகன்
பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள்!
செற்றனள் போலும் செயிர்த்தனள்
போலும்!"

எனவரும் வரிகளால், சக்தியின் வெவ்வேறு திறக் கூறுகள் ஆகிய **கொற்றவை, பிடாரி, பத்திரகாளி, காளி, துர்க்கை**

என்பன சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப் பெற்றிருத்தல் காணலாம்.

**நவராத்திரி :**

நவராத்திரி என்பது, சக்தி வழிபாடு குறித்துச் சிறப்புறக் கொண்டாடப்பெறும் விழாவாகும். ஒவ்வோர் ஆண்டும் புரட்டாசி மாதத்தில், வளர்பிறைப் பிரதமை முதல் நவமி வரை, ஒன்பது நாட்கள் கொண்டாடப் படுதலினால், இது நவராத்திரி என வழங்கப் பெறும். பத்தாம் நாள் ஆகிய விஜயதசமியையும் விழா நாளாகச் சேர்த்துக் , கணக்கிட்டுத் தசரா என்றும், இவ்விழாவைக் குறிப்பிடுவது உண்டு. உலகத்தைத் துன்புறுத்தி வந்த மகிஷாசுரன் என்னும் கொடிய அரக்கனை எதிர்த்து ஒன்பது நாட்கள் போரிட்டு, தசமி ஆகிய பத்தாம் நாளில், அம்பிகை அவனை அழித்து வெற்றி கொண்டனள் ஆதலின், அந் நாளை விஜயதசமி எனச் சிறப்பித்து வழங்குவர். மகிஷாசுரனை வென்று கொன்ற அம்பிகையினைத் துர்க்கை என்றும், கொற்றவை என்றும் நூல்கள் புகழ்ந்து கூறும்.

சிலப்பதிகாரத்தில் 'வேட்டுவ வரி' என்னும் பகுதியில், மகிஷாசுரன் என்னும் எருமைத் தலை அரக்கனை அழித்து, வெற்றி கொண்ட கொற்றவை ஆகிய துர்க்கையினைப் பற்றிய பல குறிப்புக் களும் பாடல்களும் காணப்படுகின்றன.

**மகிஷாசுர மர்த்தனி :**

துர்க்கை என்னும் கொற்றவை யானவள், தனது கணவராகிய சிவ பெருமானைப்போல, ஆனைத் தோலைப் போர்த்துக் கொண்டும், புலியின் தோலை உடையாக அணிந்து கொண்டும், மகிஷாசுரன் ஆகிய எருமை அரக்கனின் தலையினை மிதித்துக் கொண்டு, தேவர்கள் எல்லாரும் வணங்கும்படி, மறை நூல்களுக் கெல்லாமும் மறை பொருளாகி, ஞானக் கொழுந்தாகக் காட்சி தருகின்றாள்.

ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத்து எருமைக் கருந்தலைமேல் நின்றாயால்!
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்!

வளையல்களை அணிந்த கையில் வாளை ஏந்திக் கொண்டு, வலிமை மிக்க மகிஷாசுரனை அடக்கி வென்று, கலைமானை ஊர்தியாக ஏற்று, மும் மூர்த்திகளும் தங்கள் இதய கமலத்தில் தியானித்து வணங்கி வழிபடும் அருட்பெருஞ்சோதி விளக்காக, அம்பிகை விளங்குகின்றாள்.

வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்
கரியதிரி கோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால்!
அரியரன்பூ மேலோன் அகமலர்மேல் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகி யேநிற்பாய்!

திருமாலுக்குரிய சங்கினையும் சக்கரத் தையும் தாமரை மலர் போன்ற திருக்கை களிலே ஏந்திக் கொண்டு, சிவந்த கண் களையுடைய சிங்கம் ஆகிய ஊர்தியின் மீது, கங்காதரனும் நெற்றிக் கண்ணனும் ஆகிய சிவபெருமானின் இடப்பாகத்தில், அர்த்தநாரீசுவரியாகத் தேவி அருட்காட்சி வழங்கியருள்கின்றாள்.

சங்கமும் சக்கரமுந் தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்றாயால்!
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை யுருவாய் மறையேத்த வேநிற்பாய்!

—சிலப்பதிகாரம்

**முடிவுரை :**

இவ்வாற்றானெல்லாம் தேவி வழிபாடு, தமிழகத்தில் மிகப் பழங்காலம் தொட்டே சிறப்புற நிகழ்ந்து வந்தமை தெளியலாம்.

தனம்தரும்; கல்வி தரும்; ஒரு
நாளும் தளர்வறியா
மனம்தரும்; தெய்வ வடிவும்
தரும்; நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும்; நல்லன எல்லாம்
தரும்; அன்பர் என்பவர்க்கே
கனம்தரும்; பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே.

என அபிராமி பட்டர், தமது அபிராமி அந்தாதி என்னும் நூலில் பாடியருளிய வாறு போல, உலக அன்னையாகிய பராசக்தியைப் பரவி வழிபட்டால், நாம் எல்லா வகையான நலங்களையும் பெற்று உய்யலாம் என்பது திண்ணம். நவராத்திரி விழா நிகழும் நாட்களில், நாமனைவரும் அம்பிகையைப் போற்றி, அவள் அருளைப் பெற்று நலமுற வாழ முயலுவோமாக!

—ஆசிரியர்

# சகல கலாவல்லி மாலை

## (முன்னுரையும் உரை விளக்கமும்)

"சகல கலாவல்லி மாலை" என்பது, கலைகளுக் கெல்லாம் தெய்வம் ஆகிய சரசுவதி தேவியைப் பற்றிய துதி நூல்களுள், தலைசிறந்த தொன்ருய்த் தமிழ் மொழிக் கண் விளங்குவதாகும். இதனைப் பாடி யருளியவர், குமர குருபர சுவாமிகள் என்னும் ஞானத் தவமுனிவராவார்.

குமர குருபரர், திருநெல்வேலி மாவட்டத்தில், ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரின் வடபாலிலுள்ள ஸ்ரீகைலாசம் என்னும் தலத்தில், சைவ வேளாளர் குலத்தில் தோன்றி யருளியவர். இவர்தம் தந்தையார் சண்முக சிகாமணி கவிராயர். தாயார் சிவகாம சுந்தரி அம்மையார். இவர் இளமையில் ஐந்து ஆண்டுகள் வரையில் பேச்சின்றி ஊமை போல இருந்து வந்தார். அது கண்டு வருந்திய பெற்ருேர்கள், இவரைத் திருச்செந் தூருக்கு எடுத்துச் சென்று, செந்திலாண்டவர் சந்நிதியில் வளர்த்தி விட்டுத் தாமும் பாடு கிடந்தனர். செந்தில் முருகன் திருவருளால், குமர குருபரர் பேசும் ஆற்றல் பெற்ருர். கல்வி நலனும், புலமை நலனும், கவிதைத் திறனும் கைவரப் பெற்ருர். அதன் பயனுகச் செந்திற் பெருமான் மீது "கந்தர் கலிவெண்பா' என்னும் நூலைப் பாடி யருளினுர். இவர் பாடியருளிய நூல்களுள் முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ், மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ், சிதம்பரச் செய்யுட் கோவை, நீதிநெறி விளக்கம் முதலிய பல நூல்கள் குறிப்பிடத் தக்கவை.

குமர குருபர சுவாமிகள், காசியிற் சென்று சில காலம் தங்கி வதிந்து வந்தார். அதுபோது டில்லி மாநகரை ஆண்டுவந்த முகம்மதிய அரசரைக்கண்டு நெருங்கிப் பழகி, அவர் வாயிலாகச் சில உதவிகள் பெற விரும்பினுர். ஆதலின் அவ்வரசரின் மொழியில் புலமை பெறவேண்டும் எனக் கருதினுர். அக்கருத்து நிறைவேறுதற் பொருட்டுக் கலைமகளைக் குறித்துச் 'சகல கலா வல்லி மாலை' என்னும் இத்துதி நூலைப் பாடினுர். கலைமகளின் திருவருளால், டில்லி அரசரின் மொழியில் நல்ல புலமை பெற்ருர். இவர்தம் புலமை நலனையும், தவ ஆற்றலையும் கண்டு வியந்து மகிழ்ந்த அம் முகம்மதிய அரசர், குமரகுருபர முனிவர் காசியில் இருந்து தவம் புரிந்து வதிதற்கு உரிய திருமடம் அமைப்பதன் பொருட்டுக் கேதார கட்டத்தில் இடம் உதவினுர். அவ் விடத்தில் அமைந்த திருமடமே, இன்றும் குமார சுவாமி மடம் என வழங்கிச் சிறந்து விளங்கி வருகின்றது.

இவ்வாற்ருல், குமர குருபரர் அருளிய 'சகல கலாவல்லி மாலை'யின் வரலாற்றை யும் சிறப்பையும் நாம் அனைவரும் நன்கினிது உணரலாம். நவராத்திரி விழா நாளில், இச்சகல கலாவல்லி மாலையை, நம்மனேர் அனைவரும் பயின்று பாராயணம் செய்து நலமடைய முயல்வோமாக !

—ஆசிரியர்

**தகாது கொலோ ?**

**வெண் தாமரைக்கு அன்றி நின்பதம்**
**தாங்க என் வெள்ளைஉள்ளத்**
**தண் தாமரைக்குத்** தகாது கொலோ?
சகம் ஏழும் **அளித்து**
**உண்டான் உறங்க, ஒழித்தான் பித்து**
**ஆக, உண்டாக்கும் வண்ணம்**
**கண்டான் சுவைகொள் கரும்பே!**
**சகல கலா வல்லியே!**

(பொழிப்புரை) உலகங்கள் ஏழினையும் பாதுகாத்து உண்டவனாகிய திருமால், திருப்பாற்கடலில் பள்ளி கொண்டு உறங்குதலைச் செய்யவும்; அவற்றை யெல்லாம் அழித்து ஒடுக்குபவனாகிய உருத்திரன் பித்தனாகத் திரியவும்; மீண்டும் அவற்றை யெல்லாம் படைத்து உண்டாக்கும் முறைமையை உணர்ந்தவனாகிய பிரமதேவன் சுவைத்து நுகர்கின்ற கரும்பாகத் திகழ்கின்றவளே! எல்லாக் கலைகளுக்கும் உரிய தெய்வமாக விளங்கும் கலைமகளே! வெண் தாமரை மலருக்கு அல்லாமல், நின்னுடைய திருவடிகளைத் தாங்குவதற்கு, என்னுடைய வெள்ளை உள்ளமாகிய தண் தாமரைக்குத் தகுதி யில்லையோ ?

(குறிப்புரை) எல்லாக் கலைகளுக்கும் உரிய சிறப்புத் தெய்வமாதலின் கலைமகள் ஆகிய சரசுவதியைச் 'சகல கலா வல்லி' என்றார். சகலம்-எல்லாம். கலா-கலை. வல்லி. கொடி, பெண்; வல்லவள் எனினும் ஆம்.

சகம்-உலகம். சகம் ஏழும் உண்டான்-திருமால். 'ஏழு' என்றது ஒரு பேரெண்ணைக் குறித்தது. உம்மை முற்றும்மை. திருமால் உலகத்தைக் காப்பவர். அவர், ஒரு சமயம் உலகங்களை எல்லாம் உண்டு வயிற்றில் அடக்கிக் காப்பாற்றி, அவற்றை யசோதைப் பிராட்டிக்குக் காட்டினார் என்பது வரலாறு. திருமால் திருப்பாற் கடலில் பள்ளி கொண்டிருப்பவர். ஆதலின் 'சகம் ஏழும் அளித்து உண்டான் உறங்க' என்றார். அளிக்க உண்டான் என்பது, அளித்து உண்டான் என வந்தது; செயவென் எச்சத் திரிபு.

உலகத்தை ஒடுக்குபவர் உருத்திரர். அவர் சிவபிரானின் ஒருகூறு எனத் தக்கவர். அடியவர்களிடத்து எல்லையற்ற பேரன்பும் பரிவும் உடையவராதலின், சிவ பிரானுக்குப் 'பித்தன்' என ஒரு பெயர் வழங்கும். சிவபிரானின் கூறுதல் பற்றி உருத் திரருக்கும் பித்தாதற் றன்மையை ஏற்றி 'ஒழித்தான் பித்துஆக' என உரைக்கப் பட்டது.

உருத்திரர் உயிர்களின் கரும மலம் பரிபாகம் ஆதற் பொருட்டு ஒடுக்கிய உல கத்தை, உயிர்களின் ஆணவ மலம் பரிபாகம் ஆதற் பொருட்டுப் பிரமதேவர் மீளவும் படைப்பார். ஆதலின் அவரை, 'உண்டாக்கும் வண்ணம் கண்டான்' என்று குறிப் பிட்டார்.

கணவனைப் புகழ்தல் மனைவிக்கு மகிழ்ச்சியும் உவகையும் பயக்கு மாதலின் திருமால் உறங்கவும், உருத்திரர் பித்தாகவும், உண்டாக்கும் வண்ணம் கண்டான் என்று, பிரமதேவரைக் குமர குருபரர் நயம் அமையத் திறம்படப் புகழ்ந்து கூறினர்.

வெண்தாமரை மலரில் வதிகின்ற நீ, என் உள்ளம் ஆகிய தண் தாமரையில் வந்து வதிதல் ஆகாதா? என இரந்து வேண்டுகின்றார். 'வெள்ளை உள்ளம்' என்றது இரட்டுற மொழிதல். மாசுமறுவற்றுக் கள்ளமும் சூதும் இன்றி வெள்ளை நிறமுடைய உள்ளம் என்றும், அறியாமை நிறைந்த உள்ளம் என்றும், பொருள்படும். (1)

**பாடும் பணி :**

> **நாடும் பொருட்சுவை சொற்சுவை**
> **தோய்ந்து, நாற்கவியும்**
> பாடும் பணியில் பணித்தருள்வாய்!
> **பங்கயா சனத்தில்**
> **கூடும் பசும்பொற் கொடியே!**
> **கன தனக் குன்றும், ஐம்பாற்**
> **காடும் சுமக்கும் கரும்பே!**
> **சகல கலா வல்லியே!**

(பொழிப்புரை) தாமரை மலர் ஆகிய ஆசனத்தில் வீற்றிருக்கின்ற, பசும பொன்னால் இயன்ற சிறந்த கொடியைப் போல்பவளே! பருத்த தனங்களாகிய குன்றுகளை யும், கூந்தலாகிய காட்டினையும் தூக்கிச் சுமக்கின்ற, கரும்பு போல்பவளே! சகல கலா வல்லியே! ஆராய்கின்ற பொருட் சுவையும் சொற்சுவையும் பொருந்தும்படி, ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்னும் நான்கு வகையான கவிகளையும் பாடுகின்ற தொண்டில் என்னை ஈடுபடுத்தி அருள்வாயாக!

(குறிப்புரை) பங்கயம்-தாமரை; பங்கஜம் என்னும் சொல்லின் திரிபு. பங்கம்-சேறு; ஜம்-தோன்றுவது. ஆசனம்-இருக்கை. கரும்பு குன்றையும் காட்டையும் சுமப்ப தாகக் கூறியது அதிசய அணி. ஐம்பால்-கூந்தல்; குழல் அளகம் கொண்டை பனிச்சை துஞ்சை என்னும் ஐந்து பகுப்பாக வகிர்ந்து முடிக்கப்படுதலின், கூந்தலுக்கு ஐம்பால் எனப் பெயர் அமைந்தது (சிங்: 2437).

நினைத்த மாத்திரத்தில் விரைந்து பாடுவது ஆசுகவி; கற்பவர் நெஞ்சம் களி துளும்பும்படி சொல்லும் பொருளும் கற்பனையும் இனிமை அமையும்படி பாடுவது மதுர கவி; மாலைமாற்று ஏகபாதம் கூடசதுக்கம் எழுகூற்றிருக்கை முரசபந்தம் நாகபந்தம் முதலிய பல்வேறு சித்திர அமைப்புக்கள் உடையதாகப் பாடுவது சித்திரகவி; ஏதேனும் ஒரு பொருளை மிக விரித்துக் காப்பியம் முதலியனவாகப் பாடுவது வித்தாரகவி. (2)

**என்று கூடுங் கொலோ :**

> **அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்அமிழ்து**
> **ஆர்ந்து உன் அருட்கடலில்**
> குளிக்கும் படிக்கு, என்று கூடும்கொலோ?
> **உளம் கொண்டு தெள்ளித்**

தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே!
சகல கலா வல்லியே!

(பொழிப்புரை) நுண்ணறிவு கொண்டு ஆராய்ந்து தெளிவுற விளக்குகின்ற நூல்களை இயற்றுகின்ற புலவர்கள், கவியாகிய மழை பொழிதலைக் கண்டு களிப்பு அடைகின்ற தோகையை உடைய மயிலே! சகல கலா வல்லியே! நின்னால் அருளப் பெறும் செழுமை மிகுந்த தமிழாகிய தெளிந்த அமிழ்தத்தை நிறைய உண்டு, நின்னு டைய அருளாகிய கடலில் குளித்துத் திளைக்கும்படியான சிறந்த பேறு, எளியேனுக்கு எப்போது வாய்க்குமோ?

(குறிப்புரை) கலாபம்-தோகை. சாயலும் மென்மையும் பற்றி மயிலாக உருவ கித்தார். மயில், மேகம் மழை பொழிதலைக் கண்டு களிக்கும் இயல்புடையது. அது போலக் கலைமகளாகிய மயில், புலவர்கள் பொழிகின்ற கவியாகிய மழையைக் கண்டு களிப்பதாகக் குறிப்பிட்ட பொருத்தம் அறிந்து மகிழ்தற்பாலது. (3)

**பணித்தருள்வாய் :**

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வியும், சொற்சுவைதோய்
வாக்கும், பெருகப் பணித்தருள்வாய்!
வடநூற் கடலும்,
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்,
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே!
சகல கலா வல்லியே!

(பொழிப்புரை) வடநூல்கள் ஆகிய கடலையும், தேக்கி நிறைகின்ற செழும் தமிழாகிய செல்வத்தையும், அடியார்களின் செம்மையான சிறந்த நாவில் வீற்றிருந்து காக்கின்ற கருணையை யுடைய கடலே! சகல கலா வல்லியே! ஆராய்கின்ற தமிழ் நூல்களின் அகப்பொருள் புறப்பொருள் துறைகளைப் பொருந்திய கல்வி அறிவும், சொற்சுவை மிகுந்த வாக்கு வன்மையையும், பெருகும்படி வழங்கி அருள்வாயாக!

(குறிப்புரை) சரசுவதி வடமொழி தென்மொழியாகிய இரண்டிற்கும் உரிய அதிதெய்வம். தொண்டர்களின் நாவில் வீற்றிருந்து கலைமகள் காத்தருள்கின்றாள். தன்னை வழிபடும் அடியார்களுக்கு அருள் புரிதலில் அவள் கருணைக் கடலாக விளங்கு கின்றாள். தூக்கும்-ஆராய்கின்ற. பனுவல்-நூல். கல்வி-நூலறிவு. வாக்கு-கவிபாடும் திறன், பேச்சு வன்மையுமாம். (4)

**அலராதது என்னே ?**

பஞ்சுஅப்பு இதம்தரு செய்யபொற்
பாத பங்கேருகம், என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே?
நெடுந்தாட் கமலத்து

அஞ்சத் துவசம் உயர்த்தோன்
செந்நாவும், அகமும், வெள்ளைக்
கஞ்சத் தவிசு ஒத்து இருந்தாய்!
சகல கலா வல்லியே!

(பொழிப்புரை) நீண்ட நாளத்தை உடைய தாமரையில் வீற்றிருப்பவனும், அன்னக் கொடியை உயர்த்தி இருப்பவனுமாகிய பிரமதேவனது சிவந்த நாக்கிலும், தூய உள்ளத்திலும், வெள்ளைத் தாமரை மலராகிய தவிசின்கண் வீற்றிருப்பது போல எழுந்தருளி விளங்குபவளே! சகல கலா வல்லியே! செம்பஞ்சுக் குழம்பானது அப்பித் தீட்டப் பெற்ற-நன்மையைத் தருகின்ற-சிவந்த-பொன்போலும் நின் திருவடியாகிய தாமரை, என்னுடைய நெஞ்சமாகிய தடாகத்தில் மலராமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

(குறிப்புரை) பிரமதேவர் தாமரை மலரில் வீற்றிருப்பவர். அன்னக் கொடியை உடையவர். அவரது நாவில் கலைமகள் தங்கி யிருந்து வாழ்வதாகக் கூறுவது கவி மரபு. பிரமதேவரின் நாவில் மட்டுமே யன்றி, அவர்தம் திருவுள்ளத்திலும் கலைமகள் தங்கி வாழ்வதாகக் குமர குருபரர் அழகுறப் பாடியருளினர். இஃது ஒப்புமைக் கூட்டம் என்னும் அணி. 'என் நெஞ்சம் திறப்போர் நிற்காண்குவரே' என்றபடி, கணவனின் உள்ளத்தில் இடம் பெற்று வாழ்தலே மனைவிக்குச் சிறந்த பேறு ஆதலின், இங்ஙனம் கூறினர். கலைமகளின் திருவடிகள் தாமரை மலர் என விளங்குபவை. தாமரை மலர் குளங்களில் வளர்ந்து மலர்தல் இயல்பு. ஆதலின் என்னுடைய உள்ளமாகிய குளத்திலும், நின்னுடைய திருவடியாகிய தாமரை மலர்தல் வேண்டும் என்பது கருத்து. பஞ்சு-செம்பஞ்சுக் குழம்பு. இதம்-நன்மை. பங்கேருகம்-தாமரை. தடம்-தடாகம், குளம். அம்சம்-அன்னம். துவசம்-கொடி, அஃது 'அஞ்சத்துவசம்' எனத் தமிழியல் முறையில் வந்தது. கஞ்சம்-தாமரை. தவிசு-இருக்கை, ஆசனம். (5)

எளிதெய்த நல்காய் :

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும், யான்
எண்ணும்பொழுது எளிது எய்த
நல்காய்! எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலும், அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்!
சகல கலா வல்லியே!

(பொழிப்புரை) எழுதப் பெறாத வடமொழி வேதங்களிலும், வானம் நிலம் நீர் நெருப்பு காற்று என்னும் ஐம்பூதங்களிலும், அன்பர்களின் கண்கள் உள்ளங்கள் ஆகியவற்றிலும், பரவி நிறைந்திருப்பவளே! சகல கலா வல்லியே! இசையும் நடனமும் நூலறிவும், இனிய சொற்களை உடைய கவிதையும் ஆகியவற்றை, யான் நினைக்கின்ற பொழுதே எளிதாக அறிந்துணர்ந்து இயற்றவல்ல ஆற்றலை அடையும்படி எனக்கு அருள்செய்வாயாக!

(குறிப்புரை) தொன்று தொட்டுச் சந்தை ஓதி வளர்க்கப் பெற்று வழங்கி வருதலின், வடமொழி வேதம் 'எழுதா மறை' எனப்படும். கலைமகளின் புகழும் சிறப்பும் வேதங்களில் ஓதப்படுகின்றன. நிலம் நீர் தீ காற்று விசும்பு என்னும் ஐம்பெரும் பூதங்களிலும் தன் தெய்வத் தன்மையால், அவள் பரவி விரவி நிற்கின்றாள். அடியார்கள் தம் கண்களால் கண்டும், கருத்தால் நினைந்து தியானித்தும் வழிபட்டு வருகின்றனர். ஆதலின், இவ்விடங்களில் எல்லாம் கலைமகள் நிறைந்திருப்பதாகக் குமரகுருபரர், புகழ்ந்து துதிக்கின்றார். சகல கலாவல்லி யாகிய கலைமகளைத் தொழுதால், இசை நடனம் நூலறிவு கவித்திறன் முதலிய எல்லாக் கலைத் துறைகளிலும், சிறந்த புலமையை எளிதாகப் பெறலாம் என்பது கருத்து. (6)

**கடைக்கண் நல்காய் :**

**பாட்டும் பொருளும், பொருளால்**
**பொருந்தும் பயனும், என்பால்**
**கூட்டும்படி, நின் கடைக்கண் நல்காய்!**
**உளம்கொண்டு தொண்டர்**
**தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்**
**அமுதம் தெளிக்கும் வண்ணம்**
**காட்டும் வெள்ஓதிமப் பேடே!**
**சகல கலா வல்லியே!**

(பொழிப்புரை) அன்பும் பக்தியும் கொண்டு அடியார்கள் இயற்றுகின்ற கலை நலம் சிறந்த தமிழ்க் கவிதை ஆகிய பாலையும் நீரையும் பிரித்துத் தெளியும்படி காட்டுகின்ற வெள்ளை அன்னமாகிய பெண் தெய்வமே! சகல கலா வல்லியே! செய்யுளும், அதன் கருத்தும், அக் கருத்தால் பொருந்துகின்ற அறம் பொருள் இன்பம் வீடு என்னும் பயன்களும், என்பால் வந்து சேரும்படி, நின்னுடைய கடைக்கண் பார்வையை வழங்கி அருள்வாயாக!

(குறிப்புரை) வெண்தாமரை மலரில் வீற்றிருத்தலாலும், அன்னம் போன்ற நடையும் சாயலும் உடைமையாலும், வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணி பூண்டு விளங்குதலாலும், 'வெள்ளோதிமப் பேடு' என்றார். அன்னமானது, பாலையும் நீரையும் தனித்தனியே பிரித்து உண்ணும் இயல்பினது எனக் கவிஞர்கள் பாடுவார்கள். அதற்கு ஏற்பக் கலைமகளாகிய அன்னமும், அடியவர்கள் இயற்றும் கவிதையாகிய பாலில் உள்ள நீராகிய குற்றங்களைப் பிரித்து ஒதுக்கி உண்டு களித்து அருள் புரிகின்றது என்றார். இவ்வாறன்றி, அவர்கள பாடுகின்ற கவிதையாகிய தீம்பாலில், அமிழ்தத்தின் சுவையும் பண்பும் வெளிப்பட்டு விளங்கும்படி கலைமகள் அருள் புரிகின்றாள் எனக் கொள்ளினும் ஆம். (7)

**அடிமை கொள்வாய் :**

**சொல் விற்பனமும், அவதானமும்,**
**கவி சொல்ல வல்ல**
**நல் வித்தையும், தந்து அடிமை கொள்வாய்!**
**நளினசனம் சேர்**

செல்விக்கு அரிது என்று ஒருகாலும்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே!
சகல கலா வல்லியே!

(பொழிப்புரை) தாமரை மலராகிய இருக்கையில் வீற்றிருக்கின்ற செல்வத்திற்குரிய திருமகளுக்கு இயலாதது என்று, ஒரு காலத்திலும் அழியாதபடி கல்வியாகிய பெரிய செல்வத்தின் பேற்றினை அருளுகின்ற சகல கலா வல்லியே! அவையிற் பேசுகின்ற அரிய சொல்வன்மையையும், அவதானம் என்னும் சிறந்த நினைவாற்றலையும், கவிபாடுதற்கு வல்லமை உடைய நல்ல கலைத் திறமையையும் கொடுத்து, என்னை நின் அடிமையாக ஆட்கொண்டருள்வாயாக!

(குறிப்புரை) நளினம்-தாமரை, செந்தாமரை. செல்வி-செல்வத்துக்கு உரிய திருமகள். பொருட் செல்வமானது விரைவில் அழிந்துபடும் இயல்புடையது. கேடில் விழுச் செல்வமாகிய கல்விச் செல்வமோ, என்றும் அழியாமல் எழுமையும் ஏமாப்பு உடையதாகத் திகழ்வது. அத்தகைய கல்விச் செல்வத்தை வழங்குபவள், சகல கலா வல்லியாகிய கலைமகளே யாதலின், 'ஒரு காலமும் சிதையாமை நல்கும் கல்விப் பெருஞ் செல்வப் பேறே!' எனச் சிறப்பித்துப் புகழ்ந்தார். சொல் விற்பனம்-சொல் வன்மை, பேசும் திறன். அவதானம்-ஒரே சமயத்தில் பல செய்திகளைக் கூர்ந்து நோக்கி மறவாமல் கூறவல்ல நினைவாற்றல். வித்தை-கலைத் திறன். (8)

**நினைப்பவர் யார் ?**

சொற்கும் பொருட்கும் உயிராம்
மெய்ஞ்ஞானத்தின் தோற்றம் என்ன,
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந்தோய் புழைக் கை
நற் குஞ்சரத்தின் பிடியோடு,
அரசன்னம் நாண, நடை
கற்கும் பதாம் புயத்தாயே!
சகல கலா வல்லியே!

(பொழிப்புரை) நிலத்தில் படும்படி நீண்ட, துளை அமைந்த துதிக்கையை உடைய நல்ல பெண் யானையுடன், அரச அன்னமும் நாணும்படி, அழகிய நடையைப் பழகுகின்ற திருவடியாகிய தாமரையை உடையவளே! சகல கலா வல்லியே! சொல்லுக்கும் பொருளுக்கும் உயிராக விளங்குகின்ற, உண்மை மெய்யுணர்வினது காட்சி என்று சொல்லும்படி விளங்குகின்ற உன்னை, மனத்தால் நினைக்க வல்லவர்கள் யாவர்?

(குறிப்புரை) பெண்களின் நடைக்குக் கவிஞர்கள், பெண் யானையின் நடையையும், அன்னத்தின் நடையையும் உவமையாகக் கூறுவர். குமரகுருபரர் அங்ஙனம் கூறுமல், கலைமகளின் நடை யழகைக் கண்டு யானையும் அன்னமும் நாணுவதாகக்

குறிப்பிட்டார். துதிக்கை நீண்டு நிலத்திற் படும்படி விளங்குவது, சிறந்த யானைக்கு இலக்கணம் என நூல்கள் கூறும். ஆதலின், 'நிலம்தோய் புழைக்கை நற்குஞ்சரத்தின் பிடி' என்றார். புழை-துளை. புழைக்கை-தும்பிக்கை. குஞ்சரம்-யானை. பிடி-பெண் யானை. 'அரச+அன்னம்' என்பது அரசன்னம் என வந்தது. பதம்-திருவடி. அம்புயம்-தாமரை. பதம்+அம்புயம். 'பதாம்புயத்தாய்' என்பதற்கு திருவடிகளை உடைய தாயே என்றும் பொருள் கொள்ளலாம்.

ஞானம்-மெய்யுணர்வு. ஒருவரின் உணர்வு அவர் கூறும் சொல்லிலும், அஃது உணர்த்தும் பொருளிலும் வெளிப்படும். சொல்லுக்கும் பொருளுக்கும் உயிராக விளங்குவது, உயிராக உலவுவது, உயிராற்றலை விளைவிப்பது, ஞானமே! ஆதலின், 'சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞ்ஞானம்' என்றார். மெய்யுணர்வாகிய ஞானத்திற்குத் தெய்வமாக விளங்குபவள் கலைமகள். ஞானமே அவளது திருவுருவம். ஞானம்-தூயது, வெண்மையானது. கலைமகளின் தோற்றம் ஞானத்தின் தோற்றம் (காட்சி) எனும்படி உள்ளது என்பார் 'மெய்ஞ்ஞானத்தின் தோற்றம் என்ன நிற்கின்ற நின்னை' என்றார். நின் புகழையும் சிறப்பையும் மனத்தால் நினைந்து ஆராய்ந்து அளந்து கூற வல்லவர்கள் ஒருவரும் இல்லை என்றபடி. (9)

**கண்கண்ட தெய்வம் :**

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும், என்
பண்கண்ட (அ)ளவில், பணியச் செய்வாய்!
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும்,
விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ?
சகல கலா வல்லியே!

(பொழிப்புரை) சகல கலா வல்லியே! உலகத்தைப் படைக்கின்ற பிரமதேவர் முதலாக, வானுலகத்தில் விளங்குகின்ற தெய்வங்கள் பலகோடி உண்டு எனப்படினும், உண்மையாகக் கூறமுற்பட்டால், உன்னைப்போன்று கண்கூடாகப் பலனைத் தருகின்ற தெய்வம்வேறு உண்டோ? வேறு எதுவும் இல்லையாதலின், உலகம் முழுவதற்கும் நிழலைத் தருகின்ற வெண் கொற்றக் குடையின் கீழே வீற்றிருக்கும் சிறப்பின் மிக்க பெரிய அரசர்களும், என்னுடைய பாடற்றிறனை அறிந்த உடனே, என்னைப் பணிந்து சிறப்புச் செய்யும்படி அருள் செய்வாயாக!

(குறிப்புரை) கல்வியானது, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பேறுகளையும் பயக்கும்; புகழை விளைவிக்கும்; கவலைகளைத் தீர்க்கும்! இவ்வாற்றால் சிற்றுயிர்களுக் கெல்லாம் உற்ற துணையாக விளங்குவது கல்வியே யாதலின், அதனை அளிக்கும் தெய்வம் ஆகிய கலைமகளை 'விளம்பில் உன்போல் கண்கண்ட தெய்வம் உளதோ?' என்று சிறப்பித்தார். 'தெய்வம் பல்கோடி உண்டேனும்' என்பதில் உம்மை எதிர்மறை. அஃதாவது, தெய்வம் ஒன்றே; ஒரு சிலர் பல கோடி தெய்வங்கள் உண்டு (Poly theism) என்று கூறுவது உண்மை யன்று; அவர்கள் கூறுவதனை வாதத்திற்கென ஒரோ



திமிரம் அகற்றும் சிறப்புமிகும் தெய்வக் கவிஞர்! திருச்செந்தூர்
நமது முருகன் அருள்பெற்ற ஞானச் செல்வர்! தவமுனிவர்!
அமிழ்தின் இனிய நூல்கள்பல அளித்த கலைஞர்! காசிவரை
தமிழை வளர்த்த குமரகுரு பரநற் சான்றோர், தாள்போற்றி! —ஆசிரியர்.

வழி உடன்படினும், உன்போற் கண்கண்ட தெய்வம் வேறு இல்லை என்பது கருத்து. புவியரசரும் போற்றும் கவியரசராக ஆகுமாறு, தமக்கு அருள் செய்தல் வேண்டு மென்பது இப்பாடலின் உட்கிடை. 'மன்னரும்' என்பதில் உம்மை சிறப்பும்மை. டெல்லி அரசரின் அன்பும் ஆதரவும் தமக்குக் கிடைத்தல் வேண்டும் என்னும் தமது விருப்பத்தை நிறைவேற்றி அருளும்படி, குமரகுருபரர் கலைமகளை இப்பாடலில் வேண்டுதல் செய்து கொண்டமை அறிந்து மகிழ்தற்குரியது. கண்ட+அளவில்: கண்டளவில் என வந்தது, தொகுத்தல் விகாரம். கலைமகளின் அருளைப் பெறக் குமரகுருபரர் பாடியருளிய இத்துதி நூலைப் பாராயணம் செய்வதனால், நாமும் கலைமகளின் அருளைப் பெறலாம் என்பதில் ஐயம் இல்லை. ஆசிரியர்.

(முற்றிற்று.)

# நடராச வடிவ நலன்

முன்னுரை:

எல்லாம் வல்ல இறைவன், தனக்கென ஓர் உருவும், ஒரு பெயரும் உடையவன் அல்லன். ஆயினும் நம் பொருட்டு, எம் பெருமான் பல உருவமும், பல பெயரும் கொண்டு விளங்கி யருள்கின்ருன். அங்ஙனம், சிவபெருமான் உயிர்களின் பொருட்டுக் கொண்டருளிய திருவுருவங்கள் பலவற்றுள், நடராச வடிவம் மிகவும் சிறந்து திகழ்வதொன்று.

நடராச வடிவம் நலங்கள் பலவும் நிறைந்தது; பழமையும் பெருமையும் வாய்ந்தது; தமிழ் நாட்டின் தனிப்பெரும் கலையியற் செல்வமாகக் கவினுற்றுப் புகழோங்கிப் பொலிவது! நடராசத் திருவுருவம் இடம் பெருத கோயில் எதுவும் இல்லை. எல்லாச் சைவக் கோயில்களிலும் நடராசத் திருவுருவம் சிறப்புற வைத்துப் போற்றி வழிபடப்பெற்று வருகின்றது.

நடராசப் பெருமானிடத்தும், அப்பெருமானின் திருவுருவச் சிறப்பிலும், சைவத் தமிழ்ச் சான்ருேர்கள் எல்லோருமே மிகவும் ஈடுபட்டுத் திளைத்து இன்புறுகின்றனர். அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், இராமலிங்க அடிகள் போன்ற சான்ருேர்கள் அனைவரும், நடராசப் பெருமானிடத்தில் பெரிதும் ஈடுபட்டுப் பரவித் திளைத்து மகிழ்ந்துள்ளனர். சிலப்பதிகாரம், கலித்தொகை போன்ற பழம்பெரும் சங்க காலப் பனுவல்களிலும், நடராசப் பெருமானைப் பற்றிய புகழுரைகள் காணப் பெறுகின்றன.

அறிஞர்களின் புகழுரை:

இங்ஙனம் பண்டைப் பெரு நூல்களும் பெரியோர்களும் மட்டுமே யன்றி, இன்றைய உலகிற் புகழோங்கிய கலைஞர்களும் அறிஞர்களும் கூடக் கண்டு வியந்து மகிழ்ந்து போற்றிப் புகழும் வண்ணம், நடராச வடிவம் சிறந்துயர்ந்து திகழுகின்றது. "என் அத்தன் ஆடல்கண்டு இன்புற்றதால் இவ் விருநிலமே" எனத் திருநாவுக்கரசர் பாடுதற்கு ஏற்ப, இன்றைய உலகம் முழுவதுமே நடராச வடிவின் நலத்தினை நயந்தினிது பாராட்டி, வியந்து பெரிதும் இன்புற்று நிற்கின்றது எனலாம்.

(1) உலகப் புகழ்பெற்ற கலையியற் பேரறிஞர் ஆகிய திரு. ஆனந்தகுமாரசுவாமி அவர்கள், "நடராச வடிவின் நலங்கள் அளப்பரியன. இத்தகையதொரு சிறந்த வடிவத்தினை, இந்நாளில் எத்தகைய பெருங் கலைஞனும்கூட, கருதி யுணர்ந்து படைத்தல் இயலாது. இது வெறும் கவிதை யன்று, அறிவியல் நலமும் அமைந்தது, இத் திருவுருவம் பக்தர்களுக்கும், பாமரர்களுக்கும், விஞ்ஞானிகளுக்கும், மெய்ஞ்ஞானிகளுக்கும் எல்லாம், பெரு வியப்பையும் பேரீடு பாட்டையும் விளைத்து மகிழ்வித்து வருகின்றது. காலமும் இடமும் கடந்து எல்லா நாடு மொழி சமயம் சார்ந்த மக்களாலும் போற்றப்படத் தக்கதாய்த் திகழ்கின்றது. இத்தகைய அரும் பெருஞ் சிறப்புக்கள் மிக்க இத்திருவுருவத்தினை,முதன்முதற் கருதிப்படைத்துஉதவிய அருட்பெருஞ் சான்ருேர்கள் ஆகிய கலைஞர்களின், நுண்மாண் நுழைபுலம் சாலவும் வியந்து போற்றுதற்குரியது. எனவே, எத்தனையோ பல தலைமுறைகளாக நடராச வடிவம் மக்களின் உள்ளங்களை யெல்லாம் கவர்ந்து நின்று, வழிபடப்பெற்று வருதலில் வியப்பொன்றுமில்லை. எவ்வளவோ ஐயப்பாடுகள் கொள்ளுவதிலும், எத்துணையோ பல குறைபாடுகளைக் காண்பதி

லுமே பழகிப் பயின்றுள்ள நாமும்கூட, நடராசரை வழிபட்டுத்தான் வருகின்றோம்!

"நடராச வடிவம் கலைநலம் சிறந்து கவர்ச்சி மிக்குத் திகழ்வது. அதன் ஒவ்வொரு பகுதியும் கவின்மிக்குப் பல தத்துவ நுட்பங்களை உள்ளடக்கிக் கொண்டு ஒளி விட்டு விளங்குகின்றது."

(2) "உலக முதல்வனின் உருவ வெளிப்பாடே நடராச வடிவம். அருவநிலையில் உள்ள பரம்பொருள், உருவ நிலையிற் கட்புலனாகும் வண்ணம் குறைவிலா நிறைவாக அமைந்த திருவுருவமே, நடராசர் ஆவர். இலயம், தொழில், இயக்கம் என்பனவற்றை அவர் குறிக்கின்றார். கடவுள் ஒரு படைப்பியற் கலைஞர்." எனப் பேரறிஞர் திரு. எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் கூறுகின்றார்.

(3) "நடராஜ வடிவம் பற்றிய கருத்துருவாக்கம், இந்திய மக்களின் பேரறிவின் பெருவிளைவாய்ப் பல நலங்கள் பொதிந்து ஒளிர்வதாகும். கலையியலும் அறிவியலும், தத்துவமும் சமயமும், ஒருங்கே கலந்து இயைந்ததன் பயன்தான், அத் திருவுருவம்! உண்மை என்பது வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே யாகுமாயின், நடராச வடிவத்தைக் காட்டிலும், ஒற்றுமையும் வேற்றுமையும் ஒருங்கே கலந்த சிறந்த நல்ல இணைப்பு, வேறு எதுவுமே இல்லை. எல்லாக் காலமும் இடமும், எல்லா இயக்கமும் முடக்கமும், அவரிடத்திலேயே அடங்கிக் கிடக்கின்றன." என்று திரு. எஸ். வி. இராமமூர்த்தி என்னும் சீரிய அறிஞர் இயம்புகின்றார்.

(4) சுவாமி விவேகானந்தர் அவர்களின் மாணவர்கள் பலருள் தலைசிறந்த ஒருவரும், 'பிரபுத்த பாரதம்' என்னும் ஆங்கில இதழின் ஆசிரியருமாக விளங்கி யிருந்த திரு. பி. ஆர். இராஜம் ஐயர் என்னும் பெருந்தகையார், "மனித வடிவில் அமைந்த கடவுளின் திருவடிவங்கள் அனைத்திலும் இதுகாறும் மனிதன் அறிந்தனவற்றுள், நடராச வடிவம் மிகவும் சிறந்த தொன்றாகும். ஏனைப் பிற தலங்களில் எல்லாம் எழுந்தருளச் செய்யப் பெற்றுள்ள நடராசர் திருவுருவப் படிமைகள் எல்லாவற்றிற்கும், மூல முதற் படிமையாகத் திகழ்வதாய்ச் சிதம்பரத்தில் விளங்கும் நடராசர் திருவுரு

---

(1) "How amazing the range of thought and sympathy of those rishi-artists who first conceived such a type as this, affording an image of reality, a key to the complex tissue of life, a theory of nature, not merely satisfactory to a single clique or race, nor acceptable to the thinkers of one century only, but universal in its appeal to the philosopher, the lover and the artist of all ages and all countries.

No artist of today, however great, could more exactly or more wisely create an image of that Energy which science must postulate behind all phenomena. This is poetry, but none the less, the truest science."

—Dr. Ananda Coomaraswamy,
Siddhanta Diphika, Vol. XIII.

(2) "Nataraja is the manifestation of the Lord of the Cosmos. He is the perfect image of becoming as distinct from being. He symbolizes rhythm, action, movement. God is creator-artist."

—Dr. S. Radhakrishnan,
Occasional Speeches and Writings, P. 130

(3) "The conception of Nataraja is the most comprehensive Conception of Indian intellect. It is a synthesis of art and science, philiosophy and religion. If reality is unity in diversity, there is no finer synthesis of unity and diversity than Nataraja. In Him are compressed all spaces, all times, all the flow of life and all the immobility of existence."

—Sir S. V. Ramamurthy,
Science and Spirit, P. 106

(4) "Of all the anthromorphic representations of the deity, yet known to man, that of Nataraja is one of the very best and the image at Chidambaram, which is the prototype of all similar images elsewhere, is certainly one of the most inspiring figures that we have known. Even considered as purely a work of art, there are few images more faultless, more life-like and more charming,"

—B. R. Rajam Iyer,
Rambles in Vedanta, P. 61.

வப் படிவமே, நாம் அறிந்தனவற்றுள் மிகவும் தலைசிறந்ததாய்ப் பெரிதும் உள்ளெழுச்சி யின்ப வுணர்வினை ஊட்டுந் தகையதாகும். வெறும் கலை நோக்கு ஒன்று மட்டுமே கொண்டு ஆராய்ந்தாலும் கூட, மிகவும் திருத்தமான உயிர்த் தன்மையுடைய—கவர்ச்சி நிறைந்த—இத் திருவுருவினைப் போன்று, வேறொரு படிமத்தினைக் காண்டல் அரிது'' எனக் கட்டுரைத்துப் போற்றுகின்றார்.

## திருநடனச் சிறப்பு:

இறைவன் கலைகளின் முதல் வன்; கலையுருவினன்; கலைகள் அவனிடமிருந்தே தோன்றுகின்றன. இறைவன் ஒரு சிறந்த பெருங் கலைஞன் என்பதையே நடராச வடிவம் நல மற உணர்த்துகின்றது. 'மனிதன் பேசத் தொடங்கும் முன்னரே பாடத்தலைப் பட்டான்; பாடுவதற்கும் முன்னரே ஆடக் கற்றுக் கொண்டு விட்டான்' என ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். அம்முறையில் நோக்கினால், எல்லாக் கலைகளுக்கும் முற்பட்டுப் பழமையும் பெருமையும் முதன்மையும் மிக்கதாக விளங்கும் கலை, நடனக் கலையே என்பது தெளிவாம்.

இத்தகைய நடனக் கலையின் தெய்வமாக அமைந்து, அண்ட வெளியினையே நடன மேடையாகக் கொண்டு, தானே காண்பவனும் நடிப்பவனுமாக நின்று, பல வேறு வகையான, நடனத்திறங்களை இறைவன் செய்தருளுகின்றான். "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே'' என்றபடி, வானவெளியில் சுழலும் கோள்களும் (planets), மீன்களும் (stare) முதலிய அண்ட கோடிகள் யாவும், அசைவுற்று இயங்கும் பொருட்டு, இறைவன் தான் அசைந்து, யாவற்றையும் ஒருங்கே இயக்குவிக்கின்றான்.

மேலும் தில்லைச் சிதம்பரத்தில் இறைவன் இத் திருநடனம் இயற்றுதற்குக் காரணம், அஃது இவ்வுலகின் நடுவிடமாக இருத்தலேயாம்.

"விண்ணுக்கும் மேல், வியன்
பாதலக்கீழ், விரிநீர் உடுத்த
மண்ணுக்கு நாப்பண் நயந்து,
தென் தில்லை நின்றோன்''
—திருக்கோவையார்.

என மாணிக்கவாசகர் கூறுகின்றார். இவ்வாறே திருமந்திரம், கோயிற்புராணம், திருவாதவூரடிகள் புராணம் முதலியனவும் கூறுதல் காணலாம்.

## சைவ சித்தாந்தம்:

நடராச வடிவம் பற்றிய பல தத்துவ நுட்பங்களைக் குறித்துச் சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்களுள் ஒன்றும், திருவதிகை மனவாசகங்கடந்தார் என்பவர் இயற்றியதும் ஆகிய "உண்மை விளக்கம்'' என்னும் உயரிய நூல், பின்வருமாறு அழகுற உணர்த்துகின்றது.

(1) இறைவனின் உடுக்கையால் ஆக்கல்; அமைந்த கையாற் காத்தல்; ஏந்திய நெருப்பினால் அழித்தல்; ஊன்றிய திருவடியால் மறைத்தல் (திரோபவம்); எடுத்ததிருவடியால் அருளல் (முத்தி, அனுக்கிரகம்) ஆகிய ஐந்து தொழில்கள் நடைபெறுகின்றன.

(2) இறைவன் தனது துடியைக் கொட்டுவதால் ஆன்மாக்களின் மாயையினை உதறுகின்றான்; ஏந்திய நெருப்பினாற் கன்ம மலத்தினைச் சுடுகின்றான்; ஊன்றிய திருவடியால் ஆணவ மலத்தினை அழுத்தித் தேய்விக்கின்றான்; தூக்கிய திருவடியால் உயிர்களைப் பிறவிக் கடலினின்று எடுக்கின்றான்; அபயகரத்தால் உயிர்களை இன்பக் கடலில் திளைக்கச் செய்கின்றான்; இத்தகைய திருநடனத்தைக் கண்டு விரும்பித் தொழுபவர்களுக்குப் பிறவித் துயர் இல்லாமல் நீங்கும்.


(3) இறைவன் ஐந்தொழிற்றிருக் கூத்து இயற்றுங்கால், அவனது திருமேனி ஐந்தெழுத்தினாலேயே அமைகின்றது. இறைவன் 'மந்திர சொரூபி' யாதலின், அவன்றன் திருவுருவம் திருவைந்தெழுத்து மந்திரத்தினாலேயே அமைவதாகின்றது. திருவடியில் ந; வயிற்றில் ம; தோளில் சி; முகத்தில் வ; திருமுடியில் ய. இவ்வமைப்பு 'தூல பஞ்சாக்கரம்' எனவும், '**இலயாங்கம்**' எனவும் கூறப்படும்.

(4) இனி 'சிவயநம' என்பது சூக்கும பஞ்சாக்கரம் என வழங்கும். அது நடராஜ வடிவத்தில் பின்வருமாறு அமைந்து விளங்குகின்றது; துடியில் சி; வீசும் கரத்தில் வ; அபயகரத்தில் ய; ஏந்துகின்ற நெருப்பில் ந; அடிக்கீழ் முயலகனில் ம. இவ்வமைப்பு 'போகாங்கம்' எனப்படும்.

பிற திருவுருவங்களிற் போலத் தனியே பிரித்தெடுக்கக் கூடிய நிலையில் இல்லாமல், நடராச வடிவத்திற் பிரிவற இயைந்து கூடியே இருக்கின்ற திருவாசியானது, பிரணவம் ஆகிய ஓங்காரத்தையும், இத் திருவாசியின் சுடர்கள் 51 எழுத்துக்களையும் சுட்டுகின்றன.

**அண்டமும் பிண்டமும்:**

இனி வேறு பலவும் ஈண்டு எண்ணியுணர்வதற்கு உரியனவாக உள்ளன. உலகம் ஆகிய அண்டம் (Macrocosm) அமைந்திருக்குமாறு போலவே, நம்உடம்பு ஆகிய பிண்டமும் (Microcosm) அமைந்துள்ளது. இறைவன் அண்ட வெளியில் திருநடனம் புரிதல் போலவே, நம் உடம்பினுள்ளே பிண்டத்தின் கண்ணும் நடனம் புரிந்தருள்கின்றான். அண்டவெளி நடனம் தில்லைச் சிதம்பரத்தில் நிகழ்கின்றது. பிண்டத்தினுள் உடம்பின் கண்ணே நிகழும் நடனம் நம்முடைய இருதயத்தில் நடைபெறுகின்றது. அண்டத்துக்குச் சிதம்பரம் போலப், பிண்டத்துக்கு இருதயம் ஆகிய நெஞ்சப்பை (Heart) இலங்குகின்றது. இருதயத்தின் அசைவும் இயக்கமும் நின்றுவிட்டால் உடல் செயலற்றுப் பிணம் ஆகும். அவ்வாறே தில்லைச் சிதம்பரத்தில் இறைவனின் திருநடனம் நிகழா தொழியின் அண்டங்கள் அசைவற்று இயங்காமல் நின்று அழிந்தொழிந்து போகும். அணுக்களும் அண்டகோடிகளும் தத்தம் நிலையிலும் நெறியிலும் ஆடி அசைந்து



தில்லைக் கூத்தனும், சிவகாமி அம்மையும்

முறையே இயங்கிக் கொண்டு இருப்பதற் குரிய மூலமுதற் காரணம், நடராசப் பெருமானின் ஆடலும் அருளியக்கமுமே யாகும்.

**முடிவுரை:**

இங்ஙன மெல்லாம் 'சிந்திப்பரியன, சிந் திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவன' என்னும் நிலையில், பற்பல உயர்ந்த தத்துவ நுட்பங்களை யுணர்த்தி நிற்கும் நடராச வடிவத்தின் மாட்சிமையை அளவிட்டு உரைப்பதரிது.

"உலகமே உருவம் ஆக,
யோனிகள் உறுபப தாக,
இலகுபேர் இச்சா ஞானக்
கிரியையுட் கரணம் ஆக,
அலகிலா உயிர்ப்பு லன்கட்கு
அறிவினை ஆக்கி, ஐந்து
நலமிகு தொழில்க ளோடும்
நாடகம் நடிப்பன் நாதன்!"

—சிவஞான சித்தியார்.

என அருள் நந்தி சிவாசாரியார் கூறுமாறு போல, உலகமே உருவமாகவும், பல வகைப் பிறப்பு வகைகளே உறுப்பாகவும், இச்சை ஞானம் கிரியை என்பனவே உட் கருவிகள் ஆகவும் கொண்டு, ஆருயிர் களுக் கெல்லாம் அறிவினை நெறிமுறையே வளருமாறு செய்து, ஐந்தொழில்களை இயற்றி வரும் அருட்பெருந் தெய்வம் ஆகிய நடராசப் பெருமானின் திருவடி களை, இடைவிடாது அன்புடன் வழிபட்டு நாம் அனைவரும் நலம்பலவும் பெற்று உய்வோமாக! —ஆசிரியர்.

## செய்திச் சுருக்கம்

**பாவை விழா :**

வரப்போகும் மார்கழி மாதத்தில், சிறுவர் சிறுமியர்கள் திருப்பாவை-திருவெம்பாவைப் பாசுரங்களை மனப்பாடம் செய்து பாடி, பாவை நோன்பு நோற்று, நல் வாழ்க்கையில் திகழ, வழக்கம்போல ஊக்கம் எடுத்துக் கொண்டு, தங்கள் தங்களுக்குப் பக்கத்திலுள்ள கிராம, நகரத்துப் பள்ளிகளிலுள்ள குழந்தைகள் இந்தத் தெய்விகத் தமிழ்ப் பாடல்களை மனப்பாடம் செய்யவும், பாவைப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகள் பெறவும், நம் இளம் குழந்தைகளின் ஆன்மீக வளர்ச்சிக்குத் தொண்டு புரியுமாறு அன்பர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப் பெறுகின்றனர். அதற்காகப் பாவைப் பாடல்களை அச்சிட்டுக் கொடுக்க வசதியில்லாதவர்கள், பின் வரும் முகவரிக்குக் கடிதம் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

**திருப்பாவை—திருவெம்பாவை மத்தியக் குழு,**

19, பெரிய கடைத் தெரு,

மாயூரம்

# திருக்குறளும், சைவ சித்தாந்தமும்

**முன்னுரை :**

திருக்குறள் என்னும் செந்தமிழ்த் திருமறையினை, எல்லாச் சமயத்தவரும் தத்தமக்கு உரியதென உரிமை பாராட்டிப் பெருமை கொள்வர். அங்ஙனம் எல்லாச் சமயத்தாராலும் தழுவி ஏற்றுக் கொள்ளப் படுதலினாலேயே, திருக்குறளின் தன்னிகரில்லாச் சிறப்புப் பெரிதும் புலனாகின்றது எனலாம். எத்தகையவரும் ஏற்றுப் போற்றிப் புகழும் மாண்புடைய திருக்குறளில், நமது தமிழ் நாட்டிற்கே சிறப்பாக உரிய சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கைகளும் அமைந்திருத்தலில் வியப்பில்லை. ஆதலின் திருக்குறளும் சைவசித்தாந்தமும் பற்றி, நாம் ஆராயத் தலைப்படுதல் பெரிதும் பொருந்துவதே ஆகும்.

**பொதுமை நலம் :**

திருக்குறள் தமிழ் நாட்டில் தோன்றிய தன்னிகரில்லாச் சிறப்பு நூல். அவ்வாறே சைவ சித்தாந்தம் என்னும் தத்துவமும், நமது தமிழ் நாட்டில் தோன்றிய தலைசிறந்த தத்துவக் கொள்கையாகும். திருக்குறள் உலகம் முழுவதும் உவந்து தழுவிக் கொள்ளத் தக்க பொதுமை மாண்புடையது. அதுபோலவே சைவ சித்தாந்தமும், ஒருவகையில் பொதுமை நலம் வாய்ந்தது. சைவ சித்தாந்த சமயம், எந்த ஒரு சமயத்தையும் புறக்கணித்து இகழ்வதன்று. 'இது ஆகும் அது அல்லது எனும் பிணக்கு இன்றி' எல்லாச் சமயங்களையும் ஏற்று உடன்பட்டு, அவ்வவற்றிற்கு உரிய நிலையில், படிமுறையே தன்பால் அவற்றைத் தழுவிக் கொண்டு, அவற்றிற்கெல்லாம் பொதுவாய்த் தாயகமாக அமைந்து திகழ்வது சைவ சித்தாந்தம் (சித்தியார் 267).

"சைவ சித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கையானது மிக விரிந்ததும், பெரும் செல்வாக்கு வாய்ந்ததும், ஐயத்துக்கு இடமின்றி உண்மையிலேயே பெருமதிப்புக்கு உரியதும், இந்திய நாட்டிலுள்ள சமயக் கொள்கைகளுள் எல்லாம் தலைசிறந்தது மாக விளங்குகின்றது. இது தனிச்சிறப்பாகத் தென்னிந்தியாவிற்கே உரிய தமிழ் மதம் (கொள்கை) ஆகும். தென்னிந்திய மக்களின் மிகச் சிறந்த பேரறிவின் பெருவிளைவே சைவ சித்தாந்தம்" (1) என்று, பேரறிஞர் ஜி. யூ. போப் அவர்கள் கூறியிருப்பது, நாம் இங்குச் சிந்தித்தற்குரியது.

**தமிழ்க் கொள்கை:**

சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கையானது, திருக்குறளைப் போலவே, தமிழர்களின் சமுதாய வாழ்க்கை வளத்தின் செழிப்பினின்று மலர்ந்ததாகும். சைவ சித்தாந்தத்திற்கு அடிப்படையும் மூலமுமான நூல்கள் அனைத்தும், தமிழிலேயே மிகுதியாக அமைந்து காணப்படுகின்றன (2). ஆதலின், திருக்குறளைப் போலச் சைவ சித்தாந்தமும், தமிழ் மக்களின் வாழ்வும் வைப்புமாக உள்ள, தனிப்பெரும் தத்து

---

(1) "The Saiva Siddhantha system is the most elaborate, influential and undoubtedly the most intrinsically valuable of all the religions of India. It is peculiarly the South-Indian, and Tamil religion. Saiva Siddhantha philosophy is the choicest product of the Dravidian intellect."

—The Rev. Dr. G. U. Pope.

2. "The fact must be borne in mind that in Tamil alone exist systematic, authoritative works on the Saiva Siddhantha whereas in Sanskrit either in the Vedic or in the Post Vedic period not even a single systematic work on this philosophy is to be met with, even though its principal tenets are found scattered here and there...."

—Maraimalai Adigal.

வக் கொள்கை என்பது தெள்ளிதின் விளங்கும்.

திருக்குறளைச் சைவ சமய ஆசிரியர்களாகிய அப்பர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாசகர் என்னும் நால்வரும் தம்முடைய பாடல்களில் பொன்னேபோல் போற்றிப் பாராட்டி யிருப்பது போலவே, அவர்களின் வழிவந்த சைவ சித்தாந்த ஆசிரியர்கள் அனைவரும்கூட, திருக்குறளின் சொல் சொற்றொடர்களையும், தூய கருத்துக்களையும் தத்தம் நூல்களில் தழுவிப் போற்றியுள்ளனர். சைவ சித்தாந்த ஆசிரியர்களாகிய மெய்கண்டார்-அருள்நந்திசிவம்-உமாபதி சிவம் ஆகிய அருட்பெருஞ் சான்றோர்கள் திருவள்ளுவரைத் தமது ஞானாசிரியராகவும், திருக்குறளைத் தமது ஞானப் பெரு நூலாகவும் கொண்டு ஒழுகி வந்துள்ளனர் எனத் துணிந்து கூறலாம். அவர்கள் தம்முடைய செயல்களுக்குத் திருவள்ளுவரையே, மேல்வரிச் சட்டமாகக் கொண்டு போற்றினர் எனப் புகல்வது மிகையன்று.

**மெய்கண்டார் :**

சைவ சித்தாந்தத் தனிப்பெருஞ் சிறப்பு நூலாகிய சிவஞான போதம் என்னும் செந்தமிழ்த் தத்துவ நூலை இயற்றி யருளிய ஆசிரியர் மெய்கண்டார், திருவள்ளுவரைப் பின்பற்றியே தமது நூலை இயற்றத் தலைப்பட்டார். திருக்குறள் சுருங்கச் சொல்லிப் பொருள்களை விளங்க உரைத்தலை வியந்து பின்பற்றித் தாமும் அவ்வாறே மிகவும் சுருக்கமான முறையில் கடினமான தத்துவப் பொருள்களைத் திருவள்ளுவரைப் போலத் திட்ப நுட்பமாக, அவர் விளக்கியருளினார். காணப்பட்ட உலகத்தாலேயே காணப்படாத கடவுளுக்கு உண்மை கூற வேண்டுதலின், உலகு ஆதிபகவன் முதற்றே எனத் திருவள்ளுவர் அறிவுறுத்திய முறையைத் தழுவியே, மெய்கண்டாரும், காணப்படும் பிரபஞ்சத்தைக் கொண்டு காணப்படாத பதிப் பொருளின் உண்மையை வலியுறுத்துகின்றார்.

(1) காணப்படும் உலகமானது அவன் அவள் அது என்னும் அவயவப் பகுப்புடைமையாலும், அங்ஙனம் சுட்டி யறியப் படுதலாலும், சடமுமாய்ப் பலவுமாய் இருத்தலாலும், தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழிற்பட்டு நிற்றலாலும், 'செய்வோரை யின்றிச் செய்வினை இல்லை' என்னும் அறிவு நெறிப்படி, இவற்றிற் கெல்லாம் காரணமாய்க் காணப்படாமல் உள்ள கடவுளாகிய பதிப்பொருளைத் தனக்கு முதலாக உடையதே ஆகும். அப்பதிப் பொருளே உலகத்தின் ஆக்கல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களையும் இயற்றுகின்ற முழுமுதற் பெரும் பொருளாவார் என, மெய்கண்டார் தம் சிவஞான போதத்தில் தொடங்கும் அடிப்படை, திருக்குறளின் அடிப்படையில் எழுந்ததே யாகும்.

(2) மேலும் திருவள்ளுவர் எழுத்துக்களுக் கெல்லாம் அகரமே முதல்; அகர எழுத்து இல்லையாயின் பிற எழுத்துக்கள் எதுவும் இல்லை; ஏனைய எல்லா எழுத்துக்களுக்கும் அகரம் இன்றியமையாதது——என்னும்கருத்தில், 'அகரமுதல எழுத்தெல்லாம்' என அருளிச் செய்தார். இக்கருத்தினை மெய்கண்டார் முழுவதும் தழுவி ஏற்றுக் கொண்டு,

> "ஒன்று என்றது ஒன்றேகாண்;
> ஒன்றே பதி, பசுவாம்
> ஒன்று என்றநீ பாசத்தோடு
> உளைகாண்; ஒன்று இன்றால்,
> அக்கரங்கள் இன்றாம், அகர
> உயிர் இன்றேல்;
> இக்கிரமத்து என்னும் இருக்கு"

என்னும் சிவஞானபோத வெண்பாவில் மேற்கோளாகக் காட்டி, அகரம் ஆகிய உயிர் எழுத்து இல்லையாயின் வேறு எந்த எழுத்தும் இல்லையாதல் போல, பதிப் பொருள் இல்லையாயின் வேறு எந்த உயிரும் உலகமும் இயங்குதல் இயலாது என்று நிறுவுகின்றார்.

(3) திருவள்ளுவர் தமது திருக்குறளில் செய்ந்நன்றி மறத்தலை உய்தி இல்லாத ஒரு மாபெரும் குற்றமாக உரைத்துள்ளார். நன்றி மறத்தலை இங்ஙனம் ஒரு பெருங் குற்றமாக வலியுறுத்தி அழுத்தம் திருத்தமாக வேறு பிறர் எவரும் திருவள்ளுவரைப் போலக் கூறியதாகத் தெரியவில்லை.

> எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்;
> உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

என்பது, திருக்குறளிலேயே மிக முதன்மை யான முழுமணி போன்றதொரு விழுமிய குறளாகும். இக்குறளின் அருமை பெரு மையை உணர்ந்த மெய்கண்டார், இத னைத் தமது சிவஞான போதத்தில் மிகவும் தகுதியுறப் பொருத்தமானதோர் இடத்தில் பொன்னேபோல் பொதிந்து போற்றிக் கொண்டுள்ளார்.

"தன்னை அறிவித்துத் தான்தானாய்ச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது"*

என்னும் சிவஞானபோத வெண்பாவில், குருவழிபாட்டின் இன்றியமையாமையினை வலியுறுத்தும் இடத்தில், செய்ந்நன்றி அறிதல்பற்றித் திருவள்ளுவர் கூறிய கருத்தை, மெய்கண்டார் எடுத்தாண்டிருத் தலைக் காணலாம்.

"தன் உண்மை அறியமாட்டாது குருடாய்க் கிடந்த உயிருக்குப்
பலவாற்றாலும் அதனைத் தெரித்து உணர்த்தி எத்தனையும்
எளிய அவ்வுயிரை எத்தனையும் அரிய தான் ஆகும் வண்ணம்
செய்தளித்த குருவினது மிகப் பெரியதோர் உதவியை,
உயிரானது அதன் பின்னர் மறக்குமாயின், இதற்கு முன்
அறியாமையால் மறந்த குற்றம்போல அன்றி, அக் குற்றம்
தீர்திறன் உடையதொரு குற்றம் அன்றாக முடியும்.
முன்னை மறந்த குற்றம் அறியாது நிகழ்ந்த தாகலின்
கழுவப்படும், இஃது அதுபோல் கழுவப்படுவதன்று
என்பார், 'பின்னை மறத்தல் பிழையலது' என்றருளிச்
செய்தார்."

என்பது சிவஞான போதப் பேருரை. இப் பகுதியில் 'எந் நன்றி கொன்றார்க்கும்' என் னும் திருக்குறளைச் சிவஞான சுவாமிகள், இனிது எடுதது்க் காட்டி யிருத்தலும் நாம் கருதி யுணர்தற்குரியது.

**அருள்நந்தி சிவம் :**

இவ்வாறே மெய்கண்டாரின் வழிவந்த அருள்நந்தி சிவாசாரியாரும், திருக்குறளை முழுவதும் பின்பற்றிப் போற்றி யிருத்தலைச் சிவஞான சித்தியார் என்னும் சித்தாந்தப் பெருநூலில் காணலாம்.

(1) இறைவனின் அருளைப் பெறுதற் குரிய அறங்கள் இவை என்று கூறுமிடத் தில், திருக்குறளின் அறத்துப்பால் முழு வதையுமே சாரமாகப் பிழிந்து ஒருங்கே தொகுத்து சிவஞான சித்தியார் கூறு கின்றது. உலகத்தோடு ஒட்ட ஒழுகல், யாவர் மாட்டும் நேயமுடைமை, எல்லோரி டத்தும்இரக்கமுடைமை, நூல்களில்விதித் தபடி நடத்தல், தக்கோர்க்குப் பணிவிடை புரிதல், யாவர் மாட்டும் கலந்து பழகுதல், நற்குணமுடைமை, ஐம்பொறி அடக்கல், தக்கோர்க்கு உவகையோடு இயன்றன கொடுத்தல், மூத்தோரை வழிபடுதல், பணிவுடைமை, மெய்ம்மை கடைப் பிடித் தல், பிறன் மனையையும் வரைவில் மகளி ரையும் விழையாமை, தீ நெறிகள் செல் லாமை, நன்று தீது நாடி உணர்தல், சான்றோர்களைப் பேணி நல்லனவற்றைப் போற்றுதல் முதலிய 16 பண்புகளும் இவை போல்வன பிறவும் இறைவனின் அருளைப் பெறுதற்குரிய முயற்சியாகிய அறங்கள் ஆகும். இக்கருத்தினை உட்கொண்டு,

ஒழுக்கம்அன்பு அருள் ஆசாரம்
உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம் தானங்கள்
வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம்
அறிவொடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்கள் ஆனல்,
இரங்குவான் பணி அறங்கள்!

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுள், திருக்குறள் அறத்துப் பாலின் தெளி பொருட் பிழிவாம் சிறந்த சாரமாகத் திகழ் தல் காணலாம்.

---

*"இங்குப் 'பிழையலது' என்னும் தொடருக்குப் பிழையில்லை என்பது பொருள் அன்று. 'தீர்திறன் உடைய பிழைகளுள் ஒன்று அன்று; பிழைகளுள் எல்லாம் மிகப் பெரியது, தீர்திறன் இல்லாதது' என்பது கருத்து.

"பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும் எண்ணப்படுவது ஒன்றன்று" என்னும் திருக்குறள் உரையில், 'குற்றத் தன்மைகள் எல்லாவற்றுள்ளும் வைத்து எண்ணப்படுவது ஒன்றன்று, மிக்கது. இவறலது தன்மையாவது, குணங்கள் எல்லாம் ஒருங்குளவாயினும், அவற்றைக் கீழ்ப்படுத்துத்தான் மேற்படவல்ல இயல்பு; ஒழிந்தன அது மாட்டாமை யின் எற்றுள்ளும் எண்ணப்படுவது ஒன்று அன்று என்றார். 'எவற்றுள்ளும்' என்பது இடைக் குறைந்து நின்றது" எனவரும் பரிமேலழகர் உரைப்பகுதி, ஈண்டு ஒப்பு நோக்குதற்கு உரியது.

(2) அருள் நந்தி சிவம், சிவஞான சித்தியார் நூலில் பிறிதோர் இடத்திலும், திருக்குறளினை ஒட்டிச் சிறந்ததொரு விளக்கம் செய்தருள்கின்றார். அடியவர்களுக்கு அன்பில்லாதவர்கள், இறைவனிடம் அன்பில்லாதவர்கள் ஆவர். இறைவனிடத்து அன்பில்லாதவர்கள் உலகில் உள்ள எவ்வுயிர்களிடத்தும் அன்பு கொள்ள இயலாதவர்களே யாவர். எவ்வுயிர்களிடத்தும் அன்பு செய்யாதவர்கள், தம்முயிர்க்கும் அன்பில்லாதவராகவே முடிவர். தம் உயிர்க்கு நலம் தேடிக் கொள்ள விரும்பும் எவரும், பிற உயிர்களுக்கு அன்பு செய்து நலம் புரிவார்கள். இக் கருத்தைத் திருக்குறளின் அடி ஒட்டியே அருள்நந்தி சிவம் சிவஞான சித்தியாரில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"ஈசனுக்கு அன்புஇல்லார்,
அடியவர்க்கு அன்புஇல்லார்;
எவ்வுயிர்க்கும் அன்புஇல்லார்
தமக்கும் அன்புஇல்லார்..."

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுட் பகுதிக்கு, ஆசிரியர் மாதவச் சிவஞான சுவாமிகள் வகுத்தருளியுள்ள நயம் செறிந்த நல் உரைப் பகுதி, இக்கருத்துக்கு அரண் செய்தல் காணலாம்.

"காமுகனுவான் ஒரு வனிதை யிடத்தில் அன்புடையவன் என்பது, அவளது உறவினரைக் கண்டவழி அவன்பால் நிகழும் அன்பு பற்றியே தெளியப்படும்; அதுபோல ஈசனுக்கு அன்புடைமை அவனடியவரைக் கண்டுழி நம்பால் நிகழும் அன்பின் அளவு பற்றியே தெளியப்படுமாதலின், அடியவர்க்கு அன்பில்லாத வழி ஈசனுக்கு அன்புடையார்போல் ஒழுகுதல் நாடக மாத்திரையே பிறிதில்லை என்பார், 'அடியவர்க்கு அன்பில்லார் ஈசனுக்கு அன்பில்லார்' என்றார்.

எவ்வுயிர்க்கண்ணும் உளனுகிய ஈசனிடத்து அன்புடையார்க்கே அத் தொடர்பு பற்றி எவ்வுயிர்க்கும் அன்புடையராதல் கூடும் என்பார், 'ஈசனுக்கு அன்பில்லார் எவ்வுயிர்க்கும் அன்பில்லார்' என்றார்.

இவ்விடங்களில் அன்பில்லாதார் தம் உயிர்க்கு உறுதி செய்து கொள்வார் அல்லர் என்பார், 'தமக்கும் அன்பிலார்' என்றார். 'அன்பிலார் எல்லாம் தமக்குரியர்' (திருக்குறள்—72) என்ற இடத்துத் 'தமக்கு' என்றது உடம்பை நோக்கியாகலின், உயிரை நோக்கி ஈண்டுத் 'தமக்கும்' (சித்தியார் 323) என்றதனேடு முரண்படாமை அறிக".

—சிவஞான சுவாமிகள்

(3) அருள்நந்தி சிவாசாரியர், தாம் இயற்றிய சிவஞான சித்தியாரைப் பரபக்கம்-சுபக்கம் என இரு பகுதியாக அமைத்தார். பரபக்கத்தில் புறப்புறம் புறம் அகப்புறம் ஆகிய பல்வேறு சமயங்களை முறையே மறுத்துள்ளார்.

அங்ஙனம் மறுக்கப்பட்ட சமயங்களில் 'சௌத்திராந்திகம்' என்பது ஒன்று. அது புத்த மதத்தின் நால்வகைப் பிரிவுகளுள் ஒன்று. மாத்தியமிகம், யோகாசாரம், வைபாடிகம் என்னும் ஏனைய மூன்று பிரிவுகளிலும், சௌத்திராந்திகம் என்னும் பௌத்தமதப் பிரிவே, தமிழகத்திற் பெரிதும் பரவி யிருந்ததாகலின், அதன் கொள்கைகளை மட்டுமே விரிவாக எடுத்துக் கூறி, அருள்நந்தி சிவம் தமது நூலிற் பெரிதும் மறுத்துரைத் தருளுகின்றார்.

சௌத்திராந்திகம் என்னும் பிரிவைச் சேர்ந்த பௌத்த மதத்தவர்கள், ஊன் உண்ணுதலைக் குற்றமென்று கொள்ளாதவர்கள். சிங்களர் சீனர் முதலிய பௌத்தர்கள் பலரும், மிகவும் விரும்பி ஊன் உண்ணுதலை இன்றும் நாம் காணலாம். நம்மாற் கொல்லப்படாமல், தாமே மூப்பு அடைந்து இறந்து போகும் விலங்குகளின் ஊனைத் தின்னுதல் பாவம் அன்று என்பர் சௌத்திராந்திகர். மணிமேகலை என்னும் நூலில், நாகர் தலைவன் ஒருவனுக்குச் சாதுவன் என்னும் வணிகன், இங்ஙனமே உபதேசம் புரிந்ததாகப் பௌத்தமதச் சார்புடைய ஆசிரியர் சீத்தலைச் சாத்தனுர் பாடியிருப்பது இதனை வலியுறுத்தும்.

மேலும், பிற உயிர்களை வருத்திக் கொல்வதுதான் குற்றமும் பாவமும் ஆகுமே ஒழிய, நாமே கொல்லாமல் பிறர் கொன்று விற்கும் ஊனை விலைகொடுத்து வாங்கித் தின்பது குற்றமாகாது என்பது, அவர்கள் கொள்கை. 'பின்னே நிகழும் தின்கை, முன்னே நிகழும் கொலைக்குக் காரணமாதல் பொருந்தாது! ஆதலின், பிறர் கொன்று விற்கும் ஊனை நாம் விலைக்கு வாங்கித் தின்னலாம்' எனச் சௌத்திராந்திகர் கூசாது கூறுவர்.

சௌத்திராந்திகப் பௌத்தர்களின் இந்தக் கொள்கையும் கூற்றும், திருவள்ளு

வருக்குச் சிறிதும் உடன்பாடு அன்று. எந்நிலையிலும் ஊன் உண்ணுதல் ஆகாது என்பது திருவள்ளுவரின் அறவுரை. 'கொலைக் கருவியைத் தம்கையிற் கொண்டவர்களின் மனம், அதனாற் செய்யும் கொலையையே நோக்குவதல்லது, அருளைச் சிறிதும் நோக்காது; அதுபோல் பிறிதோர் உயிரின் உடலைச் சுவைபட உண்பவர்களின் மனம், அவ்வூனையே நோக்குவதல்லது, அருளை நோக்காது' என்பது திருவள்ளுவரின் துணிபு.

ஊன் தின்னுபவன் ஒருவன், தானே ஓர் உயிரைக்கொலை செய்ய முற்படாவிடினும், பிறர் கொலை செய்து விற்பதனை விலைக்கு வாங்குவதன் மூலம், அவர்களின் கொலைச் செயலுக்கு ஆதரவு அளித்துத் தானே அக்கொலைக்குக் காரணம் ஆகின்றான். ஆதலின், தான் நேரே கொல்லாவிடினும், பிறர் கொன்று விற்கும் ஊனை வாங்கித் தின்னுதலும் தீராத குற்றமே யாகும் என்பது, திருவள்ளுவரின் முடிந்த முடிவான கருத்து.

> "தினற்பொருட்டாக் கொல்லாது
> உலகெனின், யாரும்
> விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்"
>
> "கொல்லான் புலாலை மறுத்தானைக்
> கைகூப்பி
> எல்லா உயிரும் தொழும்"

எனவரும் திருக்குறள்களால், ஆசிரியர் திருவள்ளுவர் சௌத்திராந்திகப் பௌத்தர்களின் கொள்கையினைக் குறிப்பாக மறுத்திருத்தல் காணலாம்.

சைவ சித்தாந்தப் பெருஞ் சான்றோர் ஆகிய அருள்நந்திசிவம், ஆசிரியர் திருவள்ளுவர் "புலால் மறுத்தல்" என்னும் அதிகாரத்தில் அறிவுறுத்தி யருளிய கருத்தை, அழகுற எடுத்துத் தமது நூலில் விரித்துரைத்து, சௌத்திராந் திகப் பௌத்தமதக் கொள்கையினை மறுத்தருள்கின்றார்.

> "தின்னுமது குற்றமிலை
> செத்தது' எனும் புத்தா!
> தின்பை எனக் கொன்று உனக்குத்
> தீற்றினர்க்குப் பாவம்
> மன்னுவதுன் காரணத்தால்;
> தின்னா தார்க்கு
> வதைத்தொன்றை இடாமையினால்;
> வதைத்தவர்க்கே பாவம்
> என்னின், உனை ஊட்டினர்க்குப்
> பாவம் சேர
> என்ன தவம் புரிகின்றாய்!
> புலால் கடவுட்கு இடாயோ?
> உன் உடல் அசுசி என
> நாணி வேறோர்
> உடல் உண்ணில், அசுசி என
> உணர்ந்திலைகாண் நீயே"
>
> —பரபக்கம், 131.

திருக்குறளுக்கும் சைவ சித்தாந்தத்திற்கும் உள்ள சிறந்த தொடர்பையும், சைவ சித்தாந்தச் சான்றோர்கள் திருக்குறளை எங்ஙனம் பெரிதும் மதித்து ஈடுபட்டுப்போற்றிப் பயன் கொண்டனர் என்பதனையும், இது கொண்டும் நாம் இனிது தெளியலாம்.

**உமாபதிசிவம் :**

(1) இவ்வாறே உமாபதி சிவம் என்னும் சைவ சித்தாந்தப் பேராசிரியரும் திருக்குறளைப் பெரிதும் போற்றிப் பின்பற்றியவர் என்பதும், பல சான்றுகளால் புலனாகின்றது. உமாபதிசிவம் தாம் இயற்றிய திருவருட் பயன் என்னும் சிறந்த நூலை, திருக்குறளின் ஒழிபியல் போல, அதன் கண் தனியே வெளிப்படையாகக் கூறாமல் விடுக்கப் பெற்ற வீட்டுப்பால் என்னும் நான்காம் பகுதியை விளக்குவதாய் வெண்பாக்களால் இயற்றியுள்ளார். திருவள்ளுவரின் முறையைப் பின்பற்றித் தமது நூலைப் பத்து அதிகாரங்களாக வகுத்துக் கொண்டு ஒவ்வோர் அதிகாரத்தையும் பத்துப்பத்துக் குறள்களால் அழகுற விளக்கி யருள்கின்றார்,

> அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
> நிகரில் நிற்கும் நிறைந்து. (1)
>
> பிறந்தநாள் மேலும் பிறக்கும்நாள் போலும்
> துறந்தோர் துறப்போர் தொகை. (11)
>
> ஊமன்கண் போல ஒளியும் மிகஇருளே
> யாம்மன்கண் காணா தவை. (19)
>
> அருளிற் பெரிய தகிலத்தில் வேண்டும்
> பொருளிற் றலையிலது போல். (31)
>
> புலன்அடக்கித் தம்முதற்கட் புக்குறுவார், போதார்
> தலம்நடக்கும் ஆமை தக. (94)

எனவரும் திருவருட் பயனின் குறள் வெண்பாக்கள், முறையே அகர முதல

எழுத்தெல்லாம் (1), துறந்தார் பெருமை துணைக் கூறின் (22), பகல் வெல்லும் கூகையை (481), அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை (247), ஒருமையுள் ஆமை போல் (126) என்னும் திருக்குறட் பாக்களின் கருத்துக்களை உள்ளடக்கிக் கொண்டிருத்தல் காணலாம்.

(2) இது மட்டுமோ! உமாபதிசிவம் தாம் இயற்றிய 'நெஞ்சு விடுதூது' என்னும் நூலில், திருவள்ளுவரின் பெயரையே தெளிவாகச் சிறந்தெடுத்துக் குறிப்பிட்டு, அவரைத் தெய்வப் புலவர் எனவும் சிறப்பித்துப் பாராட்டி, அவர் அருளிய திருக்குறள் ஒன்றினை (348) முழுவதாகவே எடுத்துத் தழுவிக்கொண்டு மேற்கோளாகக் காட்டித் தமது நூலில் பாடியுள்ளார்.

"முன்னம்
'தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர்' என்று-நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள்ளு வர்உரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல்..."

இதனால் சைவ சித்தாந்தப் பெருஞ் சான்றோர் ஆகிய உமாபதி சிவத்திற்குத் திருக்குறளில் எத்தகைய பெருமதிப்பும் பேரீடுபாடும் இருந்தன என்பது புலனாகும்.

**திருக்களிற்றுப்படியார் :**

இனி, இம் மூவருக்கும் முற்பட்ட திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார் என்னும் சைவசித்தாந்தப் பெருஞ் சான்றோரும், தாம் இயற்றிய 'திருக்களிற்றுப்படியார்' என்னும் நூலில் இரண்டு இடங்களில் திருக்குறளை முழுமையாக எடுத்துத் தமது நூலிற் பதித்துப் போற்றி விளக்கம் செய்துள்ளனர்.

சார்புணர்ந்துசார்பு கெடவொழுகின் என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமுமாம்—சார்பு
கெடவொழுகின் நல்ல சமாதியுமாம் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று.

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை
என்றமையால்
வேண்டின் அஃதொன்றுமே வேண்டுவது
-வேண்டிலது
வேண்டாமை வேண்டவரும் என்றமையால்
வேண்டிடுக
வேண்டாமை வேண்டுமவன் பால்.

**முடிவுரை :**

இன்னோரன்ன பல சான்றுகளால், திருக்குறளும் சைவசித்தாந்தமும் எத்துணை நெருங்கிய தொடர்புடையன, என்னும் உண்மையை யாவரும் ஆய்ந்துணர்ந்து கொள்ளலாம். திருக்குறளின் சிறப்பையுணர்ந்து, அதனைப் பல சமயத்தவரும் இந்நாளில் போற்ற முற்பட்டுள்ளனர். ஆயினும், சைவ சமய ஆசிரியர்களும் சைவ சித்தாந்தச் சான்றோர்களும் தொன்றுதொட்டே, திருக்குறளைத் தமது விழுமிய வேதப் பெருநூலாகக் கொண்டு ஒழுகி வந்துள்ளனர் என்பது உணர்தற்கு உரியது. சமணர் பௌத்தர் முதலியவர்களும் திருக்குறளைப் போற்றி மேற்கோள் காட்டியுள்ளனர் எனினும், அவர்களின் சமய உண்மைகளும் கொள்கைகளும் ஆகியவற்றில் பற்பல, நமது அருமைத் திருக்குறளின் கருத்துக்களுக்கும் கொள்கைகளுக்கும் பொருந்தாதனவாய் மாறுபட்டு நிற்கவும் காண்கின்றோம். ஆனால் திருக்குறளுக்கு மாறுபட்ட எந்த ஒரு சிறு செய்தியையும், சைவ சமயத் திருமுறைகளிலோ சித்தாந்த நூல்களிலோ யாண்டும் நாம் காண்டல் இயலாது. 'சமுத்திர கலச நியாயம்' என்னும் முறையில், திருக்குறளில் தத்தமக்கு வேண்டிய ஒரு சிலவற்றை மட்டுமே எடுத்துக் கொண்டு, வேண்டாதனவற்றை மெல்ல நெகிழவிட்டுவிடும் பிற பல சமயத்தவர்களைப் போல்வதன்று சைவ சித்தாந்தம்! திருக்குறளில் நூற்றுக்கு 20–30–40 விழுக்காடு வரையில் மட்டுமே எடுத்துக்கொண்டு ஏனைய பகுதிகளைப் புறக்கணித்துவிடும் ஒருசில சமயங்கள் போலாமல், திருக்குறளை நூற்றுக்கு நூறு (Cent per cent) ஏற்று உடன்பட்டுத் தழுவிப் போற்றி நிற்பது தமிழ் மக்களுக்கேயுரிய சைவ சித்தாந்தமேயாம் எனச் சற்றும் தயக்கம் இன்றிக் கூறலாம். (தொடரும்)

—ஆசிரியர்.

---

மதுரைத் திருவள்ளுவர் கழக வெள்ளி விழாவில், அருட்டிரு. குன்றக்குடி அடிகளார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில், ஆற்றிய சொற்பொழிவினைத் தழுவியது (9—7—67) —ஆசிரியர்.

# "மனத் தூய்மை"

சமயம் என்பதனை வாழ்க்கையில் ஒரு கூறாகவே, நம்மிற் பலர் கருதுகின்றோம். ஆனால் உண்மைச் சமயமே வாழ்க்கை, உயர்ந்த வாழ்க்கையே சமயம் என்று நம்முடைய பெரியோர்கள் அறிவுறுத்தி வந்துள்ளனர்,

நம்மையும், நம்முடைய வாழ்க்கையையும் நன்கு இனிது **சமைப்பது** (பக்குவப் படுத்துவது) எதுவோ, அதுவே **சமயம்** எனப்படும். உண்மைச் சமய உணர்வு மனிதனைப் புனிதனாக்கி, வையத்து வாழ்வாங்கு வாழச்செய்து, தெய்வ நிலைக்குக் கொண்டு செல்லுகின்றது.

சமயம் என்பது **அறம்** அல்லது நல்**லொழுக்கம்** என்பதனோடு பெரிதும் தொடர்புடையது. நல்லொழுக்கம் ஆகிய **அறமே சமயம்** என்றும் சொல்லலாம்.

சமயம் என்பது வெறும் சடங்குகளும் கோட்பாடுகளும் மட்டுமேயன்று. நம்மை நாமே பலவகைகளில் தூய்மைப் படுத்திக் கொள்ளத் தலைப்படும் முயற்சியே சமயம் ஆகும். "மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்" எனத் திருவள்ளுவரும் குறிப்பிடுதல் காணலாம்.

தமிழ் நாட்டில் தோன்றியருளிய மெய்ஞ் ஞானச் சான்றோர்கள் பலர். அவர்களுள் **பட்டினத்தடிகள்** ஒருவர். பட்டினத்தாரின் பெருமையினை வியந்து, வேதாந்த சித்தாந்த சமரச ஞானச் செல்வர் ஆகிய தாயுமான சுவாமிகள்,

> "பார் அனைத்தும் பொய் எனவே
> பட்டினத்துப் பிள்ளையைப் போல்
> ஆரும் துறக்கை அரிது, அரிது."

எனப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்:

அத்தகைய சான்றோர் ஆகிய பட்டினத்தடிகள், நம மனத்திற் படிந்து படர்ந்து கிடக்கும் அழுக்குக் குப்பைகளையும், அவற்றைக் களைந்து கழித்துத் துப்புரவு செய்யும் முறைகளையும் பற்றித் தம்முடைய பாடல் ஒன்றில், அழகுறக் குறிப்பிட்டருளுகின்றார்.

நமமுடைய மனம் ஒரு சிறந்த அற்புதமான கருவி. மிகவும் புனிதம் வாய்ந்தது. நாம் அதனைப் பயன்படுத்துவதற்கு ஏற்ப, அஃது உயர்ந்ததாகவோ, இழிந்ததாகவோ அமைகின்றது.

நம்முடைய மனம் ஒரு சிறந்த மாளிகையாக விளங்கத் தக்கது. அதனை நாம் ஒரு தொழுவம் அல்லது மாட்டுக் கொட்டில் ஆகச் செய்து விட்டிருக்கின்றோம். அங்கே காமம், **வெகுளி**, **மயக்கம்** முதலிய அழுக்குக் குப்பைகள் நீண்ட காலமாக நிரம்பிக் கிடக்கின்றன. மனம் ஆகிய புனித இடத்தைத் தொழுவம் ஆக மாற்றி, அங்கே மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகள் ஆகிய கரிய எருமைக் கடாக்களைக் கட்டி வைத்திருக்கின்றோம். அத்தொழுவம் மிகவும்இருள்படர்ந்து கிடக்கின்றது. அதன் தரையோ அசுத்தம் நிறைந்து காணப்படுகின்றது.

பட்டினத்தார், **பாழறை** ஆகிய அத் தொழுவத்தினை வந்து பார்க்கின்றார். மிகவும் வருந்துகின்றார். அதனைத் தூய்மைப் படுத்த முனைகின்றார். **காமம், வெகுளி, மயக்கம்** ஆகிய குப்பைகளை யெல்லாம் அரிதின் முயன்று போக்குகின்றார். ஐம்பொறிகளாகிய ஐந்து கடாக்களையும் அவிழ்த்து அகற்றி விடுகின்றார். **அன்பு** கொண்டு மெழுகி, அங்கேயிருந்த மேடு

பள்ளங்களைப் போக்கித் துப்புரவு செய்கின்றார். அருளுணர்வு என்னும் ஒளி விளக்கை ஏற்றி வைத்து, அறியாமை என்னும் துன்ப இருளை ஓட்டுகின்றார். உண்மை என்னும் விதானம் விரித்துப் பரப்பி, அப் பாழறையை அழகு படுத்திப் பள்ளியறை ஆக்குகின்றார். அங்கே ஒரு நல்ல கணவனையும் மனைவியையும் குடியேற்றி வைக்க விரும்புகின்றார். அதன்கண் இருதய கமலம் என்னும் செழுமலர்ப் பூந்த விசு ஆகிய கட்டில் ஒன்றைக் கொணர்ந்து இடுகின்றார். அக்கட்டிலின்கண், இமயக் கொழுந்து ஆகிய பார்வதி தேவியையும் உடன் அழைத்துக்கொண்டு வந்து, எழுந்தருளியிருக்கும்படி சிவபெருமானைப் பட்டினத்தார் வேண்டிக் கொள்ளுகின்றார்.

" கருமுதல் தொடங்கிப் பெருநாள் எல்லாம்
காமம் வெகுளி கழிபெரும் பொய் எனும்
தூய்மையில குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
அரிதின் இகழ்ந்து போக்கி; பொருதிறல்
மையிருள் நிறத்து மதனுடை யடுசினத்து
ஐவகை கடாவும் யாப்பவிழ்த்து அகற்றி;
அன்பு கொடு மெழுகி; அருள்விளக்கு ஏற்றி;
துன்ப இருளைத் துரந்து; முன்புற
மெய் எனும் விதானம் விரித்து; நொய்ய
கீழ்மையிற் றொடர்ந்து கிடந்த என் சிந்தைப்
பாழறை உனக்குப் பள்ளியறை ஆக்கி;
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவிசு
எந்தை நீ இருக்க இட்டனன்;.........
நின்
செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற
அமையாக் காட்சி இமையக்
கொழுந்தையும் உடனே கொண்டிங்கு
எழுந்தரு ளத்தகும் எம்பெரு மானே "

என்பது பட்டினத்தார் பாடியுள்ள அழகிய தொரு பாடல்.

பட்டினத்து அடிகளார் கூறுவது போல, நாமும் நமது பாழறையாகிய மனத்தைப் பார்வதியும் பரமேசுவரனும் ஒருங்கே எழுந்தருளி விளங்கத் தகுந்த சிறந்த பள்ளியறையாகும் வண்ணம், பல்லாற்றானும் தூய்மை செய்து கொண்டு, தொழுது உய்ய முயலுவோமாக.

—ஆசிரியர்.

---

## செய்திச் சுருக்கம்

**ஏகதின லட்சார்ச்சனை:**

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை ஸ்ரீ தாயுமான சுவாமி கோயிலில், உச்சிப் பிள்ளையாருக்கு விசேட அபிஷேகமும், ஏகதின லட்சார்ச்சனையும், சிறப்புற நடைபெற்றன. தஞ்சைத் துணை ஆணையர் திரு. டி. என். சிங்காரவேலு, பி. ஏ. பி. எல்., அவர்கள் கலந்து கொண்டார்கள் (15—10—67).

**ஞானபிடேக நாள் விழா:**

காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப் பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் ஞானபிடேக நாள் விழா 12-10-67 விஜயதசமி அன்று மிகவும் சிறப்புற நடைபெற்றது.

**சித்தாந்த சைவமாநாடு:**

திருவாவடுதுறை ஆதீனம் 22-ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் அவர்கள் திருவுளப்படி 12—10—67— அன்று விஜய தசமியில் திருவெண்ணெய் நல்லூரில் சிறப்புற நடைபெற்றது.

# ஞான சித்தர்களும் சித்த மருந்தும்

(திரு. வி. பலராமையா அவர்கள், பி.ஏ.,பி.எல்.,
பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட், சென்னை-8)

இதற்குமுன் சொன்னதுபோல் தைலங்கள் பல மூலிகைகளின் சாற்றைச் சேர்த்துச் செய்து கொள்ளலாம். அவைகளில் முக்கியமாக, கீழாநெல்லி, கரிசலாங்கண்ணி (கையாந்தகரை), மணத்தக்காளி, பொன்னுங்கண்ணி, நெல்லிக்காய் முதலிய மூலிகைகளில் ஏதாவதொன்றின் சாறு, பசும்பால், நல்லெண்ணெய் எல்லாம் சம அளவு சேர்த்துக் காய்ச்சித் தைலம் செய்து கொள்ளவும். இம் மூலிகைகளின் பரிசத்தால் திரிதோஷ சமனம் உண்டாகும்.

மற்றொரு முக்கியமான விஷயம் இச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். சிலருக்குச் சுரம் (காய்ச்சல்) தாக்கும் போது தலைகனத்து விடும். இந்தத் தலை கனம் சாதாரணமாகப் பல நாட்கள் நீடிக்கும். கண்களின் மேல் பாகங்களில் கனத்துத் தோன்றும். எத்தனை மருந்துகள் உண்டபோதிலும் இந்தக் கனம் விரைவில் குணமாகாது. இந்தக் கனம் வருவதற்குப் பல காரணங்களுண்டு. அதில் முக்கியமானது அதிக வெப்பத்தால் தாக்கப்படுவது. இதை ஆங்கிலேயர் (Sun Stroke) தாங்கமுடியாத சூரிய வெப்ப நோய் என்பர், இதற்கு வெகு சுலபமானதும், உபாயமானதுமான சாதனம் ஒன்று குறிப்பிடுகிறேன். இதைக் குறிப்பாகக் கவனித்து இப்பிணியை நீக்கிக் கொள்ளும்படி வாசகர்களை வேண்டுகிறேன்.

ஒரு மிளகின் மேல் உள்ள கருப்புத் தொலியை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். எங்காவது பால் 10, 20சொட்டுவாங்கி வரச் செய்யுங்கள். 5, 5 சொட்டுகள் பாலைச் சுத்தம் செய்த சந்தனக் கல்லிலிட்டு மேற்படி மிளகை மத்திக்கவும். மிளகு பாதி பங்கு தேய்ந்த அளவில், மேற்படி தேய்வு கொண்ட கல்கத்தை எடுத்து மிகுதிப் பாலில் கலக்கி இருகண்களில் விடவும். கண்களைத் திறந்து கொண்டு மருந்தைச் செலுத்திக் கொள்ளச் சிலர் அஞ்சுவர். அப்படியன்றிக் கண்களை மூடிக் கொள்ளச் செய்து மூக்கின் அடிப்பாகத்தின் மேல் இரு கண்களின் குழியில் பால் விழும்படி செய்து பிறகு கண்களைத் திறந்து மூடச் செய்யவும். கண்கள் திறந்ததும் 'பக்' என்று எரியும். அந்த எரிச்சல் அரை நிமிடங்கூட நிற்காது. கண்களைத் திறந்து திறந்து மூடச் செய்யவும்.

இப்படிச் செய்வதினால் கபாலத்திலுள்ள விஷநீர் கண்கள் வழியாய்க் கீழே இறங்கி விடும். உடலிலுள்ள விஷநீர் தலைக்கேறுவதனால்தான் தலைகனம் உண்டாகிச் சுரம் உண்டாகிறது. இதைச் சில டாக்டர்கள் அறியாமல் வாரக் கணக்கில் ஊசிகளைக் குத்தி நோயாளிக்கு நோயை உற்பத்தி செய்கின்றனர். தலைகனம் உண்டான காலங்களில் எவ்விதமான எண்ணெயை யாவது, தைலங்களையாவது தலையில் தடவுதல் கூடாது. தாய்ப்பால் மிளகு உபாயத்தை வாசகர்கள் தங்களுக்கு உபயோகித்துக் கொள்வதல்லாமல் தங்கள் நண்பர்கள், சுற்றத்தார்கள் எல்லோருக்கும் தெரியப்படுத்தும்படி வேண்டுகிறேன். இந்த சிகிச்சைக்கு வெகு சாதாரணமாக வாசகர்களுக்குத் தோன்றிப் புறக்கணித்து விடக் கூடாதென்பதறகாகவே பன்முறை திரும்பத் திரும்ப வற்புறுத்துகிறேன்.

மற்றும் சில இளம் வயதுள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் தலையில் முடி திட்டு திட்டாகக் கொட்டி விகாரம் ஆகி விடும். இதற்குப் பலர் டாக்டர்களிடம் புரதச் சத்தான (Calcium) மருந்துகளை ஊசியின் மூலமோ, உள்ளுக்குச் சாப்பிட்டோ பலனடையாமல் போகிறார்கள். இவ்வியாதியைக் குணப்படுத்த டாக்டர்கள் தேவையில்லை. கடையில் விறகும் மருந்துகள் தேவையில்லை. வீட்டிலேயுள்ள வெங்

காயம், வெள்ளைப்பூண்டு, தேன் இவைகளே போதுமானது. வெள்ளைப்பூண்டின் தோல் நீக்கிய ஒரு பல்லை எடுத்துக் கொண்டு, சந்தனக் கல்லில் தேன் விட்டு உறைத்து அந்தக் கல்கத்தை முடி உதிர்ந்த இடங்களில் லேசாகத் தேய்த்து விட்டுவிடவும். இப்படி 10, 20 நாட்கள் தேய்க்கக் கரு, கருவென்று முடி வளர ஆரம்பித்து விடும். தேன்பட்டால் முடி நரைத்து விடுமென்று சிலர் கருதுவது பிசகு. ஆகவே பயமின்றித் தேய்க்கலாம். வெங்காயத்தைக் கத்தியால் ஒரு பக்கம் வெட்டி ஈரமுள்ள பாகத்தை முடி உதிர்ந்த இடத்தில் அப்படியே தேய்ப்பது இரண்டாவது முறை. இதற்குத் தேன் தேவை இல்லை. இவ்விதம் செய்வதினுலும் முடி வளர ஆரம்பித்து விடும்.

இளம் வயதிலேயே சிலருக்கு முடி நரைக்க ஆரம்பித்து விடும். இது மிக்க துக்ககரமான விஷயம். இந்த நரைமுடி ஒன்றிரண்டு தெரிந்த உடனே கீழ்க்கண்ட தைலத்தைச் செய்து கொண்டு என்றும் எப்பொழுதும் உபயோகித்து வந்தால் நரை மாறிவிடும். மேலும் அதிகரிக்காது. இந்தத் தைலத்தைப் பிரதி தினமும் ஆண்களும் பெண்களும் எந்த வயதாயினும் உபயோகித்து வருவதினுல் நரை விரைவில் வராதபடி தடுப்பதுடன் பித்தம், கிறுகிறுப்பு முதலிய வியாதிகள் வராது.

**கருவேம்பின் தைலம்:**

தேங்காய் எண்ணெ ½ கிலோ
கருவேப்பிலை அரைத்த
கல்கம் 1 பெருவடை அளவு.
(முடிந்தால்) பசும்பால் ½ படி
(இல்லாவிடினும் பரவாயில்லை)

இந்தத் தைலங்களைக் காய்ச்சி வைத்துக் கொள்ளவும். சடசடப்பு அடங்கியவுடன் அடுப்பிலிருந்து இறக்கிப் பச்சைக் கர்ப்பூரம் ஒரு சிட்டிகை அதில் போட்டுக் கலக்கி ஆறவைத்துப் புட்டியில் அடைத்துக் கொள்ளவும்.

நரைமுடியுள்ளவர்க்கு மருதோன்றித் தைலம்:—

இத்தைலம் தடவுவதால் நரையின் வெண்மை நிறம் மாறுபட்டுத் தோன்றும். இதைப் பிரதி தினமும் உபயோகிக்கலாம்.

முன் சொன்ன கருவேம்பின் தைல முறையிலேயே இதையும் செய்து கொள்ளவும். இந்தத் தைலத்தால் தலையில் வரும் சுண்டு பொடுகு முதலியவைகளும் நீங்கும். வெள்ளை முடியும் நிறம் மாற்றத்துடன் விளங்கும்.

—தொடரும்.

## செய்திச் சுருக்கம்

**நவராத்திரி விழா :**

1. இளையாற்றகுடி கைலாசநாத சுவாமி கோயில்.
2. சென்னை ஏகாம்பரேசுவர் கோயில்.
3. சென்னை ஸ்ரீ கபாலீசுவரர் கோயில்.
4. திருஆனைக்கா ஜம்புகேசுவரர் கோயில்.
5. கிருஷ்ணராயபுரம் திருக்கண் மாலீசுவரர் கோயில்.
6. தேனும்பேட்டை பாலசுப்பிரமணியர் கோயில்.
7. வேளூர் வைத்தியநாத சுவாமி கோயில்.
8. திருப்பத்தூர்—மடவளாகம் அங்கநாதீசுவரர் கோயில்.
9. காஞ்சிபுரம் ஆதிபீடப் பரமேசுவரி காளிகாம்பாள் கோயில்.
10. திருவெண்காடு சுவேதாரண்யேசுவரர் கோயில்.
11. திருவண்ணமலை அருணசலேசுவரர் கோயில்.
12. மதுரை மீனுட்சி சுந்தரேசுவரர் கோயில் கலை விழா (4—1—67)

# ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரை

திரு. கே. பட்சிராஜன், பி,ஏ., பி.எல்., திருநெல்வேலி.

(முற்றொடர்ச்சி)

எல்லோரும் அந்த ஊமைப் பிள்ளையிடம் என்ன விசேஷம் அங்கே எனக் கேட்க அவன், ஸ்ரீஸேனபதி யாழ்வான் பெருமாள் நியமனப்படி நம்மாழ்வாராக அவதரித்தார். அதனால்தான் அவரை இங்கே காண் கின்றிலோம் எனப் பேசிக் கொண்டனர் என்று விடையிறுத்தானும். உடையவர் பெருமை இங்ஙனே பலராலும் ஒளி விளக் கப் பெற்றது.

ஸ்ரீமந்நாதமுனிகள் முதலாக வந்த ஆசார்ய பரம்பரையில், இவருக்கு மட்டும் என்ன ஏற்றம் என வினவலாம். பெருமாள் எத்தனையோ அவதாரங்கள் எடுத்தும் அதிலே பத்து அவதாரங்கள் பேர்பெற்று, அப்பத்திலேயும் ராம கிருஷ்ணவதாரங் கள் அதிமுக்கியத்துவம் பெற்றுத் திகழ வில்லையா? பெருமாள் எழுந்தருளியுள்ள திவ்ய தேசங்கள் எல்லாம் அவன் எழுந் தருளியுள்ளதனால், ஒரே பெருமை யுடை யனவாயினும், கோயில், திருமலை, பெரு மாள் கோயில், திருநாராயணபுரம் இவை வெகுவாகக் கொண்டாடப் படுகின்றன வன்றோ? ரிஷிகள் யாவருமே மஹான்களா யினும் வியாசர், பராசரர், சுகர், சௌனகர், நாரதர் இவர்கள் தனிப் பெருமையோடு பேசப் படுகிறார்களல்லவா? ஆழ்வார்கள் அனைவரும் ஒத்திருக்க நம்மாழ்வாருக்கு ப்ராதான்யம் உண்டாயிருக்க வில்லையா. அதுபோல ஆசார்ய கோஷ்டியிலே உடை யவருக்குத் தனி மதிப்பு ஏற்படுவதில் வியப் படையவேண்டியதில்லை யன்றோ.

ஸ்ரீராமாவதாரத்திற்குப் பிராதான்யம், அபயப்பரதானம் அருளிச் செய்தமையும், ஏழைஏதலன்கீழ்மகன்என்னது,புளிஞனை குகனோடு சீரணிந்த தோழமை கொண்ட தும்,திர்யக்கான கழுகரசன் பெரிய உடை யாருக்கு (சடாயுவுக்கு) பிரம்ம மேதத் தாலே சம்ஸ்காரம் செய்து திருப்பள்ளி படுத்தமையும், ஸ்ரீசபரி கையிலே வயிறார உண்டமையும், பரத்வாஜர் அமைத்த விருந்தில் கலந்து கொள்ளாது, பரதனுக் குத் தம் வரவு அறிவிக்கச் சென்ற மாருதி திரும்ப வந்து பரதனது நலம் கூற மகிழ்ந்து தன் அருமைத் தம்பியின் ஆரு யிர் காத்த நன்றி தோன்ற மாருதியோடு உடனமர்ந்துண்பன் நான் என்ற ஒண் பொருளும் ஆகிய இவற்றாலே.

ஸ்ரீகிருஷ்ணவதாரத்துக்கு ஏற்றம்:— அகல்ஞாலத்து அறிவினால் குறைவில்லா அவர் அறிய நெறி யெல்லாம் எடுத் துரைத்து முடிவில் சரமச்லோகத்தை வெளியிட்டமையும், பீஷ்மத்ரோணாதிகள் வேண்டி நிற்க, அவர்கள் மனைக்கு ஏகா மல் ஸ்ரீவிதுரர் திருமாளிகைக்கு எழுந் தருளி அங்கு அவரிட்ட அற்ப உணவைப் பரம போக்யமாகப் புகழ்ந்து ஏற்றமையும், சத்ருவின் அன்னம் உண்ணத் தக்கதன்று எனக் காட்டியமையும், இடையரோடு ஒக்கக் கலந்து பரிமாறித் தன் எளிவரும் இயல்பை வெளியிட்டமையும் ஆகிய இவையும் பிறவும்.

கோயிலுக்கு ஏற்றம்:—பக்தனான பாணனை லோகசாரங்கர் திருத்தோள் களிலே ஏற்றியருளி ஜாதி கர்வம் தவிர்த் தமையும், திருப்பாணாழ்வாரோடு கலந்து பரிமாறித் தம் அவயவ சோபையனைத்தை யும் அவருக்குக் காட்டியருளினமையும்.

திருமலைக்கு ஏற்றம்:—குறும்பறுத்த நம் பிக்கும் தொண்டைமான் சக்கரவர்த்திக் கும் வார்த்தை யருளினமையும், மண்ணும் விண்ணும் வந்து ஒக்கத் தொழ எழுந் தருளியுள்ளமையும்.

பெருமாள் கோயிலுக்கு ஏற்றம்:—திருக்கச்சி நம்பிகளோடு முகமுகமாக முறுவலித்து உரையாடுகையும். உடையவரை வேடனுக வந்து காப்பாற்றி உலகுய்ய அளித்தமையும்,

திருநாராயணபுரத்துக்கு ஏற்றம்:—ஸுசரிததநயன் பக்கல் அன்புப் பெருக்காலே தனக்கு ஸமர்ப்பிக்கப் பெற்ற அன்னத்தை அவனை யுண்பித்து வாழ்வித்தமையும், உடையவர் என் செல்வப் பிள்ளையோ என்று எடுத்து வைத்துக் கொஞ்சும் வண்ணம் பாதுஷா காணத் தளர் நடை யிட்டுச் சென்று அவர் மடியேறி யமர்ந்தமையும்.

ஸ்ரீவேத வியாசருக்கு ஏற்றம்:—வேதங்களைச் சிக்கறுத்து, "சிறையிருந்தவளது சடையாய்க் கிடந்த கூந்தலைத் தேவமாதர் சிக்கறுத்து ஒழுங்கு படுத்தியதுபோல, ஒழுங்கு படுத்தியமையும், வேதங்களின் ப்ரம்ம பாகத்திலே புருஷ ஸூக்தம், சாந்தோக்யம், வாஜஸனேயம், தைத்திரியம், ஸ்வேதாஸ்வதரம், மஹோபநிஷத் முதலியவற்றில் ப்ரம்ம ஸ்வரூபம் கூறப் பெற்றவற்றை யெல்லாம் ஸவிஸ்தாரமாக்கி யருளினமையும், வேத உபப்ரம்மணங்களான புராணங்களாலும், இதிஹாஸமான மகாபாரதத்தாலும் பரமாத்மாவின் புகழைப் பரக்கப் பேசி முடிவில்,

உண்மை உண்மை மீண்டுமுண்மை என்றியான்
பல்காலுமே
கூயர என்கை சிரமுயர்த்தி உச்சிநின்று
கூவுவேன்
திண்மையான மறைகளன்றிச் சீர்மைசான்ற
நூலிலை
தேவுதம்மில் கேசவற்கு நேருமிக்கு மில்லையே!

எனப் பொருள் கூறலாம்படியான "ஸத்யம் ஸத்யம் புனஸ்ஸத்யம் உத்ருத்ய புஜமுச்யதே: வேதாச்சாஸ்த்ராத் பரம் நாஸ்தி நதைவம் கேசவாத் பரம்" என்று அறுதியிட்டுப் பரதத்துவ நிர்ணயம் செய்தமையும்.

ஸ்ரீபராசரருக்கு மேன்மை:—"புராணேஷு வைஷ்ணவம்" என வைதிகர் போற்றும் ஸ்ரீவிஷ்ணு புராண ரத்னத்தில் சித் அசித் ஈச்வரன் என்ற மூன்று தத்வங்களையும் பரக்க விவாதித்து நிலை நாட்டியவள்ளலாதலின்,

ஸ்ரீசுகப்பிரம்ம ரிஷிக்கு ஏற்றம்:—ஸ்ரீபரிக்ஷித்து மகாராஜனுக்கு ஸ்ரீபாகவதத்தை யருளிச் செய்து அதிலே தத்வ நிர்ணயம் செய்கையாலும் "சுகோமுக்த:" என்று ஜீவன் முக்தனென பெருமை யுடையவராதலாலும்.

ஸ்ரீசௌனகருக்குப் பெருமை:—நைமிசாரண்யத்திலேதீர்க்கசத்ரயாகத்திலேஸ்ரீசூத முனிக்கு வியாசாஸனமான ப்ரம்மாஸனமிட்டுத் தாம் தாழ நின்று ஸ்ரீவிஷ்ணு தர்மோத்தரம் முதலான பலவிடங்களிலும் தத்துவங்களை நிலை நாட்டியமையால்.

ஸ்ரீநாரத பகவானுக்கேற்றம்:—

இரு புயங்களில் சங்கொடும் ஆழி
பொறித்தொளிர் எழிலமர் சின்னம்;
புருடஉத்தமன் பெயர்களே பாடிடும்
புண்ணியவாய் உயர்ந்தோங்கி
மருவு நெற்றியில் புண்டரம்; மார்பினில்
தாமரைக் காய்மணி மாலை
திருவின் நாயகற்கு அடியவர் என்பது
காட்டுமால் யான்அவர்க்கு அடியேன்

எனப் பொருள் குறிக்கும் "புஜயுகமபி சிஹ்நைரங்கிதம் யஸ்ய விஷ்ணோ: பரம புருஷ நாம்நாம் கீர்த்தனம் யஸ்யவாசி: ருஜுதரமபி புண்ட்ரம் மஸ்தகே யஸ்ய கண்டே ஸரஸிஜமணிமாலா யஸ்யதஸ்யாஸ்மிதாஸ:" என்ற சுலோகத்தால் தனது வைஷ்ணவர்க் கடியனும் தன்மையை வெளி யிட்டமையும், பெரியாழ்வாரும் அவரைச் "சேமமுடைய நாரதனார்" என்று புகழ்ந்தமையும்.

நம்மாழ்வாருக்குப் பிராதான்யம்:—ஆயிரம் கிளை கொண்ட வேதங்களின் பொருள்களைத் தமது நாலு ப்ரபந்தங்களிலே வடித்தமையும், அவற்றையும் பிற அருளிச் செயல்களையும் ஸ்ரீமந்நாத முனிகளுக்கு நேர்முகமாக அருளிச் செய்து உலகை உய்வித்தமையும் "பயிலும் சுடரொளி" "நெடுமாற் கடிமை" என்ற பதிகங்களில் பாகவதர்களின் பெருமையை வெளியிட்டதன்றித் தோல்புரையே போகும் வர்ண உயர்வு தாழ்வுகளை உதறி யெறிந்து மர்மஸ்பர்சியாய் அனைவர்க்கும் ஒத்ததான ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணங்களையும் தத்துவங்களையும் யாவரும் அறியும்படி வெளியிட்ட

மையும், அதன் மூலம் தர்சனத்தை நிலை நிறுத்தியமையும்.

உடையவர் கீழ்ச் சொன்ன அனைவர் மேன்மையையும் பெற்றுப் பெருமாள் அருளிச் செய்த அபயப்ரதானத்தை விளக்கமாக அருளிச் செய்கையாலும், கீதாசார்யன் அருளிய சரமச்லோகத்தைத் தன் ஆன்ம நாசத்தையும் பொருட்படுத்தாது அனைவர்க்கும் அருளியதனுலும், ரிஷிகள் வாக்காக வந்த ப்ரமாணங்களுக்கு உண்மை உரை கண்டருளியமையாலும், திவ்யப்ரபந்தங்களில் பொதிந்துள்ள உட்பொருள்களை வெளிப்படுத்தி யமையாலும்,திவ்யப்ரபந்தங்களின் உட்பொருள்களையும், ஸ்ரீமந் நாதமுனிகள் ஸ்ரீஆளவந்தார் இவர்கள் அருளியவற்றையும் துணைகொண்டு சூத்ரபாஷ்யங்களை அருளி வேதங்களில் உள்ள சகல வாக்யங்களையும் பொருள் பொதிந்ததாகக் காட்டி அனைத்தையும் ஒருங்கவிட்டு உரை கண்டமையும், அத்தகைய ஸ்ரீபாஷ்யத்தாலும், தாமியற்றிய கத்யத்ரயத்தாலும் எல்லாப் புன்மதியாளரையும் வாயடைத்துத் தர்சனத்தை "எம்பெருமானுர் தர்சனம்" என்னும்படி பண்ணியமையாலும் இவர் அனைவரிலும் மேன்மை யுற்றவரன்றோ. மேலும்,

'கு' என்பது இருளைக் காட்டும்
'ரு' என்பது ஒழிப்பைக் கூறும்
உன்னகத்திருளை ஒழித்தொளி யூட்டும்
அன்னவன் 'குரு' வென்றறைந்திடும் நூல்கள்

என்றபடி அனைவர்க்கும் அகவிருள் நீங்க உதவிய அண்ணல் உடையவர் அகில உலகுக்கும் குருவென்பதில் ஐயமிருக்க வழியில்லை. அத்தகைய குருவான உடையவரை "மாறன் அடிபணிந்துய்ந்தவன்" என்று போற்றினர் திருவரங்கத்தமுதனர். மாறனுக்கும் உடையவருக்கும் இடையே எத்தனையோ ஆசார்யர்கள் இருந்திருப்பினும், இவருக்கு நேரே ஆசாரியர் பெரிய நம்பிகளான போதிலும், "கலியும் கெடும் கண்டு கொண்மின்" என்று தம் பிரபந்தத்திலே நம்மாழ்வார் உடையவரைக் குறிப்பாகக் காட்டியபடியாலும், நாதமுனிகளுக்கு பவிஷ்யதாசார்ய விக்ரகம் என்று உடையவருடைய விக்ரகத்தை யருளுகையாலும் உடையவர் ஆழ்வாருக்கு நேரே சிஷ்யர் என்று கூறுதல் தவறில்லை. இங்ஙனம் நம்மாழ்வாருக்கு நேர்சீடனும் வைபவத்தால் இவருக்கு முன்னையரான பெரிய நம்பிகள் முதலான பூர்வாசாரியர்கள் இவரது சம்பந்தத்தாலே ஏற்றமுற்றனர். ஆழ்வான் ஆண்டான் முதலானவர் இவரது சீடராகும் பேறு பெற்றுர்கள். ஆகவே தமக்கு முன்னையர் பின்னையர் அனைவர்க்கும் ஆசார்யர் என்னும்படியான பீடு பெற்றுர் உடையவர்.

ஆன்ம உஜ்ஜீவனத்துக்கு ஆசார்யன்திருவடிகளை யன்றி வேறு சிறந்த தஞ்சமில்லை. இப்பொருளை ஸ்ரீஆளவந்தார் அனுஷ்டித்துக் காட்டினுர். எங்ஙனே என்னில் ஸ்ரீமணக்கால் நம்பி, ஸ்ரீஉய்யக் கொண்டார் இவர்கள் உகந்த வழிப்பின் சென்று அனைத்தும்நாதமுனிகள் கடாக்ஷம் என்றே தாம் த்யானம் செய்து, இங்கும் அங்கும் ஆசார்யனிடம்நன்றியையே பேணிஒழுகுங்கள் என்றே அவர்உபதேசித்தார். இவ்வுண்மையைக் கடைப் பிடித்து ஒழுகியவரில் தலைசிறந்த உதாரணமாக ஸ்ரீமதுரகவியாழ்வாரைக் காட்டுவர் ஸ்ரீஆளவந்தார். "பெருமாயன் என் அப்பனில், நண்ணித் தென் குருகூர்நம்பி என்றக்கால்அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே" என்றும் "தேவுமற்றறியேன் குருகூர்நம்பி பாவினின்னிசை பாடித்திரிவனே" என்றும் பகவத் தத்துவத்திலும் தம் ஆசார்யனுன நம்மாழ்வார் திருவடிகளே தஞ்சமெனக் கொண்டு பேறுபெற்றவரன்றோ அவர்! இவ்வுண்மையைக் கடைப்பிடித்து நம்பிக்கையோடிருப்பவர் "பதிவைகுந்தம் காண்மினே" என்று தம் பிரபந்தத்தைத் தாம் பெற்ற வைகுந்தத்திலிருந்து பாடியது போன்றல்லவா பாப்பயன் கூறியருளினுர். இவ்வுண்மைகளை எல்லாம் உடையவர்மேல் நாட்டிவிருந்த காலையில் பிற ஆசார்யர்களுக்கு உபதேசித்து, "இது ஸ்ரீஆளவந்தார் கூறியது கொண்டு சொன்னேன். ஒரு நாளாகிலும் அம்மகானது திவ்ய கோஷ்டியில் இருக்கப் பெற்றேனுகில் இருப்பின் பரமபதத்துக்கும் பூமிக்கும் ஒரு சுழற்படி கட்டி விடேனுே" என்றருளிச் செய்தார்.

ஒருக்கால் உடையவர் கோஷ்டியில் அபயப்ரதானம் அருளிச் செய்யாநிற்க,பிள்ளை

(தொடர்ச்சி 35ஆம் பக்கம் பார்க்க)

# சைவசமயத்தின் அடிப்படைக் கொள்கைகள்

திருமுறைக் காவலர். திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார் M.A., சென்னை.

முப்பொருள் உண்மை :

(1) கடவுள், உயிர்கள், கட்டு (பதி, பசு, பாசம்) என்னும் மூன்று பொருள்கள் அநாதியாக உள்ளன. அவைகளுக்கு உற்பத்தி என்பதும், அழிவு என்பதும் இல்லை. உயிர்களும் கட்டும் கடவுளால் சிருஷ்டிக்கப் பட்டவையல்ல.

(2) கடவுள் ஒருவர்; உயிர்கள் எண்ணில் லாதன; பாசம், ஆணவம் கன்மம் மாயை என மூவகைப்படும்.

(3) கடவுளும் உயிர்களும் அறிவுடைய பொருள்கள். கடவுளுக்கு எல்லையில்லாத ஆற்றல், முற்றறிவு முதலிய எட்டுக் குணங்கள் உண்டு. கடவுள் என்னும் சொல், எல்லாவற்றையும் கடந்தவர்; எல்லாப் பொருள்களையும் உள்ளே இருந்துசெலுத்துபவர் எனப்பொருள்படும். சைவ சமயத்தில் கடவுளுக்குச் சிவன் என்னும் பெயரே சிறப்புப் பெயராக வழங்கப்படுகிறது. உயிர்கள் அநாதியே பாசத்தால் கட்டுப்பட்டவை; தாமேயறியும் தன்மையில்லாதவை; அறிவிக்க அறியும் இயல்புடையவை. பாசத்தின் ஒரு பகுதியான ஆணவம் உயிர்களை அநாதியே பற்றிக்கொண்டு, அவற்றின் அறிவு, இச்சை, செயல்கள் வெளிப்படாத படி மறைத்துத் துன்பம் செய்து கொண்டிருக்கும்.

(4) உயிர்களைப் பற்றிக்கொண்டு துன்பம் செய்யும் ஆணவத்தை நீக்கிப் பேரின்பப் பெருவாழ்வை அவைகளுக்குக் கொடுக்க எண்ணிக் கடவுள் உயிர்களுக்கு உடலையும், விஷயங்களை அறிவதற்குதவும் கருவிகளையும், வினைகளைச் செய்து இன்ப துன்பங்களை அனுபவித்து அதனுல் அறிவு விளக்கம் பெற உலகங்களையும், மாயையிலிருந்து படைத்துக் கொடுக்கிருர். ஆணவத்தில் கிடந்து மீளும் வழியறியாது துன்புற்றிருந்த உயிர்களைத் துன்பத்தினின்றும் நீக்கிப் பேரின்ப நிலையை அடைவிக்கும் நெறியில் செலுத்தும் கடவுளுக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய வல்லோம்? அவரைச் சதாகாலமும் மனத்தால் தியானித்து அவருடைய கருணையைப் புகழ்ந்து பாடி, உடம்பினுல் வணங்கி வழிபாடு செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

(5) உயிர்கள் புல், பூண்டு முதலிய ஓரறிவுயிர் முதல், ஆறறிவுயிரான மனிதன் ஈருகப் பல பிறவிகளை எடுத்து நல்வினை தீவினைகளைச் செய்து இன்பதுன்பங்களை அனுபவிக்கும் நல்வினையாவது, பிற உயிர்களுக்கு இன்பத்தை விளைவிக்கும் செயல்கள்—இவை புண்ணியம் எனப்படும். தீவினையாவது, பிற உயிர்களுக்குத் துன்பத்தை விளைவிக்கும் செயல்கள்—இவை பாவம் எனப்படும். நல்வினை தீவினைகளைச் செய்து இன்ப துன்பங்களை அனுபவிப்பதன் மூலம் உயிர்கள் படிப்படியாக அறிவு விளங்கப்பெறும். உயிர்கள் செய்த நல்வினை தீவினை காரணமாக, அவ்வினைகளுக்குத் தக்கபடி அவைகளுக்குப் பிறவிகள் ஒன்றன்பின் ஒன்ருகக் கடவுள் ஆணையால் வந்து கொண்டேயிருக்கும்.

(6) உயிர்கள் தம்முடைய ஐம்பொறிகள் வழியாக உலகப்பொருள்கள் மூலம் அனுபவிக்கும் இன்பம் சிற்றின்பம். அது சுத்த இன்பம் அன்று; துன்பத்தோடு கூடியது. இதற்கு மாருகக் கடவுளிடத்து அன்பு செலுத்துவதனுல் பேரின்பம் உண்டாகிறது. அது சுத்த இன்பம்; துன்பம் கலவாதது.

(7) அறிவு, விளக்கம் அடைந்த பிறகு, உயிர்கள் 'நான்' 'எனது' என்னும் அகப்பற்று புறப்பற்றுக்களை, பிறவிகளுக்கும்,

பிறவிகளில் அனுபவிக்கும் துன்பங்களுக்கும் காரணம் என்பதையறியும. அகப்பற்று வது, நமது உடலின் மீது ஆசை வைத்து உடலைவளர்க்கும் முயற்சியிலீடுபடுதலும், மெய் வாய் கண் மூக்கு செவியாகிய ஐம்பொறிகளின் வழியாக உலக இன்பத்தை அனுபவிக்க முயற்சித்தலுமாகும். புறப்பற்ருவது, மனைவி மக்கள் உறவினர் நண்பர்கள் மீது அதிகப்பற்று வைத்தலும், மண் பொன் புகழ் முதலியவைகளில் பற்று வைத்தலும் ஆகும்.

(8) அவ்வாறு அறிந்த பின் உயிர், அகப்புறப் பற்றுக்களைப் போக்கும் வழியாவது, கடவுளிடத்தும் தன்னைப் போன்ற உயிர்களிடத்தும் பயன் கருதாமல் அன்புப் பணி செய்வதே என்பதை அறியும். அவ்வாறு அன்பு செய்து பேரின்ப அனுபவத்தைப் பெற்று, முடிவில் உடலைவிட்டு உயிர் நீங்கிய பிறகு, கடவுளோடு இரண்டறக் கலந்து, பேரின்ப அனுபவத்தில் நிலைத்திருக்கும். இந்த நிலையை அடைந்தபிறகு, உயிர்களுக்குப் பிறவி என்பது இல்லை, "இன்பமே எந்நாளும் துன்பமில்லை." இந்த நிலையை அடைவது தான், நாம் பிறவி எடுத்ததின் பயன். ஆகையால் பகுத்தறிவென்னும் ஆருவது அறிவைப் பெற்ற நாம் எல்லோரும், ஐம்பொறிகளின் வாயிலாக அடையும் துன்பம் கலந்த சிற்றின்பத்தை அனுபவிப்பதையே வாழ்க்கையின் நோக்கமாகக்கருதாமல்,மேற்சொன்ன பேரின்பத்தை அடைவதையே வாழ்க்கையின் பயனுகக் கருதி அதையடைய எப்போதும் முயற்சி செய்ய வேண்டும்.

(9) கடவுளிடத்தும் உயிர்களிடத்தும் அன்பு செய்து பேரின்பநிலை அடைவதற்குத் துணைபுரிவன :—

(i) உருவ வழிபாடு
(ii) திருக்கோயில் வழிபாடு
(iii) அடியார்கள் கூட்டுறவு
(iv) திருநீறு சிவமணிகளை அணிதல். திருவைந்தெழுத்தெண்ணுதல்.
(v) பன்னிரு திருமுறை முதலிய அருள் நூல்களைப் பொருள் உணர்ச்சியோடு ஓதுதலும், கேட்டலும், சிந்தித்தலும்.
(vi) சைவ புராணங்களைக் கற்றலும் கேட்டலும்.

(1) உருவ வழிபாடு :— கடவுள் ஒரு நாமம் ஒருருவம் இல்லாதவராயினும், அவரை நினைப்பதற்கு அனுகூலமாக ஏதேனும் ஒரு நாமத்தையாவது உருவத்தையாவது வைத்துக்கொள்வது மிகவும் அவசியம். நமது சமயாசாரியர்கள் முதலியபெரியோர்கள் குறிப்பிட்டுள்ள நாமங்களிலிருந்தும் உருவங்களிலிருந்தும் நமக்கு வருப்பமுள்ள ஒன்றைக் கடவுள் வழிபாட்டிற்கு வைத்துககொள்ளலாம்.அந்த உருவத்தை அவரவர் தங்கள் தங்கள் வீட்டில வைத்து வணங்க வேண்டும்.

(2) திருக்கோயில் வழிபாடு :—திருக்கோயில்கள், பலர் கூடி வழிபாடு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள இடங்கள். பலர் ஒன்று கூடி வழிபடுவதால் கடவுளிடத்து அன்பு பெருகுகிறது. கோயில்களில் உள்ள திருஉருவங்கள் கடவுளின் தன்மைகளை விளக்குவதற்குப் பெரியோர்கள் கண்டு அமைத்தவை. வடிவங்கள் பலவாக இருந்தாலும் அவைகள் ஒரே கடவுளின் பல வடிவங்கள் என்றே கருத வேண்டும். அவ்வுருவங்களை வழிபடுவோருக்கு, அருள் செய்யும் தெய்வீக சக்தி அவைகளுக்கு உண்டு. நாம் அவ்விடங்களில் அருட்பாடல்களைப் பாடித் தினந்தோறும் வழிபடுதல் வேண்டும். அப்படி தினந்தோறும் வழிபட இயலாதவர்கள் வாரத்தில் ஒரு முறையாவது அவ்விதம் வழிபடுதல் வேண்டும்.

(3) அடியார்கள் கூட்டுறவு :— ஒருவர் யாரோடு பழகுகின்ருரோ அவர்களின் குணங்கள் இவருக்கு ஏற்படுமாகையால் துன்பங்களினின்று நீங்கி இன்பம் அடைய விரும்புகிறவர்கள் கடவுளிடத்தும் உயிர்களிடத்தும், அன்பும், நல்லொழுக்கங்களும் உள்ளவர்களுடன் பழகுதல் வேண்டும். அக்குணங்கள் இல்லாதவர்களுடன் பழகினுல் அவர்களுடைய தீயகுணங்கள் இவருக்கும் ஏற்பட்டுத் துன்பத்தை அனுபவிக்க நேரிடும்.

(4) திருநீறு அணிதல்:—திருவைந்தெழுத்து ஓதுதல் சைவர்கள் எல்லோரும் திருநீறு அணிய வேண்டுமென்பதை ஒரு நியதியாகப் பெரியோர்கள் வகுத்துள்ளார்கள். திருநீறு அணியும்போது "சிவசிவ" என்று சொல்லிக்கொண்டு அணிய வேண்டும். திருநீற்றைப் பூசிக்கொள்ளும் போதும், திருநீறு பூசியவர்களைக் காணும்போதும் கடவுள் நினைவு உண்டாகிறது. உலக காரி

யங்களில் ஈடுபடும்போது கடவுள் நினைவு, அடிக்கடி உண்டாவதற்குத் திருநீறு பூசுவதைச் சாதனமாகச் சைவப் பெரியோர்கள் ஏற்படுத்தி உள்ளார்கள். திருநீற்றின் சிறப்பைச் சம்பந்தர் அருளிய திருநீற்றுப் பதிகத்தில் பரக்கக் காணலாம். திருநீறு சிவ மணிகளை அணிவதால் பல உடற்பிணிகள் நீங்கும். இவை உயிர்ப் பிணியாகிய பிறவிப் பிணியையும் போக்கிப் பேரானந்தத்தைக் கொடுக்கவல்லவை. திருநீற்றுக்கு விபூதிஎன்னும் பெயர் சாதாரண வழக்கில் உள்ளது. விபூதி என்பதற்கு மேலான செல்வம் என்பது பொருள். விபூதியின் சிறப்பை யறியாதார் பரிகசித்தபோதிலும், சைவர்கள் அதன் சிறப்பையுணர்ந்து கூச்சம் இல்லாமல் திருநீற்றை அணிதல் வேண்டும்.

மந்திரங்களுக்கெல்லாம் சிறந்ததான ''நமசிவாய'' என்னும் திருவைந்தெழுத்து சிவமூலமந்திரமென்று சொல்லப்படுகிறது. திருவைந்தெழுத்தின் சிறப்புகளை நம் சமயாசாரியர்கள் அருளிய நமசிவாயத் திருப்பதிகங்களில் விரிவாய்க் காணலாம். நமசிவாய என்னும் மந்திரத்திற்குப் பதிலாகத் தியானங்களில் சிவ சிவ என்னும் மந்திரத்தையும் உச்சரிக்கலாம்.

(5) பன்னிரு திருமுறைகள்:— சைவ சமயத்திற்குப் பிரமாண நூல்களாகக் கொள்ளப் படுவன தேவாரம், திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகள். இவைகளை அருளிச் செய்தவர்கள் தெய்வத் திருவருளைப் பூரணமாகப் பெற்ற சைவசமயாசாரியர்களாகிய 1. திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் 2. திருநாவுக்கரசு சுவாமிகள் 3. சுந்தரமூர்த்தி சுவாமிகள் 4. மாணிக்க வாசக சுவாமிகள் ஆகிய நால்வர்களும், மேலும் சில சைவப் பெரியார்களுமாவர். மேற்சொன்ன சைவசமயாசாரியர்களில் முதல் மூவர்கள் அருளிச் செய்த பாடல்களுக்குத் தேவாரம் என்றுபெயர். மாணிக்க வாசக சுவாமிகள் அருளிச்செய்த பாடல்களுக்குத் திருவாசகம் என்று பெயர். மேற்கண்ட தேவார திருவாசகப் பாடல்களைக் கற்பதாலும், ஓதக்கேட்பதாலும் இறைவனிடத்துப் பேரன்பு எளிதில் உண்டாகும். அதன் பயனாக இம்மையில் சுகவாழ்விற்கு வேண்டும் பொருள்களைப் பெறுவதோடு, மறுமையில் பேரானந்தத்தையும் அடையலாம். ஆகையால் காலையிலும் மாலையிலும் இன்னும் மற்றக் காலங்களிலும் இத்திருமுறைகளிலுள்ள சில பாடல்களையாவது, ஒவ்வொருவரும் படிக்க வேண்டும்; ஓத வேண்டும்; ஓதக் கேட்கவேண்டும்; அவற்றின் பொருள்களை உணர வேண்டும். கூடியவரை இப்பாடல்களை இசையுடன் ஓதினால் மிக்க பயன் உண்டாகும். இவைகள் மந்திர சக்திவாய்ந்தவை. இவற்றை அன்போடு ஓதி உடற்பிணி, மனக் கவலை முதலிய துன்பங்களைப் போக்கிக் கொள்ளலாம். அன்றியும் முத்திப் பேற்றை எளிதாக அடையலாம். ஆகையால் சைவர்களெல்லாம் இப்பாடல்களை மனப்பாடம் செய்து, நியதியாகத் தினந்தோறும் அன்போடு ஓதுதல் வேண்டும்.

(6) புராணங்கள் :— உலகத்தில் முன் காலத்தில் அடியார்கள்பொருட்டுக் கடவுள் செய்த அருட் செயல்களின் வரலாறுகள் புராணங்களில் கூறப் பட்டுள்ளன. இவைகள் பல பெரியோர்களால் செய்யப்பட்டவை. இவற்றைக் கற்பதாலும் கேட்பதாலும் கடவுளிடத்து நம் எண்ணங்கள் பதிந்து, கடவுள் உயிர்களுக்குச் செய்யும் அருட் செயல்கள் விளங்கி, நமக்குக் கடவுளிடத்து அன்பு வளரும். இக்காலத்தில் பெரும் பாலான மக்கள் பொழுதுபோக்கிற்காக நவீன கதைகளைப் படித்து அருமையாய்க் கிடைத்துள்ள காலத்தை வீணாக்கிக் கொள்வதல்லாமல் மனத்தையும் கெடுத்துக் கொள்கின்றார்கள். அப்படிச் செய்யாமல் புராணங்களைப் படித்தால் மனம் பரிசுத்தப்படும். நமக்குக் கடவுளிடத்தில் அன்பு பெருகி, நாம் பேரின்ப நிலையை விரைவில் அடையலாம். புராணங்களைக் கற்றும் கேட்டும் முத்தி நிலையை அடைய எல்லோரும் முயலுதல் வேண்டும். சைவ புராணங்களில் தலை சிறந்தது சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்த 12ஆம் திருமுறையாகிய பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் புராணமாகும்.

கடவுளிடத்துச் செலுத்தும் அன்பு ஒன்றே, எல்லாத்தீய குணங்களையும் போக்கி மக்களுக்குள் சகோதர உணர்ச்சியை விளைவித்து நேசத்தை வளர்க்கும். பகைமை உணர்ச்சியைஅடியோடு அழித்து எங்கும் சமாதானம் நிலவச் செய்யும். ஆகையால் உலக மக்களனைவரும் கடவுளிடத்து அன்பு செலுத்தினால்தான் நமக்குள் அன்பைப் பெருக்கிக் கொள்ள முடியும்.

**சைவர்கள் கடமை**

ஒவ்வொருவரும் காலை 5 மணிக்கு முன் நித்திரை விட்டெழுந்து 'சிவசிவ' என்று சொல்லித் திருநீறு அணிதல் வேண்டும். பிறகுகாலைக் கடன்களை முடித்துக்கொண்டு 5 நிமிடங்களுக்குக் குறையாமல் சிவநாமம் சொல்லித் தியானம் செய்து 10-15 நிமிடங்கள் திருமுறைப் பாடல்களைப் பாடிக் கடவுள் வழிபாடு செய்தல் வேண்டும்.

சைவ சமயத்தை அன்பு நெறியென்று சொல்லலாம். சைவ சமயத்தின் முக்கிய கொள்கையாவது கடவுளிடத்தும் உயிர்களிடத்தும் அன்பு செலுத்தவேண்டுமென்பதே. இதற்கு அடையாளமே புலால் மறுத்த மரக்கறி உணவு. இதனை மேற்கொள்பவர் யாவரேயாயினும் அவர்களைச் 'சைவர்கள்' என்று சொல்வதுண்டு.

கடவுள் ஆண்டவன்; நாம் அவருடைய அடிமைகள்; உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் அவருடைய உடைமைகள்; உலகில் நிகழ்கின்ற எல்லாச் செயல்களும் அவருடைய செயல்கள், நம் செயல் ஒன்றுமில்லையெனக் கருதி அவர் அருள் வழி நிற்க வேண்டும். உலக இன்பங்களை நாம் அநுபவிக்கும்போதும் கடவுளின் திருவருள் தான் இவ்வின்பத்தை நாம் அனுபவிக்கச் செய்கின்றது என்று அவருக்கு நன்றி செலுத்துதல் வேண்டும். துன்பங்கள் அனுபவிக்க நேர்ந்தாலும், அதுவும் கடவுள் நமது நன்மைக்காகச் செய்கின்ற அருட்செயலே (மறக்கருணையே) என்று கருதுதல் வேண்டும். ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையை மேற்கொண்டு தனக்கு உள்ளதைக் கொண்டு திருப்தியடைந்து கூடிய வரையில் பிற உயிர்களுக்கு உபகாரம் செய்து, ஐம்புல அனுபவத்தை நம் வசப்படுத்திக் கடவுள் அடியார்களுக்குச் செய்த அருட் செயல்களையும், அவ்வப்போது நமக்குப் பலவகையில்பலர்முகமாகச்செய்து கொண்டுவரும் உதவிகளையும் நினைந்து நினைந்து அவரிடத்தில் அன்பைப் பெருக்கி மனம்உருகி ஆனந்தக் கண்ணீர் சொரிந்து பேரின்ப அனுபவம் பெற்று வாழ்க்கையை நடத்துவதே மனிதர்கள் செய்ய வேண்டிய கடமையாகும். அதுவே சைவ சமய வாழ்க்கை ஆகும்.

---

(31ம் பக்கத் தொடர்ச்சி)

யுறங்கா வில்லிதாஸர் எழுந்து நின்று கொண்டிருக்க, உடையவர், 'பிள்ளாய்! உனக்கென்ன சந்தேகம்?' என வினவினர். வில்லி கூறுவார், பிறந்த நாட்டையும் மனைவி மக்களையும் துறந்து, 'எந்தையே ராக்வ சரணம்' எனக் கூவியவனைத் தரையில் கால் பாவாதே அந்தரத்திலே பற்றுக் கோடொன்றின்றி ஏங்கும் விபீஷணனையே 'பிடி வெட்டு குத்து' என்றார்களே ராம கோஷ்டியிலுள்ளார்! அப்படியிருக்க இப் பூமியிலே மனைவி மக்கள் பாசம் விடாது பற்றி வாழும் அடியேன் போல்வாரை அவ் விராம கோஷ்டி விடுமா? நாங்கள் அபயப் ரதானம் பெறுவது எங்ஙனம்? விபீஷணன் நிலை கண்டதனுல் ஒருமயிந்தனுவது பெருமாளிடம் சென்று விண்ணப்பித்தான். எம் போல்வார் அந்நிலையில் கூட இல்லையே! ஸ்வாமீ!'' என்று.

உடையவர் வில்லியை நோக்கி, ''பிள்ளாய்! அஞ்ச வேண்டா. நான் பெற்றேனுயில் நீர் பெறுகிறீர். பெரிய நம்பி பெற்ருராகில் அடியேன் பெறுகிறேன். மற்றுள்ளார் பெற்ருராகில் இவர்களும் பெறுகிருர்கள். நம்மாழ்வார், ''அவாவற்று வீடு பெற்று'' என்றருளிச் செய்கையாலே அவர் பெற்றது உண்மை. அவரைப்பற்றியொழுகும் நமக்கும் அது ஸித்தியாகுமென்றிரும். நாச்சியார் புருஷகாரம் உண்டாம்போது அச்சம் தேவையில்லை. ஆகையாலேயன்ருே நித்யயோகம்! ஆன பின்பு நித்ய ஸம்ஸாரிகளும், எம்பெருமானும் ஒரே சங்கிலிக் கோவையிலே காணும் கட்டுண்டிருப்பது. நம் ஒழுங்குக் கூட்டம் நம்மைவிட்டு அகலாது என்றிரும். விபீஷணனேடு வந்த நால்வர் உண்டே! விபீஷணனை மட்டும் அழைத்துச் சென்று அந்நால்வரைத் தகை என்ருரில்லையே. அபயம் அளிக்கும்போது அந்நால்வரை விலக்கி விபீஷணனுக்கு மட்டுமா அபயப்ர தானம் செய்யப் பெற்றது? ஆகையால் நான் பெற்றேனுகில் நீரும் பெறுகிறீர், அஞ்சாதே சுகமே இரும்'' என்றருளிச் செய்தார்.

(தொடரும்.)

# விளக்கு

அருண்மொழியரசு
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

மனிதனுக்குத் துன்பஞ் செய்கின்றவை பல. அவற்றுள் இருள் ஒன்று. இருளில் கட்டையா? கள்வனா? காலில் பட்டது சந்தனமா? சாணமா? அரவமா? கயிறா? என்று அறிந்து கொள்ள முடியாது.

இருளில் ஒரு வேலையுஞ் செய்ய முடியாது; நடமாடவும் முடியாது. இரவில் நமது வீடுகளில் திடீர் என்று மின்சார விளக்குகள் அணைந்து விட்டால் அப்படியே அத்தனைபேரும் அசைவற்று நிற்க நேர்கின்றது.

விளக்கு நமக்கு எத்தனை வண்ணமாக உதவி செய்கின்றது என்பதை நாம் அது இல்லாதபோதுதான் உணர முடியும். தாய் எப்படி எப்படி நம்மை வளர்க்கின்றாள் என்பதைத் தாய் இல்லாதபோது தானே உணர முடிகின்றது.

ஒரு வீட்டில் விளக்கெரிந்தால் அந்தவீடு மங்களகரமாக இருக்கும். விளக்கின்றி இருள் சூழ்ந்த வீடு, பேய் நடமாடும் பாழ் நிலம்போல் இருக்கும்.

பொருள்களை விளக்குகின்ற விளக்குகள் நான்கு எனவுணர்க. சூரியன், சந்திரன், அக்கினி. ஓசை என்ற நான்குமாகும். பகலிலே பொருள்களை விளக்குவது கதிர்; இரவிலே பொருள்களை விளக்குவது மதியுங் கனலும்; இந்த மூன்றும் இல்லாத போது ஓசை நமக்குப் பொருள்களை விளக்கும்.

இரவிலே ஒரு காட்டில் இருளில் வழியுங் குழியுந் தெரியாது ஒருவன் நின்று திகைக்கின்றான். அப்போது ஒரு புறத்தில் நாய் குரைத்தது. அந்த ஒலியைக் கொண்டு மக்கள் வாழவேண்டும் என்று தெரிந்து ஒலி வந்த வழியே போவான். அன்றியும தவளைகள் கரகரவென்று கத்தின ஒலியைக் கேட்டான், அங்கு நீர்நிலையென்று அறிகின்றான். ஆகவே கதிர் மதிவிளக்கு என்ற மூன்றும் இல்லாதபோது ஓசை நமக்கு உதவுகின்றது.

வீட்டிலேயுங்கூட இருளில் அசைவற்றுத் திகைக்கின்றபோது அங்கு யாராவது பேசினால் அந்தக் குரலோசையைக்கண்டு இன்னார் என்று விளங்கிக் கொள்ளுகின்றோம் அல்லவா? எனவே சொல்லே ஒரு விளக்கு ஆகும்.

> "இல்லக விளக்கது இருள் கெடுப்பது
> சொல்லக விளக்கது சோதியுள்ளது"

என்கின்றார் அப்பரடிகள்.

சொல்லே விளக்காகத் தோன்றியருளிய ஒரு வரலாறும் உண்டு.

நாராயணமூர்த்தியை மனமொழி மெய்களால் வழிபட்டு மகிழ்கின்றவர்களாக விளங்கிய ஆழ்வார்கள் மூவர்கள், முதலாழ்வார்கள் எனப்படுவார்கள். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்ற நாமங்களை யுடையவர்கள்.

நடுநாட்டில் திருக்கோவலூர் என்ற ஒரு திருத்தலம் உண்டு. காரி முதலிய மன்னர்கள் இருந்து அரசு புரிந்த திருநகரம். அத்தலத்திலே எழுந்தருளியுள்ள திருமாலைச் சேவிக்கும் பொருட்டுப் பொய்கையாழ்வார் சென்றார். அத்திருக்கோயிலிலே நெடுநேரம் இறைவனை வணங்கிவிட்டு ஒரு சிறு இடத்தில் சென்று படுத்து உறங்கி விட்டார்.

நடு இரவு. குளிர்காலம்; சிறு தூறல்; வாடை வீசி உயிர்களை நடுக்கிக் கொண்டிருந்தது. பூதத்தாழ்வார் என்ற பெரியவர் அங்கு வந்து மெல்ல ஒதுங்கினார். படுத்திருந்த பொய்கையாழ்வார் பளிச் சென்று எழுந்து, இந்த இடம் ஒருவர் படுக்கவும், இருவர் இருக்கவும் ஆகும் என்று

கூறி அவரை யருகில் இருக்கச் செய்து, தானும் இருந்தார்.

சிறிது நேரத்திற்குப்பின் அங்குப் பேயாழ்வார் வந்தார். அமர்ந்திருந்த இருவரும் உடனே எழுந்து, "இங்கு ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்" என்று கூறி, நின்று கொண்டார்கள்.

அச்சிறு இடத்தில் மூவரும் நெருங்கி நின்றூர்கள். ஒரே அமைதி. சிறிது நேரத்திற்குப்பின் கன்னங் கரேல் என்று ஒருவர் மொழு மொழு என்ற உடம்புடன் வந்து அவர்களை நெருக்கிக் கொண்டு உட்புகுந்தார்.

அந்த இடம் மிக நெருக்கமான சிறு இடம். ஒருவர் மட்டும் படுக்கவும், இருவர் மட்டும் இருக்கவும், மூவர் மட்டுமே நிற்கவும் முடியும். இப்போது நான்காவது ஒரு பேர்வழி வந்து நுழைந்து நெருக்கத் தொடங்கினுர். மூவரும் திக்கு முக்காடி விட்டார்கள். மூச்சுத் திணறியது. 'ஐயா! நீர் யார்?' என்று கேட்டார்கள். பதில் இல்லை. "ஐயா! தங்களை யார் என்று கேட்டார்கள். பதில் இல்லை. "ஐயா! தங்களை யார் என்று அறிய விரும்புகின்ருேம்". ஒரே அமைதி. மௌனம் நிலவியது.

விளக்கில்லாமல் எப்படி அவரை இன்ஞர் என்று அறிய முடியும். உடனே பொய்கையாழ்வார் மொழி விளக்கு ஏற்றுகின்ருர்.

அது சிறு விளக்கா? உலகில் உள்ள எல்லா விளக்குகட்கும் பெரிய விளக்கு. ஐந்து கண்டங்கட்கும் ஒளிதரக்கூடிய அத்துணைப் பெரிய விளக்கு.

அந்த விளக்குக்கு நெய் ஒருபடி இருபடி விட்டாற் கட்டுமா? இந்தப் பூமியே—அகல், கடலே—நெய், மேருகிரி—திரி; சூரியனே—விளக்கு.

"வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய சுடரே விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே என்று"

என்று பாடினுர் பொய்கையாழ்வார்.

அடுத்தபடி, பூதத்தாழ்வார் உள்ளத்தில் ஒரு விளக்கு ஏற்றுவாராயினர். அதற்கு, அன்பு—அகல்; ஆர்வம்—நெய்; எண்ணம்—திரி; ஞானமே—விளக்கு.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்

இவர்கள் இருவரும் பாடியபின் ஒரு சோதி விளக்கு தோன்றியது. அவ்வொளியில் தம்மை நெருக்கியது யார் என்று மூவரும் பார்த்தார்கள். அவர் திருவுருவம் நன்கு தெரிகின்றது. உடனே பாடுகின்ருர் பேயாழ்வார்.

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்—செருக்கிளர்
பொன்னுழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னுழி வண்ணன்பால் இன்று.

'இறைவனை யார் கண்டவர்?' என்று சிலர் கேட்கின்ருர்கள். கண்டேன் கண்டேன் என்று கூறுகின்ருர் பேயாழ்வார்; ஆ! ஆ! என்ன அழகு! இதோ எங்களை நெருக்கியது எம்பெருமானே?

திருமார்பில் திகழ்கின்ற திருமகளைக் கண்டேன்; அழகிய திருமேனியைக் கண்டேன்; விளங்குகின்ற கதிரவன் ஒளி போன்ற அழகிய வடிவத்தைக் கண்டேன்; போரில் திகழ்கின்ற அழகிய சக்ராயுதத்தைக் கண்டேன்; மற்ருெரு கையில் அன்புள்ள பாஞ்சஜன்யம் என்ற சங்கையுங் கண்டேன். கடல் வண்ணனும் எம் கடவுள் பால் இன்று இத்தனையுங் கண்டேன்" என்கின்ருர். எனவே இதனை மொழி விளக்கு என உணர்க.

பாரதம் பாடிய வில்லிபுத்தூராரின் திருமைந்தர் வரந்தருவார் பாடுகின்ருர்.

பாவருந் தமிழால் பேர்பெறு பனுவற்
பாவலர் பாதிநா ளிரவில்
மூவரும் நெருக்கி மொழிவிளக் கேற்றி
முகுந்தனைத் தொழுதநன் னுடு
தேவரும் மறையும் இன்னமுங் காணுச்
செஞ்சடைக் கடவுளைப் பாடி
ஏவரும் மதித்தோர் மூவரில் இருவர்
பிறந்தநா டிந்தநன் னுடு.

அகில வுலகங்களுக்கும் விளக்காக நின்று எல்லாவற்றையும் விளக்குகின்றவர் சிவபெருமான். அதனுல் அவரை விளக்கென்றே கூறுகின்ருர் மணிவாசகர்.

"சோதியே சுடரே சூழொளி விளக்கே"
அது ' தூண்டா விளக்கு".
"மாணிக்க மணி விளக்கு".

# பிட்சாடனர்

(திரு. சு. சுவாமிநாத சிவாசாரியர், தலைமை ஆசிரியர்,
வேதசிவாகம பாடசாலை, தருமபுரம்)

**முன்னுரை :**

சிவபெருமானின் பெருங் கருணைத் திறங்களையும், பேராற்றல்களையும் அருவம் அருவுருவம் உருவம் என்ற மூன்று நிலைகளிலும் தெரியக் காட்டுகின்றன, நமது ஞான நூல்கள். அருவ நிலையிலுள்ள இலய வடிவத்தில், சிவம் என்ற பெயராலும்; அருவுருவ நிலையில் போக வடிவத்தில் சதாசிவம் என்ற பெயராலும்; உருவ நிலையில் அதிகார வடிவத்தில் மகேசுவரன் என்ற பெயராலும் இறைவனை வழிபட ஆகமங்கள் விதித்துள்ளன. எனவே, ஆன்மாக்களின் பொருட்டுச் சிவபெருமான் கொண்டருளிய உருவத் திருமேனிகள் அனைத்தையுமே மகேசுவர மூர்த்தங்கள் என்று சொல்வது மரபு.

சிவபெருமான் அன்பிற் சிறந்த அடியவர்களுக்காகத் தாமே இரங்கி வந்து ஏற்றருளும் கருணை வடிவங்களும் பல உண்டு. தவறிழைக்கும் தீயவர்களை ஒறுத்து, நல்வழிப் படுத்துதற் கெனச் சிவபிரான் கொண்ட பயங்கரத் தோற்றங்களும் சில உண்டு. இவ்வாறுள்ள சிவபெருமானின் திருமேனிகள் அறுபத்தாறு ஆகும். இவற்றுள்ளும் இருபத்தைந்து சிவமூர்த்தங்களை மிகச் சிறப்புடையனவாக நூல்கள் கூறும். இந்த இருபத்தைந்தினுள் ஒரு மூர்த்தமாகக் குறிக்கப்பெறும் சிவ வடிவமே, இங்கு எடுத்தெழுதப்படும் "பிட்சாடனர்" என்னும் திருவுருவமாகும். பிறர்பால் சென்று யாசித்து வாங்கும் இரந்து ஏற்கும் நிலையிலிருக்கும் தோற்றமுடையோரைப் பிட்சாடனர் என்று வடமொழியில் வழங்குவதுண்டு. பிட்சு என்ற வடமொழிச் சொல்லுக்கும் இதே பொருளாகும். பிட்சா என்றால் இரத்தல் என்று பொருள். எல்லாம் வல்ல சிவபெருமான் பிட்சாடனர் கோலங் கொண்டமையைத் திருமூலர்—திருஞான சம்பந்தர் முதலிய திருமுறை ஆசிரியர்களும் நினைந்து நினைந்து பாடியுள்ளார்கள். திருமூலர் சொல்லுவதாவது.

"பரந்து உலகேழும் படைத்த பிரானை
இரந்துணி என்பார்கள்; எற்றுக் கிரக்கும்?
நிரந்தரமாக நினையும் அடியார்
இரந்துண்டு தன்கழல் எட்டச் செய்தானே

—திருமந்திரம்—1888·

"இச்சை பகர்ந்து மிக
இடுமின்பலி என்று நாளும்
பிச்சை கொள் அண்ணல் நண்ணும்
பிரமாபுரம் பேணுமினே"

என்பது திருஞான சம்பந்தர் திருவாக்காகும். இன்றும் தமிழகத்துப் பெரிய திருக்கோயில்களில் பிட்சாடன மூர்த்தியின் அழகு ஒழுகும் வடிவத்தைக் கண்டு களிக்கலாம். பெரும்பாலும் சிலை வடிவிலுள்ள பிட்சாடன வடிவங்களைக் காட்டிலும், உலோகங்களாலாகிய விக்கிரகங்களாக— திருவிழாக் காலங்களில் வீதிவலம் வருவதற்கு எழுந்தருளும் உத்ஸவ பிம்பங்களாக இருப்பதைக் காண்கிறோம். வெண்ணிறமான திருமேனியும், அழகிய கண்களும், வலது புறத்துள்ள இரண்டு கைகளில் ஒன்றில் உடுக்கையும், இனனொன்றில் அறுகம்புல்லும், இடப் பக்கத்து இரு கைகளில் ஒன்றில் திரிசூலமும், மற்றொன்றில் கபாலமும், திருவடிகளில் அழகிய பாதுகைகளும், வட்டமாக வளைந்த ஜடையில் சந்திரனை அணிந்த வண்ணமும்

தனக்கு வலப் புறத்தே மானுடனும், வலது பக்கத்தில் ஒத்து வரும் பூதத்துடனும் விளங்குபவர் பிட்சாடனர்.

காரணுகமத்தில் பிட்சாடனப் பெருமானின் திருவுருவ அமைப்புப் பற்றி மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. பிட்சாடனர் மிக்க அமைதியும் புன்முறுவலும் தவழும் திருமுகமுடையவர்; அவர்தம் காதுகளில் குண்டலங்கள் திகழும்; தலையிலுள்ள சடைவட்டமாகவும், சிவந்த செம்பட்டையாகவும் இருக்கும்; அவரது திருவுருவம் ஆடையின்றி வறிதே இருக்கும்; பாம்புகளை அவர் பூணூல்போல மார்பில் அணிந்திருப்பார்; இடுப்பில் வேதமாகிய அரைஞாண்விளங்கும்; அவருடைய உறுப்புக்களும் திருமேனியும் மிக்க அழகு நிரம்பிக் காணப்படும்; நடந்து செல்லும் நிலையில் பாதுகைகளின்மேல் திருவடிகளை வைத்துக் கொண்டு; பத்ம பீடத்தின்மீது நிற்பார்; வலக்கைகள் இரண்டில் மேல் நோக்கியகையில் உடுக்கையும், கீழ்நோக்கிய கையில் அறுகம்புல்லும் இருக்கும். இடக்கைகள் இரண்டில் ஒன்றில் திரிசூலமும், மற்றொன்றில் கபாலமும் விளங்கும், வலப்பக்கத்தில் அறுகம்புல்லை யுண்ணத் தாவி நிற்கும் ஓர் இளம் மானும், இடப் பக்கத்தில் கபாலத்தைத் தலையிற் சுமந்து கொண்டு நிற்கும் ஒரு குறட்பூதமும் காணப்படும். பிட்சாடனத் திருவுருவம், பத்திர பீடத்தின் மீது, பிரபா மண்டலம் என்னும் திருவாசியின் நடுவில் எழுந்தருளி விளங்கும்.

இனி பிட்சாடன மூர்த்தம் பற்றிப் புராணங்கள் கூறும், வரலாற்றினை யறியலாம். அஃதாவது:–

இரணியாக்கனுடையபுத்திரன் அந்தகாசுரன் கொடுங்கோல் செலுத்தி அரசாளும் காலத்தில் பன்னிரு வருடம் மழை வளங் குறைய வேதமோதும் தாருகாவனத்து முனிவர்கள் பசியால் வருந்திக் கௌதம முனிவருடைய ஆசிரமத்தை அடைந்தார்கள். கௌதம முனிவர் அவர்களை அன்புடன் வரவேற்றுப் பூசித்து மகிழ்ந்து உபசரித்து நாள்தோறும் உணவு அளித்து வந்தனர்.

இவ்வாறு இருந்து வரும் நாட்களில் முகில்வளம் நிறைந்து மழை பெய்தது. முனிவர்களைப் பன்னிரு வருடம் வருத்திய பசிநோய் தீர்ந்தது. மிகுந்த செல்வமும் செழிப்பும் பெருகின. அதனல் முனிவர்கள் கௌதமரிடத்திலிருந்துதங்களுடைய ஆசிரமங்களை அடைவதற்கு எண்ணினர்கள். விருந்தினர்களாக வந்த தங்களை விட்டுப் பிரியக் கௌதமருக்கு விருப்பமின்மையை உணர்ந்த முனிவர்கள், சூழ்ச்சியினல், ஓர் மாயப் பசுவை யுண்டாக்கிக் கௌதம முனிவர் முன்பு அனுப்பினர்கள்.

மிகவும் இளைத்து மெலிந்து, நரம்புகள் வெளிப்பட்டு, தசைப் பற்றற்று வந்த அப் பசுவைக் கண்ட கௌதமர், மிக்க இரக்கங் கொண்டு, "பசுவுக்கு வந்த துன்பங்களை நீக்கிக், காத்தல் மேலான சிவதருமமாய் முத்தியிற் கூட்டும்; காவாது விடுத்தல் கொடிய நரகத்துக்கு இரையாக்கும்" எனச் சிவாகமங்கள் கூறுவதை நினைந்து, யானும் இப்பசுவுக்குத் தீங்கு வராமற் காப்பேன் என்று கூறியவாறு, கௌதமர் அப் பசுவை அன்புடன் மெதுவாகத் தீண்டினர்.

உடனே அது பூமியில் விழுந்து உயிர் நீத்தது. கௌதமர் துயரக் கடலுள் ஆழ்ந்து அமிழ்ந்தினர். இந்நிலையில் தாருகாவனத்து முனிவர்கள் "பசுவைக் கொலை செய்த பாவியினுடைய இல்லத்தில் உண்டால் அப்பாவம் எமக்கும்சேரும் என்று" கடுமை மிக்க சொற்களைச் சொல்லிக் கொண்டு, தம்முடைய இல்லங்கட்குச் சென்று விட்டனர். பின்னர்ச் சிவ பக்தியிற் சிறந்த கௌதம முனிவர் தமது ஞானக் கண்ணினல் நோக்கி, அவர்கள் செய்த வஞ்சனையை அறிந்தார். மிகவும் கோபம் கொண்டார். "வேத ஒழுக்கத்தினின்றும் நீங்கி, மறை வழக்கமில்லாத மாபாவிகளாகி, சிவபெருமானிடத்து அன்பின்றி, அதனல் கொடிய துன்பக் கடலில்

விழுந்து கலங்குவார்களாக!" என்று, அம் முனிவர்களை அவர் கோபத்துடன் சபித்தார்.

இச் சாபத்தின் காரணமாக, அவ் விதமே அம் முனிவர்கள், அஞ்ஞானி களாய்; வேதம் ஓதுதல் முதலிய நல்ல செயல்களை விடுத்துத், தவ ஒழுக்கத்தி னின்றும் நீங்கிக் கன்ம மலத்தினுல் கட் டப்பட்டுத் துன்பத்திற் சுழன்று, மீமாம்ச மதப் பிரவேசம் செய்து, அசுத்தர்களாக மாறி, ஆணவமும் குழப்பமும் மிக்கவர் களாக இருந்தனர்.

இந்நிலையில், "சிவபெருமான் பரதந்திரர் களான, மற்றைய ஆன்மாக்கள் இவர் களைப் பின்பற்றிக் கெட்டுப் போவார்கள் என்பதையும்; கடவுளின் கிருபையாலன் றிப் புண்ணியம் செய்தல் முடியாது என் பதையும், "பரனடிக்கு அன்பு இலாதார் புண்ணியம் பாவமாகும்" என்பதனையும், எல்லா ஆன்மாக்களுக்கும் உணர்த்துதல் காரணமாகவும், முன்னர்க் காமமும் கோபமும் அம்முனிவர்களுக்கு உண் டாக்குவதாகிய திருவுருவத்தைப் பொருந் திச் சென்று; அவர்களைக் காமிகளும் கோபிகளுமாகச் செய்து, அவர்களது ஆணவ மல சக்தியையும், அதன் செயல் களையும் அழித்து, அவர்களுக்கு ஞானத் தைப் பயப்பதாகிய திருமேனியைக்காட்டி, மெய்ஞ்ஞானத்தைக் கொடுத்துச் சுத்த வைதிக சைவர்களாகும்படி செய்யத் திரு வுளங் கொண்டனர்.

பின்பு சிவபெருமான் அதிபாதகர்களா கிய முனிவர்களுக்குத் தம் உருவத்தைக் காட்ட வொண்ணுமையின். விட்டுணுவை அழைத்து மோகினி வடிவங் கொள்ளும் படி செய்து, முனிவர்களை மயக்க விடுத்து, முனிபத்தினிமாரை மய்க்கி யருளும் பொருட்டு வேத ரூபமாகிய கௌபீனத் தையும், சிவஞானமாகிய பூணூலையும், மூச்சக்தி வடிவானதும் மும்மலங்களை நீக்குவதுமாகிய சூலத்தையும், பராசக்தி வடிவானதும், அன்பையே பிச்சை யேற் பதுமாகிய பிட்சா பாத்திரத்தையும், நாத ரூபமான உடுக்கையையும், திரோதான சக்தி ரூபமாய், மல பரிபாகஞ் செய்வது மான பாதுகைகளையும், சிவஞான ரூப மாகிய விபூதியையும் தரித்துக் கொண்டு மோகினியுடன் சென்ருர்.

மோகினி தாருகா தபோவனத்தை யடைய, முனிவர்கள் மோகினியைக் கண்டு மிகக் காமுகர்களாகி, மோகினி யைப் பின் தொடர்ந்து சென்ருர்கள். பிட் சாடன மூர்த்தி முனி பத்தினிகளிருக்கும் வீதிகளிற்போய், அவர்களைச் சுத்தர்களாக் கும் பொருட்டுத் தமது திருவுருவைக் காட்ட, பிச்சையிடும்படி வந்த முனி பத் தினிகள் பிட்சாடனரின் அழகு மேனியைக் கண்டு காமித்துப் பேராசை வைத்துச் சிவ பெருமானைப் பின் தொடர்ந்து செல்லலா யினர். முனி பத்தினிமார்களோடு சிவ பெருமான் செல்ல, மோகினியாம் மகா விட்டுணு முனிவர்களால் சூழப்பட்டுச் சிவ சந்நி தானத்தை யடைந்தார்.

முனிவர்கள் தாமும் தமது மனைவிமார் களும், கற்பழிந்தும், தம்வசமிழந்தும், இறைவனை நோக்கிச் செல்லும் தங்கள் நிலையை உணர்ந்த அளவில், காமம் ஒடுங்கிக் கோபம் அதிகரிக்க இதற்குக் காரணமான சிவபெருமானையே அழித்து விட நினைந்து, ஒரு அபிசார வேள்வி செய் தார்கள். காமமும் கோபமும் மிக்கவர் கள் மனித நிலையிலிருந்து விலகி, விலங்கு களின் இயல்பிற்கும் அதனினும் இழிந்த தீமை விளைவிக்கும் சடப் பொருள்களின் நிலைக்கும் இறங்கி விடுவார்கள்.

எனவே, அவ்வோம குண்டத்திலிருந்து எழும்பி எதிர்த்துவரும், புலியை யுரித்துத் தோலை யுடுத்தியும், மழுவையும் மானையும் கைகளில் தாங்கியும், பாம்புகளை ஆபரண மாக அணிந்தும், பூத கணங்களைச் சேனை

களாகவும், முனிவர்களது ஆணவ மலமே முயலகனுகப் பாய்ந்துவர அம்முயலகனைக் காலால் மிதித்தும், ஐந்தொழில் நடனத்தைச் செய்தருளினர் சிவபெருமான்.

"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக் கெடும்நோய்"

எனத் திருவள்ளுவர் கூறியபடி, அம்முனிவர்கள் மலநோயினின்றும் நீங்கிப் பரிபக்குவர்களாகிச் சிவபெருமான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி நைந்து உருகி இறைவனின் திருவருளை வேண்டி நின்றனர்.

அவர்களது பக்குவ முதிர்ச்சியைக் கண்ட சிவபெருமான், அம்முனிவர்களைப் பார்த்து, "இந்நாள் வரை நீங்கள் துன்மார்க்க வழியில் நின்று மோகர்களாயினீர்கள்! இப்பொழுது உங்களுடைய மோகத்தையும், அஞ்ஞானத் தையும், ஆணவத்தையும் நீக்கினேம். இனி நீங்கள் சிவநெறியைக் கடைப்பிடித்துத் திருநீறு உருத்திராக்கம் தரித்துச் சிவலிங்கப் பிரதிட்டைசெய்துஇடைவிடாது பூசித்துப் போக மோட்சங்களை நெறிப்படி அடைவீர்களாக!" எனத் திருவாய் மலர்ந்தருளி அநுக்கிரகஞ் செய்து மறைந்தனர்.

---

## மதிப்புரை :

**தொல்காப்பியம், சேனுவரையம்:**

இந்நூல் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் ஆகிய பண்டித வித்துவான் சைவப் புலவர் சித்தாந்தநன்மனி திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள் பதிப்பித்த சிறந்த நூல்! தொல்காப்பியம் சேனுவரையர் உரைப்பதிப்புக்கள் பல முன்பே வெளிவந்துள்ளன. எனினும், இப்பதிப்பில், மாணவர்களுககுப் பெரிதும் பயன்படக் கூடிய பல சிறப்புக் கூறுகள் அமைந்திருக்கின்றன. ஆராயச்சி முன்னுரை, சொல்லதிகார விளக்கக் கட்டுரைகள், சேனுவரையம் விளக்கவுரை, பல்கலைக் கழக வினுக்களின் தொகுப்பு ஆகியவைகள் சேர்க்கப் பெற்றிருத்தல், இப்பதிப்பின் சிறப்பை மிகுதிப் படுத்தியுள்ளது. நூலின் பதிப்பு மிகநல்ல முறையில், செம்மையாகவும், திருத்தமாகவும் அமைந்துள்ளது. ஆசிரியரின் சிறந்த உழைப்பும், செந்தமிழ்ப் புலமையும், நுண்மாண் நுழைபுலனும் பெரிதும் போற்றிப் பாராட்டுதற்குரியன. இதற்கு முன்பே இளம்பூரணர், நச்சினுர்க்கினியர், கல்லாடர், தெய்வச் சிலையார் ஆகியோர் இயற்றிய தொல்காப்பிய உரைகளை, இவர்கள் நன்கு பதிப்பித்திருக்கின்ருர்கள். காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், இதற்கு வாழ்த்துரை வழங்கியுள்ளார்கள். திருத்தமான சிறந்த நல்ல இனிய பதிப்பு. இஃது ஏறத்தாழ 400 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 8–00.

கிடைக்குமிடம்:— திரு. த. சுந்தரமூர்த்தி அவர்கள்,
செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர்,
திருப்பனந்தாள், தஞ்சை மாவட்டம்.

—ஆசிரியர்.

# அமுதனரும் அந்தாதியும்

(திரு என். எஸ். தாத்தாச்சாரி, தஞ்சை)

**முன்னுரை:**

பேரின்பம் பெறுவதற்கு அடியார்களிடம் வைக்கும் பக்தியே சுருக்க வழி என்பது எல்லாச் சமயவாதிகளின் ஒருமித்த கருத்தாகும் இதுவே தொல்வழியாகவும் அருள் வழியாகவும் போற்றப்படுகிறது. "பெரியார்க்கு ஆட்பட்டக்கால் பெருதபயன் பெறுமாறு, வரிவாள் வாய் அரவணைமேல் வாட்டாற்ருன் காட்டினனே" என்று சடகோபர் திருவாய் மலர்ந்த நீதில் நன்னெறியும் இதுவே. ஸ்ரீவைணவ அடியார்களில் இவ்வழியில் சென்று பேறு பெற்றவர்கள், சிறப்பாக இருவர்களாவர். ஒருவர் மதுர கவி ஆழ்வார், மற்றொருவர் திரு அரங்கத்து அமுதனர் என்பவர்.

மதுரகவியோ, "தேவுமற்றறியேன்" என்ருர். இவரோ, "எங்கள் மாதவனே நிற்கிலும் காண்கில்லார்" என்ருர். இராமாநுசருக்கு வேங்கடம், வைகுந்தம், பாற்கடல் என்ருல் என்ன இன்பம் பயக்குமோ, அவ்வளவு இன்பம், அமுதனருக்கு இராமாநுசன் திருப்பாதங்கள் என்ருல் ஏற்படும். மதுரகவி, நம்மாழ்வார் திருவடிகளின் முன் தான் நின்று பாடினர் என்ருல்; அமுதனரோ இராமாநுசனை முன் நிறுத்தித் தான் பின் நின்று பாடினர் எனவாம். பாலில் சர்க்கரை இட்டதைப்போல்; இவர் மற்றைய ஆழ்வார்களில் பெருமை என்ற பாலில் இராமாநுசன் திருநாமமாகிய சர்க்கரையைக் கலந்தே பாடினர்.

**வரலாற்றுக் குறிப்பு:**

அமுதனரின் முழுப்பெயர், திருவரங்கத்தமுதனர் என்பது. மூங்கில் குடியில் அவதரித்து, திருவரங்கத்தில் வாழ்ந்தவர்! அரங்கன் கோயில் உரிமையாளராகவும் இருந்தார். முதன் முதலில் இவர் ஸ்ரீவைஷ்ணவ சமயத்தின் இன்சுவையை முற்றிலும் அறியாத நிலையில்தான் இருந்தார். இவர் தாயாரோ பாகவதர்களின் அமுத வாக்கில் அளப்பறியா ஈடுபாடு உள்ளவர். அவ்வப்பொழுது ஸ்ரீவைணவ சமயத்தின் அரும்பெரும் கருத்துக்களைக் கேட்டு மிகவும் இன்பம் கொள்வர். தாயார் இறந்தபின், ஒருநாள் அத்தாயாரின் திதி வந்தது. தாயாரின் திருவுள்ளத்திற் கிணங்க, அவள் ஆன்மா சாந்தி அடைய, அத் திதியில் ஓர் ஸ்ரீவைணவரை உண்பிக்க அமுதனர் விரும்பினர். ஸ்ரீ இராமாநுசரிடம் தம் கருத்தை வெளியிட்டார். கருணைக் கடலான இராமாநுசரும் தமது முக்கிய சிஷ்யரான கூரத்தாழ்வானை சிராத்த போஜனத்துக்கு அனுப்பினர். திதி முடியும் பொழுது மரபுப்படி (திருப்தோஸ்மி) "மனநிறைவு பெற்றேன்" என்று சொல்லவேண்டிய தருணம் வந்தது. கடைசியில் அமுதனரிடமிருந்து திருவரங்கக் கோயிலின் திறவு கோலை வாங்கிக் கொண்ட பின்னரே கூரத்தாழ்வான் கூற வேண்டிய மரபுச் சொல்லை (திருப்தோஸ்மி)ச் சொன்னர்.

அமுதனரிடமிருந்து பெற்ற சாவியைக் கூரத்தாழ்வான் இராமநுசர் திருவடி முன் வைத்தார். சிராத்தத்தில் கிடைத்த பொருளையும் தக்கோர்களுக்குப் பகிர்ந்தார். பிறகு இராமாநுசரும் திருவரங்கம் பெரிய கோயிலில் செய்யத் திருவுள்ளம் பற்றிய சீர்திருத்தங்களைச் செய்தார். அதனல்தான் இன்றும் ஸ்ரீவைணவர்கள்,

"திருவரங்கச் செல்வம் வாழ்க!" என்றும், "இராமாநுசன் ஆணை வளர்க!" என்றும் எல்லாத் திவ்ய க்ஷேத்திரங்களிலும் நிச்சலும் அனுஸந்தானம் செய்கிருர்கள். அமுதனரும் அன்று தொடங்கிக் கூரத் தாழ்வான் திருவடி பலம் கொண்டு ஸ்ரீ இராமாநுசரின் அணுக்கத் தொண்டரானுர். 'இராமாநுசன் திருவடி நிலை' என்று பெயர் பெறும் பாக்கியவான்களுள் ஒருவரானுர் என்றும் சிலர் கூறுவார்கள்.

இவருக்குக் கூரத்தாழ்வானிடம் அளவற்ற பக்தி உண்டென்பதற்கு, "வஞ்சமுக் குறும்பாம், குழியைக் கடக்கும் நம் கூரத் தாழ்வான் சரண் கூடியபின்" என்ற இவருடைய அமுதவாக்கே சான்ருகும். இவருடைய கூரத்தாழ்வான் பக்தி, வெள்ளமிட்டு இராமாநுசர் என்னும் குணக்கடலில் கலந்தது எனலாம். இவருடைய ஆசாரிய பக்தியை எடுத்துக் கூறவோ, எழுதவோ சொல்லெல்லாம் போதாது, ஏடெல்லாம் அடங்காது. இவருடைய அளப்பரிய இராமாநுச பக்தி "கரைகட்டாக் காவிரிபோல" வெள்ளமெடுக்கவே, அவ்வெள்ள மெல்லாம் சொற்களாக மாறி "இராமாநுச நூற்றந் தாதி" என்ற மாபெரும் நூலாயிற்று என்பர்.

இவ்வந்தாதியை முதலில் இராமாநுசன் ஏற்க மறுத்தார். பின்பு முதலியாண்டான், பிள்ளான் முதலிய சிஷ்யர்கள் வேண்டிக் கொள்ள, ஒருவாறு ஏற்கத் திருவுள்ளம் இசைந்தார். இந்நூலில் தமிழ் மொழியும், ஆசாரிய பக்தியும், கருத்தின் அழகும் களிநடம் புரியும் அருமையை வேறு நூல்களில் காண்பதரிது எனவும் கூறலாம். அஃது ஈடும் எடுப்புமில்லா அருமையான அந்தாதி யாகும்.

**அந்தாதி அமைப்பு:**

தமிழில் கூறப்படும் 96 வகைப் பிரபந்தங்களில் "அந்தாதி" என்ற நூல்வகையும் ஒன்ருகும். தொல்காப்பியம் இத்தகைய நூலை 'விருந்து' என அழைக்கிறது. ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்து அசை, சொல், சீர், அடி இவற்றுள் ஒன்று, இதற்கு அடுத்த பாடலின் முதலாக வரும் படிக்கு அமைத்துப்பாடி, இறுதிப்பாடலின் இறுதியும், முதற்பாடலின் முதலும் ஒன்ருக இணையும்படி மண்டலித்து மாலைபோலத் தொகுத்து முடிப்பது, அந்தாதியாகும். இதனைச் "சொற்றொடர் நிலை" எனவழங்குதலும் உண்டு. வேறு விதமாக அந்தாதி பாடுவதும் உண்டு. "தனி அந்தாதி" என்ற வகையும் இவற்றுள் ஒன்ருகும். கலம்பகம், இரட்டை மணிமாலை, மற்றும் சித்தர்கள் இயற்றிய மருத்துவ நூல்களும் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் முதலிய நூல்களும் அந்தாதி வகையில் பாடப் பட்டவைகள்.

திவ்வியப் பிரபந்தங்களில் அந்தாதி என்ற பெயராலே அமைந்த நூல்களும், அந்தாதியாகப் பாடப்பெற்ற திருவாய்மொழி போன்ற அருள் வாக்குகளும், அந்தாதி வகையில் அமைந்தன. அந்தாதி வகையிற் செய்யுள் எழுதும் வழக்கம் சங்க காலத்திலிருந்தே தொடங்கியது என்பது, காப்பியாற்றுக் காப்பியனுர், பதிற்றுப்பத்துள் 4–ஆம் பத்தினை அநதாதித் தொடையில் பாடியிருப்பதனுல் தெரிகின்றது. சமண சமயத்தினரால் பாடப்பட்ட திருநூற்றந்தாதியும் மிகவும் புகழ்பெற்ற நூலாகும்.

இதுபோல் கம்பர் பாடிய சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி, சேரமான் பெருமாள் நாயனுர் பாடிய பொன் வண்ணத் தந்தாதி, குட்டித் திருவாசகம் எனப் போற்றப்படும் திருக்கருவைப் பதிற்றுப் பத்து அந்தாதி, மிகவும் அண்மையில் பாடப்பட்ட அபிராமி அந்தாதி போன்ற நூல்களும் அந்தாதிப் பாடல்களுக்கு எடுத்துக் காட்டாக இருக்கின்றன. கடவுள், ஆசாரியர்கள், அரசர்கள் இவர்களைப்

பற்றிய அந்தாதிச் செய்யுள்கள் நூறு பாடல்களாலும், மற்றவர்களைப் பாடும் பொழுது நூற்றுக்குக் குறைந்த எண் ணிக்கையிலும் அந்தாதிப் பாடல் இயற்று வது பெரியோர் மரபாகும்.

## இராமாநுச நூற்றந்தாதி:

ஸ்ரீவைணவ ஸம்ப்ரதாய நூல்களில் அமுதனார் அருளிச் செய்த இராமாநுச நூற்றந்தாதியும், ஸ்ரீமணவாள மாமுனி கள் திருவாய் மலர்ந்தருளிய திருவாய் மொழி நூற்றந்தாதியும், மிகவும் சிறப் புடையன. திருவாய்மொழி நூற்றந்தாதி திருவாய் மொழியின் ஒவ்வொரு பதிகத் தின் சாராம்சத்தை அமுதச் சொட்டென எடுத்துக் காட்டுகிறது. இராமாநுசர், ஆழ்வார்களின் அருளிச் செயல்களின் மூலம்தான் பிரம்ம சூத்திரத்திற்கு ஸ்ரீபா ஷ்யம் என்ற பாஷ்யத்தை ஈடும் எடுப்பு மில்லா வகையில் எழுதி முடித்தார் எனப் பெரியோர் துணிபாகும்.

இராமாநுசரது திக்கெட்டும் புகழ் பெரு மையை இந்த நூற்றந்தாதியில் பரக்கப் பேசியதைப்போல் வேறெங்கும் பேசிய தில்லை என்பதும், ஆசாரியர்களின் திரு வுள்ளமாகும். இதனை இராமாநுசர் காலத் தில்நாலாயிரத்திவ்விய பிரபந்தங்கள்24இல் கடைசி ஆயிரமான இயற்பாவின் கடைசி பாகத்தில் சேர்த்துள்ளார்கள். மதுரகவி யார் அருளிச் செயல், வேதம் தமிழ் செய்த மாறனை அல்லாது வேறொன்றும் அறியாத அருள் வாக்காகும். இந்த நூற்றந் தாதியோ கையில் கனி என்னக் கண்ண னைக் காட்டித்தரினும், இராமாநுசன் மெய் யில் பிறங்கிய சீரன்றி வேறொன்றும் வேண்டாத அமுத வாக்காகும்.

இந்நூலில் 108 செய்யுள்கள் உள்ளன. பாசுரம் தோறும் இராமாநுசன் புனிதத் திருநாமம் சொல்லப்படுவதால், ஒரு தடவை இந்த அருள் நூலைப் படித்தால், இராமாநுசன் திருநாமம் 108 தடவை உச் சரிக்கப்பட்டதாகிறது. இதற்கு, 'பிரபன்ன காயத்ரீ' எனவும் பெயருண்டு. காயத்ரீ மந்திரத்துக்குள்ள ஏற்றம்போல் இதற்கும் ஸ்ரீவைணவ சமயத்தில் பெருமதிப்பு உண்டு. இதற்குப் பல உரைகள் ஏற்பட் டுள்ளன. எனினும், மிகவும் எளிய முறை யில் சுருக்கமாக யதீந்திரப் பிரவணர் என்ற மாமுனிகள் அருளிச் செய்த உரைக்கு அதிக மதிப்பு உண்டு.

இது திருவரங்கத்தில் பாடப்பட்ட நூலா கும். அரங்கன் பெருமை 15 இடங்களில் இந்நூலில் வருகிறது. ஒவ்வொரு ஆழ் வார்களின் தனிச் சிறப்பை இந்நூலாசிரி யர் இரத்தினச் சுருக்கமாக ஒவ்வொரு சொல்லால் வெளியிடும் அருமை எல்லை கடந்ததாகும். 8–ஆம் பாசுரத்திலிருந்து 19–ஆம் பாசுரம் வரை பொய்கை ஆழ் வார் தொடங்கி நம்மாழ்வார் இறுதியாகப் பன்னிருவர் சிறப்பும் பேசப்படுகிறது. ஆழ் வார்களின் வரிசை முறை சிறிது மாறியும் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளது. நம் மாழ்வாரின் பெருமை முதற் பாசுரத் திலேயே இடம் பெற்றுள்ளது. திருவாய் மொழியின் பெருமையும் விளக்கப்படு கிறது. 2, 17, 88–ஆவது பாசுரங்களில் திருமங்கை ஆழ்வாரின் சிறப்பு இடம் பெற்றுள்ளது. மறைந்திருந்த திவ்வியப் பிரபந்தத்தை வெளியிட்டு ஸ்ரீவைணவ சம் பிரதாயத்தின் தலைசிறந்த ஆசிரியரான நாதமுனிகளும், அவர் திருப்பேரனார் யமுனைத் துறைவரும் வணங்கப்படுகின்ற னர். "அன்பால் இயம்பும் கலித்துறை அந்தாதி ஓதஇசை நெஞ்சமே" என்று சிறப்புப் பாயிரப் பாசுரத்தின் அடியால் இந்நூற் பாசுரங்கள் கட்டளைக்கலித்துறை யில் எழுதப்பட்டன என்பதையும் அறிய லாம்.

இவர் தமிழின் சிறப்பை, செந்தமிழ், தண்டமிழ், இன்தமிழ், ஈரத்தமிழ், வண் தமிழ், பசுந்தமிழ் என்ற சொற்களால் வெளியிடுகிறாரான படியால், தமிழின்பால் இவருக்குள்ள பெரும் மதிப்பு அளவிடற்

கரியது என அறியலாம். திருவாய் மொழிக்கு நறுமணமும் உண்டு என்ற நுண் கருத்தைத் "திருவாய் மொழியின் மணம் தரும் இன்னிசை" என்ற அடியால் குறிப்பிடுகிறார். இவருடைய எல்லை காணாத பெருமையை நன்கறிந்த மகான் ஸ்ரீவேதாந்த தேசிகன்.

..........................முன்
பூசுரர்கோன் திருவரங்கத் தமுதனார்உன்
பொன்னடிமேல் அந் தாதியாகப் போற்றிப்
பேசிய நற்கலித் துறைநூற்றெட்டுப் பாட்டும்
பிழையலவே எனக்கு அருள்செய் பேணிநீயே.

என்ற பாசுரப் பகுதியால் இனிது புகழ்த்து வெளியிட்டருளினர்.

**ஆழ்வார்களைப் பற்றிய புகழுரை:**

மறையின் குருத்தின் பொருளையும், செந்தமிழ் தன்னையும் கூட்டினவர் பொய்கையாழ்வார் என்றும்; ஞானமென்னும் நிறை விளக்கேற்றியவர் பூதத்தாழ்வார் என்றும்; தமிழ்த் தலைவன் பேயாழ்வார் என்றும்; பாரியலும் புகழ் பாண் பெருமாள் பாணநாதன் என்றும்; இடம் கொண்ட சீர்த்தியான் மழிசைவந்த சோதி என்றும்; பேராத சீர் அரங்கத்தய்யன் கழற்கணியும் பரன் தொண்டரடிப் பொடி என்றும்; கலைக்கவி பாடும் பெரியவர் குலசேகரன் என்றும்; பல்லாண்டென்று காப்பிடும் பான்மையன் பெரியாழ்வார் என்றும்: அரங்கர் மௌலி சூழ்கின்ற மாலையைச் சூடிக் கொடுத்தவள் ஆண்டாள் என்றும்; கண்ணமங்கை நின்றானைக் கலை பரவும் தனியானையைத் தண்டமிழ் செய்த நீலன் திருமங்கை ஆழ்வார் என்றும்; எய்தற்கு அரிய மறைகளை, ஆயிரம் இன் தமிழால் செய்தற்கு உலகில் வரும் சடகோபன் நம்மாழ்வார் என்றும் புகழ்ந்து பாடியுள்ளார்.

இத்தகைய ஆழ்வார்களைத் தன் ஆருயிராகக் கொண்டவர் தனக்கு ஆரமுதமான இராமாநுசனே என அருமையாகப் பாடும் அழகை நூலைப் பயின்றே அறியவேண்டும். இவருக்கு இராமாநுசரிடம் உள்ள ஈடுபாட்டைக் குறிக்கும் பொழுது,

"பொருந்திய தேசும் பொறையும் திறலும் புகழும் நல்ல
திருந்திய ஞானமும் செல்வமும் சேரும் செறுகலியால்
வருந்திய ஞாலத்தை வண்மையினால் வந்து எடுத்து அளித்த
அருந்தவன் எங்கள் இராமாநுசனை அடைபவர்க்கே"

என்ற 32–ஆம் பாசுரத்தால் குறிப்பிடுகிறார். இராமாநுசனாகிய காமதேனு, அருட்பால் நம்பால் சுரக்க வேண்டின், அமுதனார் என்ற இளங்கன்றை நினைப்போமாக!

"இனி என்குறை நமக்கு?
எம்பெருமானார் திருநாமத்தினால்
முனி தந்த நூற்றெட்டுச் சாவித்திரி
என்னும் நுண்பொருளைக்
கனி தந்த செஞ்சொற் கலித்துறை
அந்தாதி பாடித் தந்தான்
புனிதன் திரு அரங்கத்து
அமுதாகிய புண்ணியனே"

# தெய்விகத் தீங்கவிஞர்

(திரு. க. சுப்பிரமணியம். சென்னை)

முன்னுரை :

'பாட்டுக்கொரு புலவர்' ஆகிய பாரதியார், 'தேசீய கவிஞர்' என்றே அழைக்கப்படுகிறார். அவர் பாடல்கள் சிறந்து விளங்குவதற்குக் காரணம், தேசப்பற்று அப்பாடல்களின் உயிர்த் துடிப்பாக விளங்குவதேயாம் என்பார் பலர். ஆனால் தேசீய கவிஞர் பாரதியார், ஒரு பெருந் தெய்வீகத் தீங்கவிஞருமாவார் என்பதை எடுத்துக்காட்டுவதே, இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பாரதியார் தம் இளமைப் பருவத்தில் (1904 வரை)எட்டையபுரம் சமஸ்தானத்தில் பாடிய பாடல்கள். 1904-ஆம் ஆண்டு நவம்பர் 10-ஆம் நாள் மதுரையை விட்டுச் சென்னைக் கேகி, 1908 வரை பாடிய பாடல்கள், புதுச்சேரியில் (1908 முதல் 1918 வரை) பத்து ஆண்டுக்கால வாழ்வில் பாடிய பாடல்கள் எனும் முப்பெரும் காலப்பிரிவில் பாரதியாரின் இலக்கியப்பணி முழுமையடைந்தது எனலாம். எட்டையபுரம் வாழ்வில் அவர் பாடியவை தெய்வப் பாடல்களே!

எட்டையபுரம் சமஸ்தானப் புலவர்கள் பாரதியாரை அழைத்து அண்ணாமலை ரெட்டியாரைப் போல் காவடிச் சிந்து பாடவருமா? என்று வினவவும் பாரதியார்,

பச்சைத் திருமயில் வீரன்
அலங்காரன், கௌமாரன்—ஒளிர்
பன்னிருதிண்புயப் பாரன்,—அடி
பணி சுப்பிரமணியற் கருள்
அடிமைக்குயர் தமிழைத்தரு
பக்தர்கெளிய சிங்காரன்

எனும் காவடிச்சிந்தைப் பாடினர் என்று கூறுவர். சுப்பிரமணியம், சமஸ்தானப் புலவர்களால் 'பாரதி' என்றழைக்கப்பட்டுச் சிறப்புப் பெறுவதற்கும் அவர்தம் தெய்விகத் தீம் பாடல்களே காரணம் எனலாம்.

பாரதியார் புதுச்சேரியில் பத்தாண்டுகால வாழ்வில், முத்தான பாடல்களைச் சத்தான நடையில் இயற்றி நமக்குச் சொத்தாகத் தந்திருக்கிறார். ஈடு இணையற்ற கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு ஆகியவற்றைப் பாரதியார் புதுச்சேரியிலே எழுதினர். இம் முப்பெரும் பாடல்களும் தெய்விகத்தீம் பாடல்களே; தனி வாழ்க்கைத் துயரும் சூழ்நிலைப் பொருத்தமும் பாரதியாரின் உணர்ச்சிகளைக் கலைநலங் கனிந்த தமிழ்க் கவிதைகளாக உருப்பெறச் செய்தன.

தேசப் பற்றில் தெய்வப் பற்று :

1904 முதல் 1908 வரையிற் சென்னை வாழ்வில், புதுச்சேரியிலிருந்து திரும்பவும்சென்னை வந்து 1919 முதல் 1921 வரை, சென்னையில் வாழ்ந்த குறுகிய கால வாழ்விலும் தேசீய உணர்ச்சி மேலீட்டால் பாரதியார் பாடிய பாடல்களில் தேசப் பற்றுச் சிறந்து விளங்குகிறது என்பது யாவருமறிந்த ஒன்று. தேசப் பற்றுக்குச் சான்றாகும் இப்பாடல்களில் தெய்வப் பற்று இரண்டறக் கலந்து விளங்குவதையும் எடுத்துக்காட்ட இயலும்.

"பாரத நாடு" எனும் தலைப்பில் பாரத நாட்டைப் புகழும்போது, தெய்வ பக்தி கொண்டார். நல் அருளிலே உயர்நாடு என்று கூறிப் பெருமையடைகிறார். 'தமிழ்த் தாய்' தன்மக்களைப் புதிய சாத்திரம் வேண்டும் போது 'ஆதிசிவன் பெற்றுவிட்டான்' என்னை எனும் தமிழ்த்தாய் கூற்றாகக் கவிக் கூற்று வெளிப்படுகிறது. 'சுதந்திரப் பயிரைத் தண்ணீர் விட்டா வளர்த்தோம்? சர்வேசா! என்று இறைவனைப் பார்த்துக் குமுறுகிறது கவிஞரின் நெஞ்சம். தேசிய இயக்கப் பாடலில் முதலாவதாகக் காணப்படும் சத்திரபதி சிவாஜி பாடலில், சிவாஜி தன் சைனியத்திற்குக் கூறும்போது, "ஜயா! ஜய பவானி! ஜய பாரதம்" என்று, தெய்வத்தை முன்னும்

தேசத்தைப் பின்னும் வைத்து மதிப்பதில் கவிஞர் பூரிப்படைகிறார்.

பிறநாடுகள் எனும் தலைப்பில் மாஜினி சபதம் கூறும்பொழுதே 'பேரருட் கடவுள் திருவடிமீது ஆணை' என்றும், ருசியப் புரட்சி ஆகாவென்று எழுந்ததற்கு மாகாளி கடைக்கண் வைத்ததே காரணம் என்றும், கூறுவதன் வாயிலாகத்தன் தெய்வப்பற்றைக் கவிஞர் வெளிப்படுத்துகிறார்.

''மாகாளி பராசக்தி உருசியநாட்
டினிற்கடைக்கண் வைத்தாள் அங்கே
ஆகாஎன் றெழுந்ததுபார் யுகப்புரட்சி
கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்''

கவிஞரின் இதயம் :

பாரதியாரைப் பலர் கதைகள் சொல்லவும், கவிதைகள் எழுதவும், காவியம் பல நீண்ட கட்டவும், நாடகச் செய்யுளை மேவுமாறும் வேண்டினர். கவிஞரின் இதயம் இவற்றில் நாட்டம் செலுத்தவில்லை; அவர் நாட்டம்;

''இதயமோ எனிற் காலையும் மாலையும்
எந்த நேரமும் வாணியைக் கூவுங்கால்
எதையும் வேண்டிலது அன்னை பராசக்தி
இன்பம் ஒன்றினைப் பாடுதல் அன்றியே''

பாரதியார் 'விநாயகர் நான்மணிமாலை' என்னும் கவிதை நூல் ஒன்றும் இயற்றியுள்ளார். அதன்கண் அவர்தம் கவிதையுள்ளம் அழகுற இனியது வெளிப்படுகின்றது.

''செய்யுந்தொழில் உன் தொழிலே காண்
சீர்பெற்றிட நீ அருள் செய்வாய்''

''நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்
குழைத்தல்
இமைப் பொழுதுஞ் சோராதிருத்தல்—
உமக்கினிய
மைந்தன் கணநாதன் நங்குடியை
வாழ்விப்பான்
சிந்தையே! இம்மூன்றும் செய்''

''செய்யுங் கவிதை பராசக்தியாலே
செய்யப்படுங்காண்''

''பாட்டினிலே சொல்லுவதும் அவள்
சொல்லாகும்
பயனின்றி உரைப்பாளோ? பாராய்
நெஞ்சே!',

''இன்பமாகிவிட்டாய்—காளி—என்னுளே
புகுந்தாய்
பின்பு நின்னையல்லால்—காளி—பிறிது
நானும் உண்டோ?''

பாரதியார் எழுதிய தமது சுயசரிதையிலும், கவிஞரின் இதயம் தெய்வத்தையே நாடுகிறது.

''எழுதுகோல் தெய்வம்
இந்த எழுத்தும் தெய்வம்''

என்று பாடுகின்றார் பாரதியார். மற்றும் அவர் இயற்றியுள்ள பண்டாரப் பாட்டிலும், அவர் தம் இதயம் தெய்வத்தையே நினைக்கிறது.

''யாமும் தெய்வம் யதியும் தெய்வம்
பாலை வனமும் கடலும் தெய்வம்
ஏழு புவியும் தெய்வம், தெய்வம்
எங்கும் தெய்வம் எதுவும் தெய்வம்''

தெய்விகத் தீம்பாட்டு :

பாரதியார் தேசபக்தர் மட்டுமே அல்லர். தெய்வ பக்தியும் மிகக் கொண்டவர். ஆதலின் தேசபக்தியும் தெய்வ பக்தியும் பிரிவற இணைந்தே. அவர்தம் பாடல்கள் பலவும் இயற்றப் பெற்றிருத்தல் காணலாம். பாரத மாதா, பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி, பாரதமாதா நவரத்தினமாலை, பாரதமாதா திருத்தசாங்கம், சுதந்திரதேவி முதலிய கவிதைகள் இவ்வுண்மைக்குச் சான்று பகரும். பாரதியாரின் தெய்வபக்திக்குத் 'தோத்திரப் பாடல்கள்' அனைத்துமே நல்ல சான்றாகும்.

'குயில் பாட்டு' என்பது வெறும் கற்பனை போலத் தோன்றினாலும், வேதாந்தப்பொருள் நுட்பம் செறிந்தது. இதனைப் பாரதியாரே,

''ஆன்றே தமிழ்ப்புலவீர் கற்பனையே ஆனாலும்
வேதாந்த மாக விரித்துப் பொருள் உரைக்க
யாதேனும் சற்றே இடமிருந்தாற் கூறீரோ?''

எனப் பாடியிருத்தல் பற்றித் தெரியலாம். கண்ணன்—என் தோழன், என் தாய், என் தந்தை, என் சேவகன், என் அரசன், என் சீடன், என் சற்குரு, என் குழந்தை, என் விளையாட்டுப் பிள்ளை, என் காதலன், என் காந்தன். கண்ணம்மா—என் காதலி, கண்ணன்—என் ஆண்டான், கண்ணம்மா எனது குலதெய்வம் எனும் தலைப்பில் அமைந்த அத்தனை கவிதைகளும் தெய்விகத் தீம் பாடல்கள். கண்ணன்—என் காதலன் எனும் பகுதி பெரிதும் இனிமை பயப்பதாக அமைந்துள்ளது.

கண்ணன் பாட்டு —தெய்விகத் தீம்பாட்டு என்பதற்குக் கவிமணியும், புரட்சிக் கவிஞரும் சான்று பகர்வர்.

"கண்ணன் காதலன்—எனக்கொரு
களியமுதமடா! விண்ணமுதமும்
அதனைவெல்ல மாட்டாதடா

—கவிமணி

"கண்ணன் பாட்டுப்போல நவிலக்
கற்பனைக்குப் போவதெங்கே ?"

—பாரதிதாசன்

முடிவுரை :

பாரதியாரைத் 'தேசீய கவிஞர்' என்று நாமனைவரும் அழைக்கிறோம். ஆனால் பாரதியார், சக்திதாசன், காளிதாசன் எனும் பெயர்களைச் சூட்டிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்.

காலங்கடந்து விளங்கும் வலிமை, பாரதியாரின் தேசப்பற்று மிக்க பாடல்களிலும், தெய்வப்பற்று மிக்க பாடல்களுக்கே மிகுதி. எனவே பாரதியாரைத் தெய்விகத் தீங்கவிஞர் என்று போற்றுவது சாலச் சிறந்ததாகும்.

---

## செய்திச் சுருக்கம்

**பிரம்மோற்சவம் :**

1. திருவஹீந்திரபுரம் ஸ்ரீமங் நிகமாந்த மகாதேசிக சுவாமி (2—10—67 முதல் 14—10—67 முடிய)
2. கருவூர் தான்தோன்றி ஸ்ரீ கல்யாண வேங்கடரமண சுவாமி கோயில் (1—10—67 முதல் 19—10—67 முடிய)
3. திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதன் சந்நிதி ஸ்ரீமங் நிகமாந்த மகா தேசிகன் விழா (12—10—67 முதல் 22—10—67 முடிய)

திருக்குற்றாலம் ஐப்பசி விசுத் திருவிழா (8—10—67 முதல் 18—10—67 முடிய)
தேவக்கோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்க விழா.

**குருபூசை விழா :**

திருப்பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் திருமடம் ஆதீன கர்த்தர் தவத்திரு. ஆறுமுக சுவாமிகள் அவர்களின் குருபூசை விழா மிகவும் சிறப்புற நிகழ்ந்தது (27—9—67).

**புராணப் பிரசங்கம் :**

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப் பெற்ற நிதியின் உதவி கொண்டு மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் கயப்பாக்கம் சித்தாந்த வித்தகர் திரு. சோம சுந்தரன் செட்டியார் அவர்களாலும்; சிதம்பரத்தில் ஸ்ரீ சபாநாயகர் கோயிலில் சித்தாந்தப் புலவர் வித்துவான் திரு. கு. திருநாவுக்கரசு அவர்களாலும்; காஞ்சிபுரம் குமர கோட்டத்தில் சித்தாந்தக் கலைச் செல்வர் திரு. க. வச்சிரவேல் முதலியார், பி. ஏ., எல். டி. அவர்களாலும் 2—11—67 முதல் 7—11—67 முடிய கந்தபுராணச் சொற்பொழிவுகள் நடைபெறும்.

**வெள்ளிக் கவசம் :**

கஞ்சமலை ஸ்ரீ சித்தேசுவர சுவாமிக்குச் சேலம் செவ்வாய்ப்பேட்டை திரு. எம். ஏ. சுப்பிரமணிய ஆச்சாரி அவர்களால், வெள்ளிக் கவசம் செய்து சாத்துபடி செய்யப் பட்டது (17—9—67).